# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 14 திங்கட்கிழமை (28.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 214


# காங்கேசன் துறைமுக அபிவிருத்தி; இந்தியக் கடற்படைத் தளபதி ஆராய்வார்

## நீரியல் வள வரைவு செய்ய 'நிருபக்' கப்பல் வருகிறது

கொழும்பு,ஜூன்28

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜெனரல் நிர்மல் வர்மா, காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது குறித்து அங்கு நேரில் சென்று ஆராய்வார்.

காங்கேசன்துறை துறைமுகத்தை முதலில் திருத்தி அமைப்பது, அதன் பின்னர் அதனைப் புனரமைப்பது குறித்த சாதக பாதகங்களை இந்தியக் கடற்படைத் தளபதி கண்டறிவார்.

இதேவேளை, காங்கேசன்துறை துறைமுகத்தின் நீரியல் வளத்தைக் கண்டறிவதற்கான பணிகளை 'நிருபக்' கப்பல் நாளை மறுதினம் - ஜூன் 30ஆம் திகதி - ஆரம்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர் குழுவை வரவேற்கிறது பிரான்ஸ்

கொழும்பு,ஜூன் 28

ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பிலான நிபுணர்கள் குழுவுக்கு அமெரிக்கா, நோர்வே ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், பிரான்ஸும் வரவேற்புத் தெரிவித்துள்ளது.

பிரான்ஸின் வெளிவிவகாரக் கொள்கைகள் தொடர்பிலான உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழர்கள் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண இலங்கையை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்

## செம்மொழி மாநாட்டு நிறைவு நாளில் கருணாநிதி தீர்மானம்

கோவை,ஜூன் 28

இலங்கைத் தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும், உடனடியாகத் தீர்வு காண்பதற்கேற்ற முனைப்பான முயற்சிகளை மேற்கொள்ள இலங்கை அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் - என்று செம்மொழி மாநாட்டுத் தீர்மானத்தை முதல்வர் கருணாநிதி முன்வைத்தார்.

மேலும், இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ந்து துன்ப, துயரங்களுக்கு ஆளாகப்பட்டு வருகின்றனர் என்றும் இந்த விடயம் மாநாட்டில் திரண்டுள்ள லட்சோப லட்சம் உலகத் தமிழர்களுக்கு வேதனையைத் தருகிறது என்றும் முதல்வர் தெரிவித்தார்.

செம்மொழி மாநாட்டின் இறுதி நாளான நேற்று 6 கோரிக்கைகளை மாநாட்டுத் தீர்மானங்களாக முதல்வர் முன்வைத்தார். அந்த ஆறு தீர்மானங்களும் மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானங்களாக இருந்தன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## விரைவில் இந்தியா செல்கிறார் பஸில்

கொழும்பு,ஜூன்28

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வெகுவிரைவில் இந்தியாவிற்கு விஜயம் செய்ய உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்குக் கிழக்கில் இந்தியாவால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களைத் துரிதப்படுத்துமாறு கோரும் நோக்கில் அவர் டில்லி விஜயம் செய்யவுள்ளார்.

அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி.யில் புகலிடம் கோரும் இலங்கையர் நிலை: ஜூலை 8ஆம் திகதிக்கு முன் புதிய பிரதமர் முடிவு

மெல்பேர்ன்,ஜூன் 28

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் இலங்கை அகதிகள் தொடர்பாக ஜூலை 8ஆம் திகதிக்கு முன் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என ஆஸ்திரேலியாவில் புதிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் கெவின் ரூட் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகளின் புகலிடக் கோரிக்கையை ஜூலை மாதம் எட்டாம் திகதி வரை முடக்கி வைத்திருந்தார்.

ஆகவே, ஜூலை மாதம் எட்டாம் திகதிக்கு முன் இது தொடர்பில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என்று ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் நான் ஒரு முடிவில் உள்ளேன். ஜூலை 8 ஆம் திகதிக்கு முன்

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணச் சுற்றுலாவை முடித்துச் சென்ற 6 பேர் குருநாகலில் வான்-லொறி மோதலில் நேற்றுப் பலி!

கொழும்பு,ஜூன் 28

குருநாகலில் நேற்றுக்காலை இடம் பெற்ற வான் விபத்தில் ஆறு பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். பத்துப் பேர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் சுற்றுலாவை முடித்து விட்டு திரும்பிக்கொண்டிருந்த வான் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதாலேயே இவ்விபத்து நேற்று இடம்பெற்றது என்று குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பிரணாப் முகர்ஜி, சிதம்பரம் இறுதிநாள் நிகழ்வுகளில்

### செம்மொழி மாநாடு நேற்றுடன் பூர்த்தி

கோவை,ஜூன்28

தமிழ்நாடு கோவை மாநகரில் நான்கு நாள்களாக மிகக் கோலாகலமாக நடைபெற்று வந்த உலக செம்மொழி மாநாடு நேற்று நிறைவு பெற்றது.

இந்திய மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் ஆகியோர் நிறைவுகாண் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மாநாட்டை சிறப்பித்தனர்.

கோவை மாநகரில் கடந்த ஐந்து தினங்களாக நடைபெற்று வந்த உலக செம்மொழி

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி. பிளஸ். வரிச்சலுகை எதிர்வரும் ஓகஸ்ட் 15இல் நிறுத்தம்

கொழும்பு,ஜூன்28

இலங்கைக்கு இதுவரை வழங்கப்பட்டுவந்த 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச் சலுகையை ஓகஸ்ட் 15ஆம் திகதி முதல் நிறுத்துவது என ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது என கொழும்பிலுள்ள அதன் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு மேலதிக கால நீடிப்பு வழங்கப்படமாட்டாது. இலங்கை சர்வதேச

(24ஆம் பக்கம் பார்க்க)


16-07-2010 அன்று Colombo BMICH இல் நடைபெறவுள்ள 8வது சர்வதேச பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு....

NORTH LANKA IIT

பெருமையுடன் வழங்கும்

விசேட புலமைப் பரிசில் திட்டம்-2010

விசேட புதிய பரிவு ஆரம்பம்!

ரூபா 25000 முதல் 75000 வரை

Offer !!! Offer !!!

விண்ணப்பித்துவிட்டீர்களா?

மேலதிக விபரங்கள்:- 27-06-2010 உதயன் பத்திரிகையில்

#113, Laxan Plaza, Navalar Road, Jaffna.

Phone: 0213214305 , 0217390110



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காணி வீடு விற்பனைக்கு

பிறவுண் வீதியில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்பாக, 8 பரப்புக் காணியும், கந்தர் மடம் சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் அரசடி வீதி ஒழுங்கையில் 2 ½ பரப்புடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தரகர் அவசியமில்லை.

தொடர்பு: 0212224107, 0772208282


## யாழ். வலய அதிபர்களுக்கு இன்று கூட்டம்

யாழ். கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் தின விழாவில் வீதியோட்டம், சைக்கிள் ஓட்டம் என்பவற்றில் பங்குபற்றிய மாணவர்களின் பெயர் விவரங்களை எடுத்து வருமாறும், வினாடி-வினா, பதாகை, சித்திரப் போட்டிகளில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பணப் பரிசில்களும் இந்தக்கூட்டத்தில் வழங்கப்படவுள்ளன என்றும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-6)


## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
## நாகேஸ்வரம் - அளவெட்டி
## மணவாளக் கோல விழா

மேற்படி விழா நாளை (29.06.2010) செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மு.ப. 10 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும் தொடர்ந்து எம்பெருமான் கைலாய வாகனத்தில் வீதி வலம் வரும்காட்சியும் இடம்பெறும். அன்பர்கள் இவ்விழாவிலும் தொடர்ந்து நடைபெறும் அன்னதான நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுப்பணிச்சபை
(பொ.ப.சபை).

(100002)


## பிரணாப் முகர்ஜி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தமிழ் மொழியின் அருமை பெருமைகளை அறிந்துகொண்டனர்.

உலகச் செம்மொழி மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக சர்வதேச நாடுகளிலிருந்து நான்காயிரத்துக்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள், தமிழைக் கற்றுப் புலமை பெற்ற வெளிநாட்டவர்கள் ஆகியோரும் கோவை நகரில் கூடினர்.

கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு புதன்கிழமை காலை கோலாகலமாக ஆரம்பமாகியது. மாநாட்டைக் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் ஆரம்பித்து வைத்தார். மாநாட்டுக்கு முதல்வர் மு.கருணாநிதி தலைமை வகித்தார். முதல்நாள் மாலை நடைபெற்ற பிரமாண்டமான பேரணியில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

2ஆவது நாளில் ஆய்வரங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் வெளிநாட்டுத் தமிழறிஞர்கள் கா.சிவத்தம்பி (இலங்கை), ஜோர்ஜ் ஹார்ட் (அமெரிக்கா), அஸ்கோ பர்ப்போலா (பின்லாந்து), அலெக்சாண்டர் துபியான்ஸ்கி (ரஷ்யா), உல்ரிக் நிக்லர்ஸ் (ஜேர்மனி) உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

3ஆம் நாள் நடைபெற்ற 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்னும் கருத்தரங்கில் அரசியல் கட்சித் தலைவர்கள் கே.வீ. தங்கபாலு (காங்கிரஸ்), சீதாராம் யெச்சூரி (மார்க்சிஸ்ட்), டி. ராஜா (இந்தியக் கம்யூனிஸ்ட்), இல. கணேசன் (பா.ஜ.க.), தொல். திருமாவளவன் (விடுதலை சிறுத்தைகள்), கி.வீரமணி (திராவிடர் கழகம்), இராம. வீரப்பன் (எம்.ஜி.ஆர். கழகம்), காதர் மொகிதீன் (இந்திய யூனியன் முஸ்லிம் லீக்) உட்படப் பலர் பங்கேற்றனர்.

நேற்றைய நிகழ்ச்சிகளில் காலை 10 மணிக்கு 'வித்தாக விளங்கும் மொழி' என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. பேராசிரியர் சுப. வீரபாண்டியன் தொடக்கி வைத்தார். நடிகர் சிவகுமாரின் சொற்பொழிவும் இடம்பெற்றது.

மாலை 4 மணிக்கு நிறைவு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மத்திய தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் ஆ.ராசா செம்மொழி மாநாட்டு சிறப்பு தபால் முத்திரையை வெளியிட்டார். மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமை வகித்தார். உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் முன்னிலை வகித்தார். சிறந்த தமிழ் மென்பொருளை உருவாக்கியவர்களுக்கு கணியன் பூங்குன்றனார் விருதை வழங்கினார். முதல்வர் கருணாநிதி நிறைவுரை ஆற்றினார்.

(அ-சி)


## 190ஆம் கட்டை நுணாவில் மேற்கு காளியாமூலை
## அருள்மிகு பேச்சி அம்மன்
## 12ஆம் நாள் சங்காபிஷேக விஞ்ஞாபனம் 2010

அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம் வைகாசி மாதம் 14ஆம் நாள் இன்று (28.06.2010) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று மதியம் அன்னதானம் வழங்கப்படும்.

தொடர்ந்து இரவு நிகழ்ச்சியாக

இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் சிறப்புத் தவில் வித்துவான்
கலைமாமணி, கோவிலூர்
K.G.கல்யாணசுந்தரமும்
உலகப் புகழ் ஈழ நல்லூர்
P.S.பாலமுருகனும் குழுவினரும்
(நாதஸ்வர கான வினோதன் - நாதஸ்வர வித்துவான்)
இணைந்து வழங்கும் நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும்.

அடியார்கள் வருகை தந்து அம்பிகையின் அருளைப் பெறுவீர்களாக.

(99996)

12ஆம் திருவிழா உபயகாரர்.



## சிவாச்சாரியார் தேவை

டென்மார்க் நாட்டிலே கோர்ணிங் என்னும் நகரிலே அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திற்கு ஒரு சிவாச்சாரியார் தேவையாகவுள்ளார். தங்குமிடவசதி உட்பட அனைத்தும் செய்து தரப்படும். சம்பளம் போன்ற விவரங்கள் விண்ணப்பத்தின்போது பேசித் தீர்த்துக் கொள்ளப்படும். முறையாகக் குருகுலத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கும், ஏற்கனவே உற்சவங்கள் நிகழ்த்திய அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு: 24.06.2010 இல் இருந்து 24.07.2010 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டி முகவரி:
Hindu Cultural Research & Information Center
Post-box-317
7400 Heming, Denmark
மின்னஞ்சல்: pillayar@hotmail.com
தொலைபேசி இல: 0045 97701498 அல்லது 0045 28639304



## உலகப் பெருமஞ்சத்திருவிழா

அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயிலில் இன்று மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம் பெற்று இரவு 8மணிக்கு பல்லாயிரக்கணக்கான மின்சாரத்தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்சத்தில் முருகப் பெருமான் வீதிவலம் வருவார்

விழா சிறப்புற வாழ்த்துவோர்.



உங்களுக்காக உங்கள் மக்கள் வங்கியிடமிருந்து...

- 49வது ஆண்டு நிறைவை யொட்டி ஆடம்பர சொகுசு வீடு
- தங்க நாணயம் (லொத்தர் முறையில்)
- 24 மணிநேர ATM சேவை.
- துரிதகதியில் வெஸ்டேன் யூனியன் பணப்பரிமாற்றம்.
- இலத்திரனியில் பணப் பரிமாற்றம் மேலும் பற்பல.....

"மக்கள் மனதறிந்த வங்கி"

மக்கள் வங்கி சுன்னாகம்.



Remo
Digital Video & Photo
K.K.S Road Inuvil.
T.P: 077 6021089



K.K. PHONE SERVICE
No. 01, 1st Floor,
New Market,
Jaffna.
T.P: 021 222 8370
0777 571915
0773 571915
Fax: 021 222 8370
E.m: nsk.kumaran@gmail.com
Dialog TELEKOM
Softlogic Authorised Distributor NOKIA


## கண்ணீர் அஞ்சலி

### சிவக்கொழுந்து காசிநாதன்

கொக்குவில், மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்னாள் வழிபாடு வேஸ்சபைத் தலைவரும்மேற்படி ஆலய நிர்வாக சீர் அமைப்புக்கு உறு துணையாக இருந்த அமரர் சிவக்கொழுந்து காசிநாதன் அவர்களின் ஆத்மா கொக்குவில் மஞ்சவனப் பதி முருகன் திருவடிகளில் நிலையான சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மஞ்சவனப்பதி அன்பர்கள்

(க/568726)

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் வடிவேலு

தாவடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிட மாகவும் கொண்ட வைத்திலிங்கம் வடிவேலு 27.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் பாக்கியத்தின் சகோதரனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சகுந்தலா தேவி, இரத்தினபூபதி, தவச்செல்வம், திருச்செல்வம், சாவித்திரிதேவி, வசந்தராணி, விஜயரட்ணம் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமுதலிங்கம் (சுவிஸ்), திருமகள், நடன தேவி, சிவனேஸ்வரன், கிரிராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஷாந்தன், அனந்தன், சஞ்சீவன், தரிசிகன், லஜீவன், லக்ஷனா, திலக்ஷன், அக்ஷயன், சாரங்கா, சிந்துஜா, தர்சிகா, சிவதர்சன், சிவரஞ்சன், வினோதினி, அடஸ்ராஜா, அத்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2010) திங்கட்கிழமை மதியம் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (சி/568728) குடும்பத்தினர். 0776701447

### குமாரசாமி இளங்கோ

(முகாமைத்துவ உதவியாளர், வடமாகாண சுகாதார அமைச்சு)

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி, கொன்னாவெளியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும், திருகோணமலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி இளங்கோ 26.06.2010 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நவரத்தினம் குமாரசாமி - புவனராணி தம்பதியரின் அன்பு மகனும், வாசுகி (ஆசிரியை, கிளிநொச்சி மகா வித்தியாலயம்), திருமகள், வேணுகோ, அமரர் நந்தகோபன் ஆகியோரின் சகோதரனும், சுகந்தனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பவித்திரா மலர்ச்சாலை கண்டி றோட், தேக்கவத்தை, வவுனியா என்னும் இடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (28.06.2010) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:

வவுனியா. (100003) குடும்பத்தினர்.

### செல்வி கனகரத்தினம் பத்மினிமாலா

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கனகரத்தினம் பத்மினிமாலா 26.06.2010 சனிக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும், சகுந்தலா, திருமாறன், சோதிமாறன், கிருஸ்ணமாலா, அருள்மாறன், விஜயபாரதி, தமிழ்மாறன், நளாயினி, மணிமாறன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற தெய்வேந்திரராசா மற்றும் மார்க்கண்டு, முரளிகரன் புஸ்பகாந்தி, வசந்தகுமாரி, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2010) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அரியாலையூர் தவில் வித்துவான்
'கலைஞானச்சுடர்','தவில் நாத இசைமணி
லயஞானபூபதி

### அமரர் தம்பிராசா கனகசபாபதி (சுந்தரலிங்கம்)

கடந்த 10.05.2010 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிரித்திய நிகழ்வு இன்று (28.06.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இத்துடன் அன்னாரின் மரணச் செய்தி அறிந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் எல்லா வகையிலும் உதவி புரிந்த வர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
353, A.V. றோட், குடும்பத்தினர்.
அரியாலை (100008)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## உண்மை ஒரு நாள் வெளிப்படும்

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன், இலங்கை விவகாரம் குறித்துத் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கென நிபுணர் குழு ஒன்றை நியமித்திருப்பது இந்த நாட்டு அரசாங்கத்துக்குப் பெரும் கடுப்பை உண்டாக்கி உள்ளது.

நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருப்பதற்கு இலங்கை அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஆரம்பத்தில் விளாசி இருந்தார்.

இலங்கை இறையாண்மை மிக்க நாடு. நிறைவேற்று அதிகாரம் உள்ள நாடு. ஐ.நா. நிபுணர் குழு ஒரு தேவையற்ற விடயம் என்று தமது மட்டத்துக்குள் நின்று கண்டித்திருக்கிறார் அவர். உறுப்பு நாடு ஒன்றின் விடயத்தில் ஐ.நா. செயலர் தலையிட்டிருப்பது எந்த வகையிலும் ஒவ்வாதது என்றும் கருத்துச் சொல்லியிருக்கிறார் அமைச்சர் ரம்புக்வெல.

ரம்புக்வெல கருதிய நடவடிக்கையை, அரசு மேற் கொண்டுவிட்ட தகவலை அதன் தரப்பில் அறிவித்தார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். ஐ.நா நிபுணர் குழு இலங்கைக்குள் வருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கமாட்டாது என்பது அந்தத் தகவல்; அறிவிப்பு.

அரசாங்கம் - ஜனாதிபதி - ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்து விட்டதால் ஐ.நா. நிபுணர் குழு அவசியமற்ற ஏற்பாடு என்பது அரசாங்கத்தின் வாதம்; நிலைப்பாடும் அதுவே.

தாமும், சட்டமா அதிபரும் பான் கீ - மூனைச் சந்தித்து ஐ.நா நிபுணர் குழு தேவையற்றது என்று பான் கீ - மூனிடமும், இலங்கை வந்திருந்த ஐ.நா வின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் லியன் பாஸ்கோவிடம் எதிர்ப்பைத் தெரிவித்தோம் - என்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

தற்போது நியமிக்கப்பட்டுள்ளது நிபுணர் குழுவே. விசாரணைக்குழு அல்ல என்று ஐ.நா சபை கூறினாலும் அது இலங்கை நல்லிணக்க விசாரணைக்குழுவின் பணிகளைக் குழப்பும் என்றும் அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்.

தமது இந்தத் தடுப்பு மறிப்புகள் எல்லாம் கைகூடாது என்று உணர்ந்து கொண்டஇலங்கை அரசு, தனக்குச் சார்பு நிலையிலுள்ள ரஷ்யா, சீனா மற்றும் அணி சேரா நாடுகள் இயக்கம் ஆகியவற்றிடம் கூறி நிபுணர் குழு நியமனத்தை கண்டிக்கச் செய்ய முனைந்துள்ளமை புலப்படுகின்றது.

ஆயினும், அமெரிக்கா,நோர்வே ஆகிய நாடுகள் ஐ.நா. நிபுணர்குழு நியமனத்தை ஆதரிக்கின்றன. இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக் காலத்தில் என்ன என்ன, எப்படி எப்படி நடைபெற்றன என்பதை ஐ.நா நிபுணர் குழு வெளிச்சத்துக்குக் கொண்டுவரும். அதா வது போரில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரும் என்னென்ன குற்றங்களை இழைத்தனர், மக்களின் மனித உரிமைகளை எந்த மட்டத்துக்கு மீறின, மனிதாபிமானத்தை எந்தளவுக்கு குழிதோண்டிப் புதைத்தன என்ற உண்மைகளை வெளிப்படுத்தும் என்று அவை நம்புகின்றன. அது மிகவும் அவசியம் என்றும் உலகலாவிய ரீதியில் அது பிரசித்தப்படவேண்டியது அவசியம் என்றும் அவை கூறுகின்றன.

இதற்கிடையில், ஐ.நா நிபுணர் குழு விசாரணை நடத்துவதை இலங்கை அரசு விரும்பவில்லை எனில், ஐக்கிய நாடுகள் சபை மட்டத்திலேயே தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, பரந்த அதிகாரங்கள் உள்ள அசல் ஐ.நா விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமிக்க சம்பந்தப்பட்ட தரப்புகள் உத்தேசித்திருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

அப்படி ஒரு மாற்றம் ஏற்பட்டு, இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களை விசாரிக்க ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானப் பிரகாரம் விசேட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டால், பலர் அதன் முன் சாட்சியம் அளிக்க அழைக்கப்பட்டு அவர் கள் அதனை ஏற்றுத் தமக்குத் தெரிந்தவற்றை அவிழ்த்து விட்டால், இலங்கை அரசின் கீர்த்தி என்னாகும்?

ஏன்?....

நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சரும் விடுதலைப் புலிகள் - அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களின் அனுசரணையாளருமான எரிக் சொல்ஹெய்ம், ஐ.நா ஆணைக் குழுவின் முன் தமக்குத் தெரிந்த விவரங்களை சாட்சியமாக எடுத்துக் கூறினால் நிலைமை இப்போதுள் ளதை விட மேலும் இறுக்கமாகிவிடுமே...!

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் - மே 17 ஆம் திகதி - நடேசன், புலித்தேவன் மற்றும் விடுதலைப் புலித்தலைவர்கள் இலங்கை அரசிடம் சரணடைய உதவுமாறு தம்மிடம் கேட்டதாகவும் -

வெள்ளைக் கொடியுடன் சென்று சரண் அடையுங்கள் என்று தாம் அவர்களிடம் கூறியதாகவும், அவர்கள் சரணடைய விரும்புவது குறித்து அரசாங்கத்தரப்புக்கு முன்னரே அறிவித்துவிட்டதாகவும் - அடித்துக் சொல்கிறார் அவர்.

இந்த விடயத்தின் எங்கெல்லாமோ சுற்றித் திரிந்து "சுப்பரின் கொல்லைக்குள்" போனாலும் சொல்ஹெய்ம் போன்ற சர்வதேச ராஜதந்திரி ஒருவரின் சாட்சியமே - உறுதிப்படுத்தலே போதுமானதாகிவிடக்கூடும்....!

எந்த விவகாரத்திலும் நன்மை தீமைகளை, சரி பிழைகளை சீர்தூக்கிப் பார்த்து நிதானமாகச் சிந்தித்து செயற்பட்டாலே உரிய பலன் தரும். ஏற்கனவே மேற்கொண்ட முடிவை அல்லது தீர்மானத்தை நிலை நிறுத்த முயல்வது கெட்டித்தனம் என்று நினைப்பது, பாதகமான விளைவுகளையே தரும்.

உண்மை, ஏதோ ஒரு நாள் தானாகவே வெளிவரும் என்பது பொது மொழி. பொறுத்திருந்து பார்க்க வேண்டியதுதான்....

# நிபுணர் குழு நியமனம்:போர்க்குற்ற விசாரணை நடப்பதற்கு முன்னோடி

**நேற்று 27.06.2010 அன்று 'சண்டேரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி இது**

* ஐ.நா நிபுணர் குழு அமைப்பு: போர்க்குற்ற விசாரணைகள் நடப்பது நிச்சயம்.
* அமெரிக்க ஆலோசனையும் வேண்டாம் ஐரோப்பிய நிபந்தனையும் வேண்டாம்.
* நிபுணர் குழு மூலம் ஆலோசனை பெறுவது ஐ.நா. செயலரின் உரிமை

சர்வதேச மட்டத்தில் தனக்கு எதிராக வெளிப்பட்ட இரண்டு பிரதான பிரச்சினைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ராஜதந்திர வழிகளில் முயற்சிகள் மேற் கொண்டு வந்த இலங்கை அரசு அவை இரண்டிலும் தோல்வியைத் தழுவிக் கொண்டுள்ளது.

ஒன்று என்னவென்றால், இலங்கையின் போர் நடவடிக்கைகளில் பொறுப்புக் கூறும் தன்மை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கான ஆயம் ஒன்றை நியமிப்பதற்கு ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர் குழுவொன்றை நியமிக்கும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்த முயன்று அதில் தோல்வி கண்டமை.

மற்றது, இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு தொடர்ந்தும் ஜி.எஸ்.பி சலுகைகளை ஐரோப்பிய ஒன்றியத் திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான முயற்சியில் ஏற்பட்டுள்ள தோல்வி. இவை இரண்டும் அண்மைக் காலத்தில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் மிகவும் முக்கியத்துவம் பெற்றவையாக இருந்துள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஐ.நா தலைமையகம், இலங்கை விடயம் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை கூறுவதற்கான மூன்றுபேர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளதாக அறிவித்தது.

நான்குமாத காலத்துக்குள் இந்த நிபுணர் குழுவானது தனது அறிக்கையை ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு வழங்கியாக வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்றுள்ளதாகக் குற்றஞ் சாட்டப்படும் மனித உரிமை மீறல்களின் தன்மை, நோக்கம் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு அவைகளுக்கு பொறுப்புக் கூறும் நடைமுறைகள் தொடர்பாக ஒப்பீட்டு முறையிலான அனுபவம், செயல்படுத்தக் கூடிய சர்வதேசதரங்கள், மற்றும் மாதிரிகள் குறித்து இந்த நிபுணர்கள் குழுவானது செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை கூறும்.

போரின் இறுதிக் காலத்தில் இடம் பெற்றிருக்கக் கூடிய மீறல்கள் தொடர்பாக விசாரணைகள் நடக்கத் தான் போகின்றன என்பதற்கான முன் அறிவித்தலே இது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

இந்த அறிவித்தலில் பயன்படுத் தப்பட்டிருக்கும் "...மீறல் குற்றச் சாட்டுக்களின் தன்மை மற்றும் நோக்கம்" என்ற பிரயோகமானது ஒரு முக்கிய விடயத்தை சுட்டுகின்றது.

அரசாங்கம் என்னதான் பலமாக மறுத்து வந்த போதிலும் "குற்றஞ் சாட்டப்பட்டுள்ள மீறல்கள்..." தொடர்பாக அவசியம் ஆராயப்பட வேண்டும் என்பதில் ஐ.நா. தீர்க்கமாக இருக்கிறது என்பதை இது காட்டுகின்றது.

எனவே பொறுப்புக் கூறும் பொறிமுறையினை அமைப்பதற்கு ஐ.நா. செயலாளர் எவ்வாறு நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பதற்கான ஆலோசனை வழங்குவதே நிபுணர் குழுவின் கடமையாக இருக்கப் போகின்றது. அதுவும் நான்கு மாத கால அவகாசத்துக்குள்.

இந்த நிபுணர் குழுவின் அமெரிக்காவின் பேராசிரியர் ஸ்டீவன் ஆர்.ரட்னர் நியமனம் பெற்றிருப்பது முக்கியத்துவம் பெறுகின்றது. கடந்த வருடம் மே மாதம் முடிவடைந்த போரின் இறுதிக் கட்ட நிகழ்வுகள் தொடர்பான வரிசைக்கிரமமான பல பொறுப்புக் கூறும் பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்க நீதித்துறை ஆராய்ந்து வருவதே இந்த முக்கியத்துவத்துக்குக் காரணம்.

கடந்த மார்ச் மாதம் அணி சேரா நாடுகள் ஐ.நா. செயலருக்கு எழுதிய கடிதத்தில் நிபுணர்கள் குழு அமைப்பதைத் தொடர வேண்டாம் என்று கேட்டிருந்தன. இலங்கையை தோற்தெடுத்து குறிவைப்பதாக அவ்வமைப்பு ஐ.நா. செயலாளர் நாயகத்தைக் குற்றஞ் சாட்டியிருந்தது.

செயலாளர் நாயகம் பல வாரங்கள் சர்வதேச நெருக்குதல்களுக்கு மத்தியில் தாமதித்துவிட்டு இப்போது குழுவை அழைத்திருப்பதானது கவனமாக ஆராய்ந்ததன் பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. மூன்று உறுப்பினர்களில் இருவர் இந்தோனேஷியாவையும் தென்னாபிரிக்காவையும் சேர்ந்தவர்கள். இவை இரண்டும் அணி சேரா நாடுகளின் உறுப்பு நாடுகள்.வெவ்வேறு சமயங்களில் தலைமைப் பொறுப்பையும் அலங்கரித்துள்ளன.

## சர்வதேச விடயங்களில் அரசுக்கு ஏற்பட்டுள்ள இரட்டைத் தோல்வி

### ஜனாதிபதியின் குழுவுக்கு மறைமுகமான செய்தி

இந்த நிபுணர் குழு நியமனமானது ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள படித்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவுக்கும் ஒரு மறைமுக செய்தியை வழங்கியுள்ளது.

இந்த ஆணைக்குழு விசாரிக்கப் போகும் நோக்கம் அல்லது அம்சங்களை இந்த நிபுணர் குழு கண்காணிக்கப் போகின்றது.

இந்தக் குழுவின் நிபுணத்துவ உதவிகள், வளங்கள் தேவையெனில் இலங்கை அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் ஐ.நா.கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

ஆனால் ஐ.நா. குழுவின் ஆலோசனைகள் தமக்குத் தேவையில்லை யென இலங்கை ஏற்கனவே மறுத்துரைத்துவிட்டது. முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.சில்வா தலைமையிலான ஆணைக்குழு அதற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் வரை முறைகளுக்கமைவாக அதன் விசாரணைகளை நடத்தவிருக்கின்றது.

நிபுணர் குழுவை அமைக்கும் பான் - கீ மூனின் தீர்மானத்தை ஆதரித்த முதல் நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று.

இலங்கையில் போர் முடிவுற்ற நிலையில் தேசிய நல்லிணக்கத்துக்குத் தேவையான நீடித்த அடித்தளத்தை ஏற்படுத்த இந்தப் பொறுப்புக் கூறும் பலமான இந்தச் செயற்பாட்டினை அமெரிக்கா ஆதரிக்கின்றது என்று அமெரிக்காவின் ஐ.நா. தூதர் சூசான் ஈ றைஸ் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் நிலைப்பாடு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் பல்துறை விவகாரங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சிறப்பு உதவியாளர் சமாந்தா பவர் ஜனாதிபதி மஹிந்தாவைச் சந்தித்த போது கடந்த வாரம் விளக்கப் பட்டது. ஒபாமாவின் நிலைப்பாடு தொடர்பான இலங்கை அரசின் சிந்தனை பற்றி பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் தெரிவிக்கப் பட்டன. "அமெரிக்காவைப் பற்றிய எமது வெளிப்படையான எண்ணம் பற்றி அறிய விரும்புகிறீர்களா?" என்று அமைச்சர் பஸில் பவர் அம்மையாரிடம் கேட்டார். அவர் ஆம் என்று தலையசைத்தார்.

"இலங்கையைப் பற்றி அமெரிக்கா சிறிது பொறாமை கொண்டுள்ளது. நாம் ஒரு சிறு நாட்டினர். ஆனால் அமெரிக்காவால் முடியாததொன்றை நாம் சாதித்திருக்கின்றோம்." என்றார். பஸில்

புலிப் போராளிகளை தாங்கள் தோற்கடித்துவிட்டதையும் இன்னமும் ஈராக்கிலும் ஆப்கானிஸ் தானிலும் போராளிகளை இன்னமும் அடக்க முடியாமல் அமெரிக்கா இருப்பதையும் அவர் இணைத்துக் காட்டினார். இலங்கை அதன் பொருளாதாரத்தை சமாளித்து வருகிறது என்றும் கூறினார் அவர். "அப்படி நினைக்காதீர்கள், எங்களுக்கு உதவி செய்யுங்கள். ஜனாதிபதி புஷ் பயங் கரவாதம் பற்றிப் பேசியிருந்தார்..." என்றார் பசில்.

ஒபாமா நிர்வாகம் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பித்திருப்பதாக பவர் அம்மையார் தெரிவித்தார். இந்த விடயங்கள் தொடர்பாக புஷ் நிர்வாகத்தின் கருத்துக்களை தாங்கள் ஆதரிக்கவில்லையென்றும் கூறினார்.

ஐ.நா செயலாளர் நாயகத்தின் அறிவிப்பு இலங்கை அரசு வட்டாரங்களில் பலத்த எதிர்ப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. பல்வேறு கருத்துக்கள் கூறப்பட் டாலும் அவை அனைத்துமே அரசாங்கக்கருத்துக்களாகவே கொள்ளப்பட முடியாது. வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகையில் உதவி செயலாளர் நாயகம் இலங்கை வந்திருந்தபோது நிலைமையை அவரிடம் எடுத்துக் கூறினோம். இதன் விளைவுகள் "மிகவும் துர்ப்பாக்கியமாக இருக்கப் போகிறது" என்று லின் பாஸ்கோவிடம் நாம் கூறினோம்" என்றார்.

நிபுணர் குழு உறுப்பினர்கள் இலங்கைக்கு வர விரும்பினால் அவர்களுக்கு விசா வழங்கப்படமாட்டாது என்று அமைச்சர் பீரிஸும் ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெலவும் கூறியுள்ளார்கள்.

அரசாங்கம் செய்திருக்கக் கூடிய தான மனித உரிமை மீறல்களை பட்டியலிடும்படியும் கெஹலிய ரம்புக் வெல ஐ.நா.வைக் கேட்டுக் கொண்டார்.

உறுப்பு நாடொன்றின் விருப்பத்துக்கு மாறாக நடந்து கொள்வது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை செய்தார்.

ஐ.நா வின் முன்னாள் இந்திய தூது வரும் பான் - கீ மூனின் பிரதம அலுவலருமான விஜே நம்பியார் மீது அரசு நடத்தும் சுதந்திர தொலைக் காட்சி வலையமைப்பு கடும் குற்றச் சாட்டு ஒன்றை சுமத்தியுள்ளது. இந்தக் குற்றச் சாட்டு நேரடியாக அவர் மீது சுமத்தப் பட்டதா இல்லையா என்பது விளங்க வில்லை,

கடந்த செவ்வாய்க்கிழமை ஐ.நா. பேச்சாளர் மார்ட்டின் நெசேர்க்கி நியுயோர்க்கில் செய்தியாளர் மாநாடொன்றில் பேசுகையில், இந்தப் பணியை ஓர் ஆலோசனைக் குழுவின் மூலம் மேற் கொள்வதற்கு ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு எல்லாவித அதிகாரமும் இருக்கிறது என்றார். இலங்கைக்கு நேரடியாகச் செல்ல வேண்டும் என்ற குறிப்பிட்ட தேவை ஏதும் இல்லை. அல்லது அவர்கள் சம்மதிக்காத நிலையில் அங்கு இலங்கை அதிகாரிகளுடன் களத்தில் செயல்பட வேண்டியதும் இல்லை என்றார்.

### ஐரோப்பிய ஒன்றிய நிபந்தனைகள்

ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள 15 அம்ச நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தக சலுகை நீடிக்கப்படமாட்டாது என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் வலியுறுத்தலானது இலங்கை அரசாங்கம் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்ட காயம் ஆகும். மௌனமாக ராஜதந்திர முறையில் அணுக வேண்டிய விசயத்துக்கு இருந்த சிறு அவகாசத்தையும் அது தொலைத்து விட்டிருக்கிறது. (ப)

### நாளை

| | |
|---|---|
| ஆனி 15 | 29.06.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி | : திருதியை மு.இ. 09.35 வரை |
| நட்சத்திரம் | : திருவோணம் பி.இ. 05.00 வரை |
| சுபநேரம் | : 10.26 - 11.56 |
| ராகுகாலம் | : 02.56 - 04.26 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதிகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கையை விரைந்து எடுக்குக!

## பாக். அரசுக்கு அமெ. ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்து

வாஷிங்ரன்,ஜூன் 28

தீவிரவாதிகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கும் அரசாக பாகிஸ்தான் அரசு திகழ்வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்தியுள்ளார். தற்போது பாகிஸ்தான் அரசு அமெரிக்காவுடன் இணைந்து பயங்கரவாத முகாம்களை ஒழிப்பதில் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அல்-குவைதா முகாம்கள், அல்-குவைதா தீவிரவாதிகளுக்குள்ள சர்வதேச தொடர்புகள் ஆகிய அனைத்தையும் முற்றிலும் அழிக்கவேண்டும் என்பதே அமெரிக்காவின் நோக்கமாகும். இந்த இலக்கை எட்டுவதற்காகத்தான் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் உள்ளன.

இப்பிராந்தியத்தில் நடைபெற்ற போரில் ஏறக்குறைய 3 ஆயிரம் அமெரிக்க சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர். இது மேலும் தொடரக்கூடாது என்பதற்காகத்தான் அல்-குவைதா, தலிபான்களை முற்றிலும் அழிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த இலக்கை எட்டவேண்டுமெனில் ஆப்கனில் ஸ்திரமான அரசு அமைய வேண்டும். அதை நிறைவேற்றும் நடவடிக்கையில்தான் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அமெரிக்காவின் முயற்சிகளுக்கு முழு ஆதரவு அளித்து அதை நிறைவேற்றும் அரசாக பாகிஸ்தான் செயற்பட்டு வருகிறது.

ஆப்கானிஸ்தானில் நிலவும் நிலை குறித்து மாதந்தோறும் ஆய்வுசெய்யும் கூட்டத்தில் ஒபாமா பங்கேற்றார். அதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் அவருடன் ரஷ்ய ஜனாதிபதி மெத்வதேவும் கலந்துகொண்டார்.

அப்போது ஒபாமா குறிப்பிடுகையில், ''தீவிரவாதிகளின் சொர்க்க பூமியாக ஆப்கன் திகழ்வதை அமெரிக்கா ஒருபோதும் அனுமதிக்காது. அமெரிக்கா ஒருபோதும் போரை விரும்பும் நாடு அல்ல. அதற்காக அமெரிக்கர்களை எளிமையானவர்களாக நினைத்துவிடக்கூடாது. எத்தகைய கடின மான சவாலையும் எதிர்கொள்ளும் திறன் அமெரிக்கர்களுக்கு உண்டு'' எனத் தெரிவித்தார்.

''ஆப்கானிலிருந்து கொண்டு அந்நாட்டு மக்களை அழிக்கும் தீவிரவாதிகளை அமெரிக்கா அனுமதிக்காது. மேலும் அங்கிருந்து உலகம் முழுவதும் பயங்கரவாதச் செயல்களை நிகழ்த்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்பாவி மக்கள், பெண்கள், குழந்தைகள் மீது தாக்குதல் நடத்துவதை சகித்துக்கொள்ள முடியாது'' என்றும் ஒபாமா குறிப்பிட்டார்.

## ஆப்கானில் தலிபான்களால் 11 பேரின் தலை துண்டிப்பு

காபூல்,ஜூன்28

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள், பொதுமக்கள் 11 பேரின் தலையை துண்டித்து படுகொலை செய்துள்ளனர். காஸ் உருஸ்கான் மாவட்டத்தில் வியாழக்கிழமை 11 பேரின் சடலங்களும் தலை

துண்டிக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

தலிபான் தீவிரவாதிகளைப் பற்றி பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் கொடுக்கும் பொதுமக்களை அவர்கள் இவ்வாறு தலையைத் துண்டித்து கொல்வது வழக்கம்.

இந்தப் படுகொலைகளையும் தலிபான் தீவிரவாதிகள்தான் செய்திருக்கவேண்டும் என பொலிஸார் தெரிவித்தனர்.

கனடாவில் நடைபெற்ற ஜி8 மாநாடு கூட்டத்திற்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா (இடது) ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெட்விடேவ் (நடு) கனடா ஜனாதிபதி ஸ்டீபன் ஹார்பர் ஆகியோர் உரையாடிக்கொண்டே வந்தவேளை எடுக்கப்பட்ட படம்

# பார்சலில் வந்த வெடிகுண்டுக்கு கிரேக்க அமைச்சக அதிகாரி பலி!

ஏதென்ஸ், ஜூன் 28

பார்சலில் வந்த வெடிகுண்டு வெடித்ததில் கிரேக்க பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஒருவர் பலியானார். கிரேக்க தலைநகர் ஏதென்ஸில் பொலிஸ் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சகக் கட்டடம் உள்ளது.

இந்த 6 மாடி கட்டடத்தில் அமைச்சர் மைக்கேலிஸ் கிறிஸ்ஹோடிஸ், அமைச்சக செயலாளர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோரின் அலுவலகங்கள் உள்ளன.

பாதுகாப்புத்துறை அமைச்சக அலுவலகத்துக்கு வியாழக்கிழமை காலை ஒரு பார்சல் வந்தது. அந்தப் பார்சலை பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையிட்டனர்.

அப்போது அது வெடித்துச் சிதறியது. இந்தத் தாக்குதலில் அமைச்சகப் பாதுகாப்புப் பிரிவின் தலைவர் ஜோர்ஜஸ் வாசிலாகிஸ் (வயது - 52) பலியானார்.

6ஆவது மாடியில் இந்த குண்டு வெடித்ததால், அந்த மாடியிலிருந்த அலுவலகங்கள் கடுமையாகச் சேதமடைந்தன. இந்த குண்டுவெடிப்பு குறித்து கிரேக்க பிரதமர் ஜோர்ஜ் பபந்திரேயு கடும் அதிர்ச்சி தெரிவித்துள்ளார். மேலும் இது தீவிரவாதிகளின் தாக்குதல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''பயங்கரவாதத்துக்கு எதிராக நாங்கள் போராடி வருகிறோம். இந்த வெடிகுண்டு தாக்குதலை கோழைகள் நடத்தியுள்ளனர். இதன்மூலம் நாட்டில் ஜனநாயகத்தைக் குலைக்க அவர்கள் சதி செய்துள்ளனர். அவர்களின் எண்ணம் நிறைவேறாது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் மைக்கேலிஸ் கிறிஸ்ஹோடிஸ் குறிப்பிடுகையில், ''வெடிகுண்டு தாக்குதலால் நாங்கள் பயந்துவிடவில்லை. இதில் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' எனத் தெரிவித்துள்ளார்.

## சொலமன் தீவில் பூகம்பம்

வெலிங்டன்,ஜூன் 28

பசிபிக் பெருங்கடலில் உள்ள சொலமன் தீவு கடல் பகுதியில் சனிக்கிழமை சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவில் 6.9 புள்ளிகளாகப் பதிவானது. இதைத் தொடர்ந்து, ஆழிப் பேரலை எச்சரிக்கை ஏதும் விடப்படவில்லை.

இதுகுறித்து அமெரிக்க புவியியல் ஆய்வு மையம், ''சொலமன் தீவின் சான் கிறிஸ்டோபர் நகருக்கு மேற்கு மற்றும் தென்மேற்குத் திசையில் 35 கி.மீ., தொலைவில், கடலுக்கு அடியில் 22 கி.மீ., ஆழத்தில் சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது'' எனக் குறிப்பிட்டது.

''பூகம்ப அதிர்வு கடலுக்கு அடியில் ஏற்பட்டதால், நிலப்பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை; உயிர்ச்சேதமோ - பொருட்சேதமோ ஏற்படவில்லை'' என்றும் அது தெரிவித்தது.

# மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய பாக். தீவிரவாதி சிம்பாப்வேயில் கைது!

ஜோகன்ஸ்பர்க்,ஜூன் 28

மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய பாகிஸ்தான் தீவிரவாதி உட்பட 2 பேர் சிம்பாப்வேயில் சிக்கினர். தென்னாபிரிக்காவில் நடைபெறும் உலகக் கிண்ணக் கால்பந்து போட்டி மைதானத்தில் தாக்குதல் நடத்துவதற்காக இவர்கள் ஊடுருவி இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மும்பையில் 2008 நவம்பர் 26ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் கொடூரத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலுக்குச் சதித்திட்டம் வகுத்தவர்களும் மூளையாகச் செயற்பட்டவர்களும் பாகிஸ்தானில் பதுங்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் நீதிமன்றத்திலும் வழக்கு நடக்கிறது. இதில், இம்ரான் முகமது (வயது - 33) என்ற தீவிரவாதி தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுத் தேடப்பட்டு வந்தார்.

இந்நிலையில், சிம்பாப்வேயில் தென்னாபிரிக்காவுக்கு அருகே உள்ள பெய்ட் பிரிட்ஜ் எல்லைப் பகுதியில் இம்ரான் முகமதுவும், அவருடன் இருந்த சௌத்ரி பவேஸ் அகமது (வயது - 39) என்பவரும் சிம்பாப்வே பொலிஸாரால் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் போலி கடவுச்சீட்டில் பயணம் செய்துள்ளனர் என்ற சந்தேகம் எழுந்துள்ளது என பொலிஸாருக்குக் குடியேற்றத்துறை அதிகாரிகள் தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து, இந்த 2 பேரையும் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். இதற்கு முன்னர் இவர்கள், சவூதி அரேபியாவிலிருந்து தன்சானியாவுக்கு வந்து அங்குகென்ய கடவுச்சீட்டை போலியாகப் பெற்று சாலை வழியாக சிம்பாப்வே வந்துள்ளனர். இவர்கள் தென்னாபிரிக்காவுக்குச் சென்று கொண்டிருந்தபோது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அமெரிக்க இராணுவப் பயிற்சிக் கழகத்திற்கு வந்திருந்த பிரிட்டிஷ் இளவரசர் ஹரி (நடுவில்) இராணுவச் சிப்பாய்கள் அளித்த வீரவாளைப் பரிசாகப் பெற்றுக்கொண்டார்.

# சூரிய குடும்பத்துக்கு வெளியே இளமையான புதிய கோள்

வாஷிங்ரன்,ஜூன் 28

சூரியக்குடும்பத்துக்கு வெளியே புதிய இளமையான கோள் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். கோள் உருவாக்கம் பற்றிய விதிகளை இக்கோள் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

சூரியனிலிருந்து சனி கிரகம் உள்ள தொலைவுக்கு சமமாக, சூரியக் குடும்பத்துக்கு வெளியே 63.4 ஒளி ஆண்டுகள் தொலைவில் பெட்டா பிக்டோரிஸ் என்ற கோள் உள்ளது.

இது தன்மையில் சூரியனை ஒத்துள்ளது. இக்கோள் உருவாகி ஒரு கோடி 20 இலட்சம் ஆண்டுகள் ஆகியிருக்கலாமென்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

ஆகவே இது இளமையான கோளாகக் கருதப்படுகிறது. சூரியனை ஒத்துள்ள இக்கோள், குறுகிய காலத்தில் இந்த வடிவத்தைப் பெற்றுள்ளது. ஆனால் சூரியனின் வயதோ, 450 கோடி ஆண்டுகள்.

பெட்டா 2003இல் கண்டுபிடிக்கப்பட்டது. 2009இல் அது ஒரு கோள்தான், நட்சத்திரமல்ல என்று உறுதி செய்யப்பட்டது. பெட்டா பிக்டோரிஸ் கோளுக்கு அருகில் அதன் துணைக்கோளாக சுற்றிவரும் ஒரு கோளை விஞ்ஞானிகள், தென் ஐரோப்பிய வானியல் கூடத்தின் மிகப்பெரிய டெலஸ்கோப் மூலம், கடந்த ஆண்டில் கண்டறிந்தனர்.

இந்தக் கோளுக்கு பெட்டா பிக்டோரிஸ் பி என்று பெயரிட்டுள்ளனர். பொதுவாக ஒரு கோள், முழுமையான வடிவத்துடன், கோளுக்கே உரிய தன்மைகளைப் பெறுவதற்கு குறைந்தபட்சம் ஒரு கோடி ஆண்டுகளாகும் என்று அறிவியல் விதிகள் கூறுகின்றன.

பி.டி.20 1790பி என்ற கோள், மிகக் குறைந்தபட்சமாக 30 கோடியே 50 லட்சம் ஆண்டுகளில் உருவானதாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், பெட்டா பிக்டோரிஸ் பி உருவாகி, சில இலட்சம் ஆண்டுகளே ஆகியிருக்குமென்று தெரிய வந்துள்ளது.

இக்கோள், வியாழனை விட ஒன்பது மடங்கு பெரியது என்பது குறிப்பிடத்தக்கது. சூரியக் குடும்பத்துக்கு வெளியே, இப்போதைக்கு மிக இளமையான கோள் இதுதான் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கின் அபிவிருத்தியில் ஜனாதிபதி ஆர்வம் மூவின மக்களும் ஒரு தாய் பிள்ளைகள் போல வாழுவோம்

## அமைச்சர் ஜீவன்குமாரதுங்க உரை-

யாழ்ப்பாணம்,ஜூன் 28

வடக்கு - கிழக் குப் பிரதேசங்களின் துரித அபிவிருத்தி யில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆர்வத்துடன் உள் ளார். கடந்த கால சம்பவங்களை மற ந்து சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூ வி ன த் த வ ரு ம் ஒரு . தாய் பிள்ளைகள் போல வாழ்வோம்- இவ்வாறு தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க கூறியிருக் கிறார்.

யாழ்ப்பாணம் பழம் வீதியில் அமைக்கப் பட்டுள்ள ஐரோப்பிய மொழியியல் கல்லூ ரியைத் திறந்து வைத்த பின்னரே அமைச் சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

கடந்த 30 வருடங்களாக வடக்கில் வாழ்ந்த மக்கள் தான் அதிக துன்பத்தை அனுபவித்திருக்கின்றார்கள். நானும் 30 வருடங்களுக்குப் பிறகு இப்போது ஒரு அமைச்சர் என்ற முறையில் இங்கே விஜயம் செய்திருக்கின்றேன்.

கடந்த கால இழப்புக்களை ஈடுசெய் வதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டும். சிறந்த அபிவிருத்தி இலக்கை எட்டுவதன் மூலமே வேலையில்லாப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

எதிர்காலத்தில் இந்தப் பிரதேசத்திலே உயர் கல்வி கற்கும் அனைவரும் சிறந்த வேலை வாய்ப்பைப் பெறுவர் - என்றார்.

இதேவேளை-

ஜேர்மன் நாட்டில் சட்டத்தரணியாக வுள்ள இராமச்சந்திரன் என்பவரால் இந்த ஐரோப்பிய மொழியியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குடியேற்றம் மற்றும் சுற்றுலா விசா நிரா கரிக்கப்பட்ட மாணவர் அனுமதி, பிள்ளை களைத் தத்தெடுத்தல், குடிவரவு, குடி அகல்வு சம்பந் தப்பட்ட நடவடிக் கைகள் இந்தக் கல்லூரி மூலம் மேற்கொள்ளப்பட வுள்ளன. அத்துடன் அனைத்து ஐரோப்பிய மொழிகளும் மொழி பெயர்ப் புச் செய்யப் பட்டு வழங்கப்படுவதோடு ஜேர்மன், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளும் கற்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப் படுகிறது. (எ-க)

## உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டங்கள் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்28

வேலணை பிரதேச சபையால் வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட் டுத்திட்டத்தின் கீழ் ஆறு கொத்தணி களுக்குமாகத் தயாரிக்கப்பட்ட திட்டங் கள் நாளை மறுதினம் புதன்கிழமை மக் கள் பார்வைக்காக மேற்படி சபையின் உப அலுவலகங்களில் வைக்கப்பட வுள்ளன.

திட்டங்களை மக்கள் பார்வையிட்டு இவை தொடர்பான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு சபைச் செயலாளர் தெ.தவராசா கேட் டுள்ளார். (201)

## வீதிக்கு 'கொங்கிறீற்'

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்.-பருத்தித்துறை வீதி அகலிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக வீதியின் கிழக்கு கரையோரத்துக்கு 'கொங்கிறீற்' கலவையிடும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

புத்தூரிலிருந்து நீர்வேலி வரையான வீதியின் கிழக்கு கரையோர வீதிக்கே இவ் வாறு 'கொங்கிறீற்' கலவையிடப்படு கின்றது. (எ-121)

# அரசதுறையில் பணிபுரிவர்களுக்கு அவுஸ்ரேலிய அபிவிருத்திப் புலமைப்பரிசில்

## வடமாகாணப் பிரதிப்பிரதம செயலர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூன் 28

வடமாகாணத்தில் அரச சேவையில் கடமையாற்றும் பட்டதாரிகள் அவுஸ்ரே லியாவில் மேற்படிப்புக்கு விண்ணப்பித்து கற்கை நெறியை மேற்கொள்ள முடியும். விண்ணப்பதாரர் 45 வயதுக்குட்பட்ட வராகவும், 3 வருடங்கள் அரச துறையில் கடமையாற்றியவராகவும் இருப்பதுடன் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவும் வேண்டும். இவ்வாறு வடமாகாண பொது நிர்வாக பிரதிப் பிரதம செயலாளர் தி.இராச நாயகம் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அவுஸ்ரேலியா அபிவிருத்தி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் நல்லாட்சி, சுகா தாரம், சுற்றாடல்,கல்வி போன்ற துறை களில் ஆர்வமுடையவர்களுக்கு முது மாணி, முது தத்துவமாணி கற்கை நெறி களுக்கு வசதியளித்து புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-302)

# தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையை பழைய உத்வேகத்துடன் இயக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன் 28

தெல்லிப்பழைக் கூட்டுறவு ஐக்கிய வைத்தியசாலையை பழைய உத்வேகத் துடன் சிறப்பான முறையில் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தெல்லிப்பழை கூட்டுறவு ஐக்கிய வைத்தியசாலை சங்க புனரமைப்புக் கூட் டமும் புதிய இயக்குநர்களை தெரிவு செய்யும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை 26 ஆம் திகதி நா.தவநாதன் தலைமையில் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றபோதே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் மங்கள விளக்கினை யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள அலு வலர் சி.மோகன் மற்றும் ஓய்வு பெற்ற கூட்டுறவாளர்களான க.கணேசமூர்த்தி, எ.சின்னத்தம்பி, திருமதி சு.செந்தூரன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் ஏற்றி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற கூட்டத்தில் கடந்த காலச் செயற்பாடுகள் சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் தகவல்கள் எத்தனையும் பெற முடியாத நிலைமை இடப்பெயர்வுகள் காரணமாக ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சபையினால் புதிய உபவிதி அங்கீகரிக்கப்பட்டு 11 பேர் கொண்ட புதிய இயக்குநர் சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

தெல்லிப்பழை கூட்டுறவு ஐக்கிய வைத்தியசாலையைத் தொடர்ந்து இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இதில் அறிவுறுத்தப்பட்டது.

கடந்த 13 வருடங்களாக பழுதடைந்த நிலையில் காணப்பட்ட வைத்தியசாலைக் கட்டடம் தெல்லிப்பழை மாவட்ட வைத்தி யசாலை இயங்குவதற்காக யு.என்.எச்.சி. ஆர்.நிறுவனத்தினால் திருத்தப்பட்டு வடபிராந்திய சுகாதாரச் சேவைகள் திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

தற்போது உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலைக் கட்டடத்தில் ஒரு பகுதி இயங்கத் தொடங்கியுள்ளதுடன் மிகுதியும் விரை வில் மாவட்ட வைத்தியசாலைக் கட்டடத் துக்கு எடுத்துச் செல்லப்படும் நிலையில் இச் சங்கம் மீண்டும் புனரமைப்புச் செய்யப் பட்டுள்ளது.

தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலை தனது சொந்தக்கட்டடத்துக்கு முழு மையாக சென்றதும், கடந்த காலங்களில் சிறப்பாக இயங்கிய கூட்டுறவு வைத்திய சாலை அதே பழைய உத்வேகத்துடன் இயங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ- 86)

# சைக்கிள் பதிவிலோ பெயர் இல்லை; வந்த சைக்கிளையோ காணவில்லை!

## தென்மராட்சியில் பரிதாபம்

யாழ்ப்பாணம்,ஜூன் 28

பிரதேச செயலகத்தில் சைக்கிள் பதிவு வந்துள்ளதா எனப் பார்க்க வந்தவர் தனது சைக்கிளையும் பறிகொடுத்துவிட்டு வெறுங்கையுடன் சென்ற சம்பவம் அண் மையில் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் தென்மராட்சிப் பிர தேசத்தில் மீளக்குடி யமர்ந்த இவர் தனது பிள்ளையின் பெய ருக்கு சைக்கிள் பதிவு உள்ளதா எனப் பார்ப்பதற்காக பிரதேச செயலக வளாகத்தில் சைக்கிளை நிறுத்திப் பூட்டிவிட்டு சென்றவர் எனினும் பட்டிய லில் பெயர் வரவில்லை. இதன் பின் அவர் திரும்பி வந்து பார்த்த போது அவர் நிறுத் தியிருந்த சைக்கிளும் காணா மல் போன தால் அதிர்ச்சியடைந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை பிரதேச செயலக வளாகத் தில் விடப்பட்ட -பிரதேச செயலக உத்தி யோகத்தர்களின் சைக்கிள்கள் உட்பட - பத் துக்கு மேற்பட்ட சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-207)

# திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகளுக்கு புதிதாக 300 தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 28

திருநெல்வேலி, கோண்டாவில் பகுதி களுக்கு புதிதாக மேலும் முந்நூறு தொலைபேசி இணைப்பு வசதிகள் வழங் கப்படவுள்ளன.

யாழ். 'ரெலிக்கொம்' நிறுவன வட்டா ரங்கள் மேற்படி தகவலை தெரிவித்தன. புதிதாக இந்தத் தொலைபேசி இணைப்பை வழங்குவதற்கு முன்னேற்பாடாக தற் போது நிலத்தின் கீழ் கேபிள் வயர்களை இணைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

இதற்கெனப் பரமேஸ்வராச் சந்தியில் இருந்து நிலத்தின் கீழ் கேபிள் வயர் இணைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி பகுதிகளுக்குத் தொலை பேசி இணைப்புக்களை அதிகரிக்கும் முக மாக அப்பகுதியில் புதிதாகப் பரிவர்த் தனை நிலையம் ஒன்றை அமைக்கவும் தீர்மா னிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படு கின்றது. (எ-224)

## சொற்பொழிவாளர் கௌரவிப்பு

பிரபல ஆன்மீகச் சொற் பொழிவாளர் பண்டிதர் பொன்.சுகந்தன் இன்று திங்கட் கிழமை மாலை 6 மணியளவில் புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயப் பரி பாலன சபையினரால் கௌரவிக்கப் படவுள்ளார்.

இந்த ஆலய மகோற்சவ தினங்களில் 'மகாபாரதம்' என்னும் விடயம் பற்றி தொடர் சொற்பொழிவு ஆற்றியமைக் காகவே அவர் கௌரவிக்கப்படவுள்ளார். (எ)

'தீண்மக்கழிவும், கழிவு நீர் பரிகரிப்பும்' தொடர்பான கருத்தரங்கு அண்மையில் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் இலங்கை மின்சாரசபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தன் தலைமை உரை நிகழ்த்துவதையும் யூரோவில் நிறுவனப் பணிப்பாளர் எஸ்.ராமதாசன், இலங்கை ஆர்.சீ நிறுவனப் பொறியியலாளர் ஆர். செல்வக்குமரன் ஆகியோர் கருத்துரை வழங்குவதை முதல் மூன்று படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: ரட்ணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று, கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 20.06.2010 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்

**திருமதி பவானி உமாவாகீசர்**

முதுகலைமாணி (தமிழ்) M.A. (Tamil)

இல் பட்டம் பெற்றுக் கொண்டமையையிட்டு அவரை மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அ.உமாவாகீசர் [அகில இலங்கை சமாதான நீதிவான்]
திரு.திருமதி கனகரத்தினம், க.தர்சிவி,
க.சு.ரேஸ்குமார், க.யதீஸ்குமார். (சி/568710)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர்ப் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் கா.சுதாகரன் அவர்களின் அன்புத் தந்தை

**சிவக்கொழுந்து காசிநாதன்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (சி/568720)

மாவட்ட விளையாட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள்.

## 23ஆம் வருட அன்பின் நினைவு

அவ்வை மடியில்
15 ★ 07 ★ 1920

ஆண்டவன் அடியில்
12 ★ 07 ★ 1987

அமரர் செ.திருநாவுக்கரசு

(சமாதான நீதிவான், பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முன்னாள் முகாமையாளர், உடுப்பிட்டி கிராம சபை முன்னாள் தலைவர்)

திதி: துதியை (28.06.2010)

அன்புத் தெய்வமே! பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை ஆளாக்கி
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு
இன்றுடன் ஆண்டுகள் இருபத்து மூன்று சென்றாலும்
என்றென்றும் உங்கள் பாச விளக்கின் ஒளி
அணையாத தீபமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.
எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாத
சித்திரமாய் நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி

(99897)


# பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

நாவற்குழி, ஜூன் 28

மாணிக்கக்கல், ஆபரண ஆராய்ச்சி நிறுவனத்தின் பயிற்சி நிலையத்தின் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட உள்ள பயிற்சி நிலையங்கள் மூலமாக இந்தப் பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்தப் பயிற்சிக்காக -

இரத்தினக்கல் பட்டை தீட்டுதலும் அழகுகூட்டுதலும், கௌடா கல் செதுக்குதல், கணனித்துணையுடன் ஆபரணத் தயாரிப்பு, அதிஷ்டக் கல் செதுக்குதல் போன்ற பாடநெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் இப் பயிற்சி நெறி ஆரம்பமாக உள்ளது.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இரத்தினபுரியிலுள்ள நிறுவனத்தின் 045-2228808, 2228801 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். சுயவிவரங்களை தொலைநகல் மூலம் அனுப்பவிரும்புவோர் 045-2228820 எனும் இலக்கத்திற்கு அனுப்ப முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-121)

## புனருத்தாரண கும்பாபிஷேகமும் சித்திரத்தேர் வெள்ளோட்டமும்

கொழும்புத்துறை, ஜூன் 28

மண்டைதீவு முகம்புவயல் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் புனருத்தாரண மஹா கும்பாபிஷேகமும் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டமும் எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

கிரியாகால பூஜை வழிபாடுகள் இன்று திங்கட்கிழமை அதிகாலை 5.10 மணிக்கு ஆரம்பமாகி முதலாம்திகதி வரை நடைபெறும். எண்ணெய்க்காப்புச் சாத்துதல் அன்றையதினம் முற்பகல் 10 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம்பெறும்.

எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு வழிபாடுகள் ஆரம்பமாகி 9.10 மணிக்கு பிரதான கும்பங்கள் வீதிவலம் இடம்பெற்று காலை 9.30 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேக ஆசியுரையை விஸ்வஸ்ரீ நா.ஜோதீஸ்வரக்குருக்களும் அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகளும் வழங்குவர்.

புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா அன்றையதினம் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தாசபையினர் தெரிவித்தனர். (எ-135)

## 'அனிமேஷன்' கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 28

கணனித்துறையில் 'அனிமேஷன்' கற்கை நெறி தொடர்பான விசேட கருத்தரங்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கி மேல்மாடிக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள 'மக்நெற் சியற்' அக்கடமியில் நடைபெற்று வருகின்றது.

இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கின்ற 'மக்நெற் சியற்' அக்கடமியின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் இராஜேஸ் மற்றும் விரிவுரையாளர் மோகன் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு விரிவுரைகளை நடத்தி வருகின்றனர்.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள 'மக்நெற் சியற்' அக்கடமியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (9)


## நீங்காத நினைவில் நான்காவது ஆண்டு

அமரர் செல்வநாயகம் செல்வத்துரை

(உயர் நீதிமன்றச் சட்டத்தரணி - பிரசித்த நொத்தாரிசு - காரைநகர்)

திதி: 14.07.2010

மண்ணில் 03.07.1940 — விண்ணில் 28.06.2006

அன்று நாம் ஒன்றிணைந்து இன்புற்று வாழ்ந்தோம்.
இன்று எமைப் பிரிந்து இறைவனடி சேர்ந்து
ஆண்டுகளோ நான்காகின்றதே!
நான் இன்று தனித்திருந்து
கழிந்த காலங்களை எண்ணி ஏங்குகின்றேன்.
இதுவே நியதி எனில் என் செய்ய முடியும்?
சாந்தி அடைகின்றேன்.

*இறைவனடி சேர்ந்த நீங்கள் என்றும் நித்திய பேரின்பம் பெற்று வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வேண்டும் -*

37/1, 2/1, ஹம்டன் லேன், வெள்ளவத்தை, கொழும்பு.

மனைவி மற்றும் குடும்பத்தினர்.

(சி/568717)

## Vacancies @
### NORTH LANKA IIT, LANKA CITY CAMPUS

கீழ்வரும் இடங்களில் பணியாற்றுவதற்கு

**JAFFNA, COLOMBO, KANDY, HATTON, BATTICALOA & TRINCOMALEE**

1. Administrative Officers
2. Lecturers - 1). IT 2). Multimedia 3). English
3. Receptionists
4. Lab Assistants
5. Office Boys

மேற்படி பதவிகளுக்கான தகமையுடையவர்கள் தகுந்த சான்றுகளுடன் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்!!!

மேலதிக விபரங்களுக்கும், நேர்முகத் தேர்விற்கும் :-

**NORTH LANKA IIT (Pvt.) Ltd.**

#113, LAXAN PLAZA, NAVALAR ROAD, JAFFNA, SRI LANKA
PHONE - 0213214305, 0217300140

## COMPUTER EXPRESS
### Institute of Information Technology

No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

**மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் 2010**

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 3 Months 3500/= | Diploma in Desktop Publishing 4 Months ~~4500~~/= 4500/= | Diploma in Web Page Designing 3 Months ~~4500~~/= 4500/= |
| Diploma in Graphic Designing 4 Months ~~4500~~/= 4500/= | Diploma in Hardware Engineering 3 Months ~~4000~~/= 4000/= | Diploma in Auto CAD 3 Months ~~4500~~/= 4500/= |
| Diploma in Accounting Package 3 Months ~~4500~~/= 4500/= | Diploma in Computer Science 4 Months ~~4500~~/= 4500/= | Honors Diploma in Computer Science 3 Months ~~6500~~/= 6500/= |

80% Off

50% Off Advance Courses

Dip. in. Multimedia ~~10000~~ 5000/=
Dip. in. Video Editing ~~9500~~ 4750/=

Batch i -28 06 2010 - 9Am or 3pm
Batch ii -30 06 2010 - 9Am or 3pm
Batch iii - 02 07 2010 - 9Am or 3pm
Batch iv - 03 07 2010 - 9Am or 3pm

பாடசாலை மாணவர்களுக்கான Visual Basic, HTML மாலை நேர வகுப்புக்களும் ஆரம்பமாகஉள்ளன...

**1 Week Courses** (Monday to Friday) Start On 28.06.2010 At 9AM

1) Diploma in Hardware Engineering
2) Diploma in Video Editing
3) Diploma in Graphic Designing


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் இரண்டாவது குருபூசைத்தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையுரையாற்றுவதையும் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் திருவுருவப் படத்துக்கு அவரது சகோதரி கனகம்மா அப்பாக்குட்டி மலர்மாலை அணிவிப்பதையும் உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் ச.வி.விக்கினேஸ்வரன், வைத்திய கலாநிதி சிவன்பாலன் சிவன்சுதன் ஆகியோர் நினைவுப் பேருரை ஆற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: கவிநேசன்)*

# யாழ்.மாவட்டத்தில் அடுத்தமாதம் முதல் வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பை மீளாய்வு செய்யும் பணிகள் அடுத்த மாதம் முதல் நடைபெறவுள்ளன.

தேர்தல் வாக்காளர் இடாப்பை மீளாய்வு செய்வதற்கான பயிற்சிகள் பிரதேச செயலாளர், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.குகதாசனால் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களை விட இம்முறை வாக்காளர் இடாப்பை பதிவு செய்வதில் பல்வேறு புதிய நடைமுறைகளும் பின்பற்றப்படவுள்ளதாகப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட கிராம அலுவலர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் இருபத்தைந்து வருட கால இடைவெளியின் பின்னர் இம்முறை வீடு வீடாகப் படிவம் கொடுக்கப்பட்டு தேர்தல் வாக்காளர் இடாப்பு பதிவுசெய்யப்படவுள்ளது.

கடந்த காலங்களில் 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களுடைய பெயர்கள் இணைக்கப்படுதல், மரணம் அடைந்தவர்களின் பெயர்கள் நீக்கப்படுதல் என்பன போன்ற செயற்பாடுகளே வாக்காளர் இடாப்பு மீளாய்வின் போது பின்பற்றப்பட்டு வந்தன.

ஆனால் இம்முறை வாக்காளர் இடாப்பில் தொழில், கல்வி மற்றும் குறுகிய கால நேரத்துடன் வெளிநாடுகளுக்கு சென்றவர்களின் பெயர்கள் என் பவையும் பதிவு செய்யப்பட உள்ளன. அத்துடன் வெளிநாடுகளில் கடந்த பல வருடங்களாகத் தொடர்ந்து வசிப்பவர்களின் பெயர்களை நீக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-68)

## இரண்டு நாள்கள் மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 28

பருத்தித்துறை பிரதான வீதியை அகலமாக்கும் பணிகளுக்காக மின்சார விநியோகத் தூண்களை இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளதால் பின்வரும் இடங்களில் நாளை செவ்வாய்க்கிழமையும் ஜூலை முதலாம் திகதி வியாழக்கிழமையும் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை மின்விநியோகம் தடைப்படும் என இலங்கை மின் சாரசபையின் சுன்னாகம் பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின் விநியோகம் தடைப்படும் இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வாக்காளர் அட்டைகள் மீளாய்வின் போது கண்காணிப்பு பணியில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள்!

மூளாய் , ஜூன் 28

யாழ். தேர்தல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் வாக்காளர் அட்டவணை தொடர்பான மீளாய்வுப் பணிகளை அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகள் கண்காணிக் கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கண்காணிப்பு நடவடிக்கை குறித்து யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது. பல அரசியல் கட்சிகள் இக் கண்காணிப்பு நடவடிக்கைக்காக தமது அரசியல் கட்சிகளின் சார்பில் பிரதிநிதிகளை நியமித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணி மனைகளுக்கும் ஏற்கனவே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

வாக்காளர் அட்டவணை மீளாய்வுப் பணிகளின் போது முறைகேடுகளை இந்தப் புதிய நடைமுறையின் மூலம் தடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-99)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வாய்திறந்த வடிகாலுக்கு வரமொன்று கிடைக்குமா?

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்.வின்சர் தியேட்டர் சந்திக்கு அருகிலுள்ள வடிகாலின் மேல் மூடி உடைந்து பல நாள்கள் கடந்த பின்னும் இதுவரை அது சீர்செய்யப்படாததால் மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு முன்பாகச் செல்லும் வடிகாலின் மேற்றள மூடி ஒன்றே இவ்வாறு உடைந்து சேதமடைந்து நீண்ட நாள்களாகப் புனரமைப்புக்காகத் தவமிருக்கிறது. இவ்வாறு சேதமடைந்துள்ள வடிகாலால் பொது மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த பல நாள்களாக இவ்வாறு உடைந்து காணப்படும் இந்த வடிகாலின் மேற்றள மூடியை சீர் செய்வதற்குச் சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-224)

# வெளிக்கிடுங்கோ யாழ்ப்பாணத்துக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 28

எப்போது விடுமுறை கிடைக்கின்றதோ அப்போதெல்லாம் 'வெளிக்கிடுங்கோ யாழ்ப்பாணத்துக்கு' என்ற பாணியில் சமையல் பாத்திரங்கள் சகிதம் குடாநாட்டுக்கு தென்னிலங்கைப் பயணி களின் படையெடுப்பு நிகழ்ந்து வருகிறது.

மூன்று தினங்கள் தொடர்ச்சி யாகக் கிடைத்த விடுமுறையைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் வந்தனர்.

சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகையால் யாழ். நகரில் போக்குவரத்து நெருக்கடி நிலவியது.

திடீரெனப் பெரும் எண்ணிக்கையில் பயணிகள் வந்து சேர்ந்ததால் யாழ்ப்பாணத்திலுள்ள விடுதிகள் யாவும் நிரம்பி வழிந்தன.

விடுதி வசதி கிடைக்காத சுற்றுலாப் பயணிகள் முனீஸ்வரன் கோவிலடி மற்றும் முற்றவெளிப் பகுதிகளில் தங்கி நின்று தமது இரவுப் பொழுதைக் கழித்தனர்.

இந்தப் பகுதிகளில் மலசல கூடம் மற்றும் குடி தண்ணீர் போன்ற வசதிகள் இல்லாததால் அவற்றுக்காகச் சுற்றுலாப் பயணிகள் பெரும் சிரமப்பட்டனர். (எ-224)

# மனிதர்கள் அனைவரும் ஏதோவொரு வகையில் உளரீதியாகக் குணப்படுத்தப்பட வேண்டியவர்களே!

## பேனாட் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

மனிதர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் உளரீதியாகக் குணப்படுத்தப்பட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இத்தகைய குணப்படுத்தல் என்பது பல்வேறு கோணங்களில் வழங்கப்பட வேண்டும்- இவ்வாறு யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பேனாட் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்தார்.

'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையத்தின் இயக்குநர் அருட்பணி எஸ்.ஜே. இராஜநாயம் எழுதிய ' வளமாகும் குடும்ப வாழ்வு'' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அகவொளி நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுப் போதே பேனாட் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

ஒவ்வொரு மனிதரதும் வாழ்வில் அவரவர் குடும்பத்தின் தன்மை வெளிப்படுவதாக இருக்கும். எனவே ஆரோக்கியமான குடும்ப வாழ்வு என்பது மிக முக்கியமானதாகும். குடும்பத்தில் தாய், தந்தையின் முன் மாதிரியான வாழ்வைப் பார்த்தே குழந்தைகள் பல விடயங்களை கற்றுக்கொள்கின்றனர்.

எனவேதான் நல்ல குடும்பத்தை உருவாக்கும் முயற்சியாக இந்த நூல் வெளியிடப்படுகின்றது. உள்ளம் நன்றாக இருந்தால் தான் நல்ல பண்புகள் வளரும். மனித வாழ்வில் ஏற்படும் உளப்பிரச் சினைகளில் 60 வீதத்தை மட்டுமே ஆற்றுப்படுத்த முடியும். ஏனையவை ஆன்மீக சேவை மூலமே மனித உள்ளத்தை சீர்செய்ய முடியும் என்றார்.

இந்த நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் உரை நிகழ்த்தும் போது-

உளநலத்தைப் பேணும் கற்கை நெறி மிக அவசியமானதாகும். யாழ்.பல்கலைக் கழகத்திலுள்ளது போன்று திறந்த பல்கலைக்கழகத்திலும் உளவியல் சார் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். நாட்டுக்கு ஏற்ற பிரஜைகளை வழங்குவது குடும்பமாகும். எனவே குடும்ப மட்டத்தில் ஆரோக்கியம் பேணப்படவேண்டும். இதற்கு உளநலம் பேணப்படுதல் அவசியமானதாகும்- என்றார். (எ-14)

# தமிழ்மொழித்தின போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் ஒருவரையொருவர் எதிரியாகப் பார்க்கும் மனோநிலை மாற வேண்டும்

## தமிழ்ப் பிரிவுக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களில் பெரும் பாலானோரிடம் ஒருவரை ஒருவர் எதிரியாகப் பார்க்கும் மன நிலையே இருந்தது. அவர்களின் செயற்பாடுகள் மூலம் இதனை அவதானிக்க முடிந்தது. இது எமக்கு அதிக மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது. இனிவரும் காலங்களில் நடைபெறும் போட்டிகளிலாவது இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும்.

இவ்வாறு கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவு கல்விப் பணிப்பாளர் வி.எஸ். இதயராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களும் அவர்களுடன் சமுகமளித்த ஆசிரியர்களும் தமது அணி வெல்லவேண்டும் என்ற மனநிலையில் ஏனைய அணிகளை எதிரியாகப் பார்க்கும் மனநிலையே நிலவியது. இவ்வாறான குரோத மன நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

போட்டிகளில் வென்றவர்களில் சிலர் தோற்றவர்களுடன் வித்தியாசமான முறையில் நடந்து கொண்டனர். இதுவும் தவிர்க்கப்பட வேண்டும்.

1992 ஆம் ஆண்டு தேசிய ரீதியாக தமிழ்த்தின நிகழ்வுகள் முதன் முதலில் இடம்பெற்றன. இயல், இசை,நாடகம் என்ற துறைகளில் 50 போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் இந்த வருடமே முதன் முறையாகத் தேசிய ரீதியிலான தமிழ்த்தின நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இரண்டு நாள்கள் இடம்பெற்ற இப்போட்டிகளில் முதல் நாள் 40 நிகழ்வுகளும், இரண்டாம் நாள் 12 நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தேசிய மட்டத்தில் தமிழ்த் தினப் போட்டிகள் இடம்பெறுவது வரவேற்கப்பட வேண்டியது. தேசிய ரீதியாகக் கலைஞர்களும் துறைசார் ஆர்வலர்களும் சந்தித்துக் கொள்வதற்கும் தமக்கிடையே தொடர்புகளைப் பேணிக்கொள்ளவும் முடியும். தேசிய ரீதியாகத் துறைசார்ந்தவர்கள் தமது திறமையை வெளிக்காட்டவும் சிறந்த களமாக இது அமையும்.

இத்துடன் தமிழ் மொழிப் பிரயோக அடிப்படையிலும் பயன்படுத்தும் ஆற்றல், அந்த மொழியின் செழுமையை அறிதல் தமிழின் பாரம்பரியக் கலை வடிவங்களைப் பற்றிப் புரிதல், சிங்கள மாணவர்களிடையே தமிழ் மொழி கற்பதில் ஏற்படும் ஆர்வத்தைத் தூண்டுதல் எனத் தமிழ் மொழித் தினப் போட்டிகள் பன்முகத்தன்மையான நோக்கங்களைக் கொண்டதாகவுள்ளது. தேசியமட்டப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு உயர் கல்விக்கான மேலதிக சலுகைகளைப் பெறவும் சந்தர்ப்பம் உண்டு- என்றார். (எ-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களும் மாணவர்களும் தம் தரப்புப் பொறுப்புக்களை உணர்ந்து செயற்படும் முயற்சியியே வெற்றிக்கு வழிகோலும்

சமுதாயக் கூட்டுக்கல்வியானது ஒரு சமுதாயத் தொடர்புடைய கல்வி முறையை வழிப்படுத்துகின்றது. இம்முறை மக்கள் ஒருவரிலிருந்து மற்றொருவர் தம் சொந்த முயற்சியாலேயே கற்றுக்கொள்வர் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. அறிவு சார்ந்த கல்வி முறைக்கும் அனுபவம் சார்ந்த கல்வி முறைக்கும் இடையே ஒரு பாலம் போல சமுதாயக் கல்வி முறை அமைகிறது.

நாம் அடிப்படையில் அடுத்தவருடைய பழக்க வழக்கங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம். சிறிய குழந்தை தன்னுடைய மூத்த சகோதரனையோ சகோதரியையோ பார்த்துக் கற்றுக் கொள்கிறது. இதைப்போல வாழும் சூழ்நிலையும் நமது பழக்கத்தை மாற்ற எத்தனிக்கிறது. உதாரணமாக புதிதாக சேர்ந்த மாணவன் தன் உடை அணியும் பழக்கத்தை மற்றவர்களைப் போல் மாற்றிக் கொண்டு அந்தக் குழுவில் இடம் பிடிப்பது.

*கடந்த 24.06.2010 வியாழக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஒருசேர இடம்பெற்ற கல்லூரியின் நூற்றாண்டு விழா, பரிசளிப்பு விழா, நிறுவுநர் நினைவு விழாவின் போது யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் த.பேரானந்தராசா நிகழ்த்திய 'மாணவர் கல்வி மேம்பட ஆசிரியர், பெற்றோர், மாணவரிடையே ஒத்துணர்வு' என்ற தலைப்பிலான நிறுவுநர், பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை - 2010 நினைவுப் பேருரையின் முதல் பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது.*

நவீன சமுதாயக் கல்வி முறையில் ஊக்கப்படுத்துதல் அல்லது தண்டனை விதித்தல் ஆகிய இரண்டும் கற்றலில் மறை முகமாகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதன் விளைவாகவே அவன் தன் பழக்கங்களை மாற்றிக் கொள்கிறான். ஊக்கம் ஒருவனின் அறிவு சார்ந்து கற்கும் ஆற்றலைத் தூண்டுகிறது. அத்தூண்டுதல் அவன் கற்பதற்கும் அதன் அடிப்படையில் தன் பழக்கங்களை மாற்றிக் கொள்ளவும் வகை செய்கின்றது.

சமுதாயக் கல்வி என்பது, பழக்கங்களின் தன்மை, அறிவு சார்ந்த சில எண்ணங்கள் இவை இரண்டையும் பிரதி பலிக்கின்றது. செயல்படுத்தாமல் கற்றல் (Learning with out performance.) எல்லாநேரத்திலும் நல்ல விளைவைத் தருவதில்லை. இனி, கவனித்தல் கற்றலின் முதல் தேவை. இன்றியமையாததும் கூட. ஒரு புதிய விடயத்தைக் கற்கும் போது கூர்ந்து ஒரு முகப்படுத்திய கவனம் வேண்டும்.

மீண்டும் ஒரு பழக்கத்தில் மாற்றம் வலியுறுத்தப்படும் போது மக்களின் எதிர்பார்ப்பு அதிகமாகிறது. இத னால் அவர்கள் மனதில் ஒருவித எதிர்பார்ப்புக்களைப் பட்டியல் இடுகிறார்கள். சில பழக்கங்கள் நல்லதையும், சில தீயதையும் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கிறார்கள். கற்றுக்கொள்கிறவர் எந்தப் பழக்கம் பாராட்டையும், எந்தப் பழக்கம் தண்டனையையும் கொண்டுவரும் என்பதனையும் அவற்றுக்கு இடையேயுள்ள வேறுபாட்டையும் தெரிந்துகொள்ளல் அவசியம்.

விளைவுகளின் விகிதம் (Reciprocal Causation) ஒரு பழக்கத்தில் வரும் மாற்றம் சுற்றுப்புறச் சூழ்நிலையையும், மனிதனையும் ஒரே சமயத்தில் பாதிக்கக்கூடும். உண்மையில் மனிதன், அவனுடைய பழக்கம், சுற்றுப்புறம் ஆகிய மூன்றும் ஒன்றை ஒன்று பாதிக்கின்றன. உதாரணமாக புகைப்பிடிப்பதை ஒரு மனிதன் குறைத்துக் கொண்டால் அது மாசினைக் குறைத்து மேலும் மனிதனது நலத்தை இன்னும் அதிகமாகப் பேணுகிறது.

முன்மாதிரிகள் (Model) பல வகை முன் மாதிரிகள் உண்டு. உதாரணமாக வாழும் ஒரு மனிதனோ இறந்த ஒருவரோ முன்மாதிரியாக தன் பழக்கங்களை வலியுறுத்தலாம். தந்தை சொல்கேட்டு கானகம் சென்ற ஸ்ரீ இராமபிரானைப் போல இருக்க வேண்டும் என்று பிள்ளைகளுக்கு ஸ்ரீ இராமனை உதாரணம் காட்டுவது போல் ஒரு காவிய நாயகன் கூட முன் மாதிரியாகலாம். குழந்தைகளுக்கு உயர் வெற்றி பெற்ற சாதனையாளர்கள், ஹென்றி போர்ட், தோமஸ் அல்வா எடிசன், ஐசக் நியூட்டன், ரைற் சகோதரர்கள் போன்ற வெற்றி பெற்ற சாதனையாளர்கள், கம்பர், இளங்கோ அடிகள், திருவள்ளுவர், ஔவையார் போன்ற தீர்க்கதரிசிகள், டாக்டர் இராதாகிருஸ்ணன், டாக்டர் ரீ.எம்.பி.மஹாதேவன், டாக்டர் அப்துல்கலாம், மஹாத்மாகாந்தி, பண்டிதர் நேரு, பாவலர் துரையப்பாபிள்ளை போன்ற எங்கள் காலத்திலே வாழ்ந்த வாழ்கின்ற சான்றோர்களின் வரலாறுகள் எல்லாம் முன்மாதிரியாக்கப்படல் வேண்டும்.

இவற்றில் இன்னொரு வகை, குறிப்புக்களால் முன் மாதிரி காட்டுவது (Symbolic) உதாரணமாக, தொலைக்காட்சியில் ஒரு நல்ல உபயோகமான பொருளை விளக்கி, அதைப் பயன்படுத்தினால் வளர்ச்சி அடையலாம் என்று குறிப்பிடுவது போலாகும். இதை விட மனதிற்கு உகந்த ஒருவர் ஒன்றைச் சொல்லும் போது இன்னும் ஈடுபாடு வரும். நல்ல காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை உணவில் சேர்ப்பது, விட்டமின்களை (Vitamins) புரதங்களை சேர்ப்பது போன்றவற்றை அத்துறைசார் வல்லுநர்கள் எடுத்துச் சொல்லும் போது அதிக நம்பிக்கை ஏற்படும்.

முன்மாதிரிகளைக் கவனித்துக் குழந்தைகள் கற்றுக் கொள்வதால் தான், பெற்றோர் ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. எனவே தவறான முன்மாதிரிகள் கெடுதலையும், நல்ல முன் மாதிரிகள் நன்மையையும் தரும் சூழலும் ஏற்படுகிறது. இக்கருத்துக்களைச் சமுதாயம் மனதிற் கொண்டு குழந்தைகளது கல்வி, அறிவு, ஆற்றல் பெருகி வளர ஒத்துழைக்க வேண்டும்.

கல்வி எனும் செல்வம் உயர்ந்தது. எந்நிலையிலும் வளர வேண்டியது. வளர்க்கப்பட வேண்டியது. Education என்பதற்கு "To Train Out" என்று ஒரு பொருள். அதாவது பயிற்றுவித்தல். கல்வி ஒவ்வொரு தனி மனிதனதும் வாழ்வாதாரம். ஒரு சமூக சீர்திருத்தம். சமுதாயத்தைப் பல்வேறு கோணங்களில் உருவாக்கும் விதை. ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கும், சமூக மாற்றத்துக்கும் தூண்டுதலாக உள்ள சக்தி வாய்ந்த ஆயுதம்.

*ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து.*

என்பது திருவள்ளுவர் வாக்கு. ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வி ஏழு பிறப்பினிலும் அவனைத் தொடர்ந்து சென்று அவனுக்குத் துணை செய்கிறது. இன்றைய விஞ்ஞான அறிவும், நிலைபெற்று விளங்கும் மெய்ஞ்ஞான அறிவும் இதற்குப் பல சான்றுகள் தரும். கல்வி ஒரு குழந்தையின் உடல், உள்ளம், ஆன்மா (Physical, Mental, Spiritual) இம் மூன்றின் சிறப்பானவைகளை ஒட்டு மொத்தமாக வெளிக் கொணரும் என்பது காந்தி அடிகள் வாக்கு.

"ஒரு மனிதனின் குணாதிசயங்களைக் கட்டி எழுப்புவதே உண்மையான கல்வி. அதாவது ஒரு மனிதன் மனோ பலத்தை விருத்தி செய்து, புரிந்து கொள்ளும் சக்தியை விரிவாக்கி, தன் சுயதிறமையால் நிலை நிறுத்தும் திறன் உடையதாகக் கல்வி விளங்க வேண்டும்" என்பது சுவாமி விவேகானந்தரது வீர முழக்கம்.

இக்காலக் குழந்தைகளைப் பிற்கால மேன்மக்களாக, ஒழுக்க சீலர்களாக, சமூக அந்தஸ்து உள்ளவர்களாக, நாட்டுப்பற்று உடையவர்களாக, சிறந்த தலைவர்களாக உருவாக்கும் திறன் கொண்டது கல்வி. "Education is the Chief Defence of a Nation" (ஒரு நாட்டைப் பாதுகாக்கும் ஆயுதம் கல்வி) என்பது ஓர் ஆங்கில முதுமொழி.

எனவே, கல்விப் பணி என்பது மிகவும் கடினமான பணிகளில் ஒன்று. ஒரு தேசத்தின் வளர்ச்சி ஒரு வகுப்பறையிலிருந்து தொடங்குகிறது. இந்தக் கல்விப் பணியில் மிக மிக முக்கிய பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்கள்.

"Teaching is a Profession Not a Job" என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் செயலாற்றுவதற்கான சகல வளங்களையும் அவர்கள் தேடிக்கொள்ள வேண்டும்.

கல்வியில் மாணவர்கள் ஆசிரியர்கள் ஒத்துணர்வு, நல் விளக்கம், பரஸ்பர நம்பிக்கை மிக மிக முக்கியமானவை. ஆனால் அண்மைக்காலத்தில் ஆசிரியர், மாணவர் உறவு அநேகமாக எப்போதும் சர்ச்சைக்கு உள்ளாகும் ஒரு நிலையாக உள்ளது. இங்கு மாணவர்களை ஆசிரியருக்கு எதிராக, அல்லது ஆசிரியர்களை மாணவர்களுக்கு எதிராக நிறுத்தி வைத்தே குற்றம் சாட்டப்படுகின்றது. ஆசிரியர், மாணவர் உறவு என்பது இன்றைய சமூக அமைப்பால் நிர்ணயமாகின்றது என்ற உண்மையை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆசிரிய, மாணவர்கள் உறவின் விரிசலுக்கு இன்றைய கல்வி முறையும் காரணமாகலாம். சமூக நலனை விட

**வைத்திய நிபுணர்**
**த.பேரானந்தராசா**
**M.B.B.S., M.D. (Medicine)**

தனிப்பட்ட நலன் சார்ந்த கல்வி முறையால் ஆசிரியர், மாணவர் உறவிலும் சுயநலமே பொதுவாகி விடுகின்றது.

எங்கள் ஆசிரியப் பெருமக்கள் இவற்றை உணர்ந்து எங்கள் குழந்தைகள் மனிதர்களாக, மனித நேயத்துடன் கூடியவர்களாக வளரக்கூடிய வகையில் அவர்களைப் பரிவுடன் விளங்கிக் கல்விப் புகட்டுதல் அவசியம்.

இன்றைய எங்கள் கல்வி முறையில் தனியார் கல்வி (Tutory Education) கடந்த சில வருடங்களில் ஒரு புற்றுநோயாகி, அதுவே கல்விக்கு இடையூறு தருகிறது. இந்த வர்த்தகக் கல்வி முறை சுயநலக்கொள்கையைத் தேசியமயமாக்கியுள்ளது. இது தனிப்பட்ட ஆசிரியரின் விருப்பு, வெறுப்பு சார்ந்த ஒன்றல்ல. சமூக அடிப்படைதான் இதை உருவாக்குகிறது. முன்னரை விட மிகக் குறைந்த எண்ணிக்கையிலான (Doctors, Engineers) வைத்திய நிபுணர்கள், பொறியியல் நிபுணர்கள் இடங்களைப் பிடிக்க பலர் கடுமையாகப் போராடுகின்றனர். இதனால் மனப்பாடக் கல்வி முறை மிகவும் கூர்மை அடைகிறது. மனப்பாட மூலமாக மாணவ கணனிகளை உருவாக்கும் சுயநலம், தனிப்பட்ட ஆசிரியர்கள் மூலமான கல்வி போதித்தல் வெற்றியின் இலட்சியமாகின்றது.

ஆசிரியர்கள் தனிப்பட்ட (Tutory) கல்வி நிலைய மாணவனை உருவாக்கப் பாடசாலையைப் பயன்படுத்துகின்றனர். இது இன்று இங்கு ஒரு நோயாகிவிட்டது. இதன் மூலம் ஆசிரியர்கள் பாடசாலையில் கற்பித்தல் என்பதைப் படிப்படியாகக் கைவிடுகின்றனர். இதனால் பாடசாலைகளில் ஆசிரியர், மாணவர் உறவில் மாற்றம் நிகழ்கின்றது. பாடசாலையில் ஆசிரியர், மாணவர் உறவு இதற்குள் மாறும் போது பணம் கொடுத்துக் கல்வி பெற முடியாத ஏழை மாணவர்கள் நிலை பரிதாபத்துக்கு உரியதாகிறது.

எங்கள் சரியான கல்வி என்பது எமது சமூக பொருளாதார தேவைக்குள்ளும் அதை வளர்த்தெடுப்பதை அடிப்படையாகவும் கொண்டிருக்க வேண்டும். கல்வி மக்களின் அடிப்படையான வாழ்வுடன் இணைந்ததாக உழைப்புடன் நெருக்கமானதாக இருக்க வேண்டும். சமுதாயம் உயர்ந்த உலகப் பண்புகளைக் கைக்கொள்ளும் முறையை நோக்கி எமது கல்வி முன்னேற வேண்டும். கல்வி கற்பித்தல், மீளக் கற்றல், [illegible] என்று நடைமுறை வாழ்வு சார்ந்து ஆசிரிய, மாணவர்களை [illegible] வேண்டும்.

ஆசிரியர்களே, மாணவர்கள் புரிந்துணர்வு மூலம்தான் வளமான கல்வியைப் பெற முடியும். மேற்குலகக் கல்விச் சிந்தனையாளர்களில் ஒருவரான மார்க் வான் டோறென் என்னும் அமெரிக்கர்.

"கல்வி மக்களின் சக்திகளை நிறைவாக்க விளைகிறது. எங்கள் மாணவர்களுக்கு அவர்கள் அறிவை எவ்வாறு பயன்படுத்துவது, அவர் தம் ஆற்றலை எவ்வாறு உபயோகிப்பது என்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். நிச்சயமாக எங்களுக்கு ஆக்கபூர்வமாக, ஆய்வு செய்து நீதி, நியாயம் கொண்ட தீர்வுகளை எடுக்கக் கூடிய நல்ல அறிஞர்கள் வேண்டும். அதேபோல் தங்கள் தொழில் மூலம் சக்தி ஈட்டக்கூடிய மக்களும் எமக்கு வேண்டும். எல்லாவிதமான கல்வி முயற்சிகளும் ஒரு தனி மனிதனின் வளர்ச்சிக்கு அவசியம் என்பது என் நம்பிக்கை. ஆனால் அதே சமயம் எங்கள் மாணவர்களுக்கு அவர்கள் பெற்ற அறிவை உபயோகித்துத் தங்கள் தொழில் திறமைகளை அதிகரிக்கலாம் என்பதைக் காட்ட வேண்டிய அவசியமும் எமக்கு உண்டு. மாணவர்கட்கு தொழிலில் பயன்படுத்தக்கூடிய திறமைகள் அவசியம். சமுதாயத்திற்குத் திறமை உள்ள உழைப்பாளிகள் அவசியம்" எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த வகையில் எதிர்காலப் புதுப் பிரச்சினைகளை ஆயத்தம் செய்யும் சமூகத்தின் கர்த்தாக்களே ஆசிரியர்கள். ஆசிரியர்கள் அந்த சமூகத்தின் உட் செல்லும் வழியை மாணவர்கள் காண்பதற்கு உதவும் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறார்கள்.

எனவே ஒரு நாட்டில், ஒரு சமூகத்தில் எவ்வகையிலும் கல்வி மிக முக்கியமான ஒன்று. இந்தக் கல்வியை வழங்கும் ஆசிரியர்கள் பணி போற்றப்பட வேண்டிய ஒன்று. நல்ல கல்வியை மாணவர்கள் பெறவும், அதை நல்ல முறையில் ஆசிரியர்கள் அவர்களுக்கு வழங்கவும், இருவரிடையேயும் ஒத்துணர்வு, நல்விளக்கம் ஏற்பட பின்வரும் குறிப்புக்களை ஆசிரியர்கள் பின்பற்றி இரு சாராரிடையேயும் நல் விளக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தலாம்.

- ஒவ்வொரு மாணவனையும் பெயர் சொல்லி அழையுங்கள்.
- உங்கள் மாணவர்களின் அபிலாஷைகள், பொழுதுபோக்குகள், ஆக்கங்கள் என்பன பற்றி அறிந்து கொள்ளுங்கள்.
- பொருத்தமான உதாரணங்களை ஆக்கி உபயோகியுங்கள்.
- வகுப்பிற்கு நேரம் முந்தி வந்து காலம் தாழ்த்தி இருந்து மாணவர்களுடன் உரையாடுங்கள்.
- உங்கள் பாடக்கொள்கைகளை நன்கு விளக்குங்கள்.
- ஒன்றிணைந்து செயற்படுங்கள்.
- மாணவர்களது குறிப்புக்கள், வினாக்கள் ஆகியனவற்றைப் பாராட்டுங்கள்.
- கற்பித்தலில் உற்சாகமும், உங்கள் பாடத்தில் ஆர்வமும் கொண்டிருங்கள்.
- ஹாஸ்ய உணர்வை இடையிடையே கொள்வதன் மூலம் கற்பதை இலகுவாக்குங்கள்.
- பணிவுடனும், தேவை ஏற்படின் நீங்கள் தாழ்மையுள்ளவராகவும் இருங்கள்.
- மாணவர்களை அன்போடும், கனிவோடும், பாசத்தோடும் பாருங்கள்.
- மாணவர்களை பண்புடன் நடத்துங்கள்.
- புன் சிரிப்பை மறக்க வேண்டாம்.

மாணவர் கல்வி கற்பதன் மூலம் பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் பெற்று, நல்ல பதவியில் இருக்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு கற்றால் வாழ்வில் வெற்றி பெறலாம்.

அதற்கு மாணவர்கள் செய்ய வேண்டியது-

- கற்கும்போது ஆசிரியர் கற்பிப்பதை அவதானமாகக் கேட்டு கற்க வேண்டும்.
- படிப்பது விளங்காவிடின் மீண்டும் கேட்டு விளங்கிக் கொள்ள வேண்டும்.
- அன்று படிக்கும் பாடங்களை அன்றே வீட்டில் மீண்டும் படிக்க வேண்டும்.
- நேரசூசியின்படி படிக்க வேண்டும்.
- படிக்கும் நேரங்களில் கவனத்தைத் திசை திருப்பாது படிக்க வேண்டும்.
- தேவையற்ற வீணான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதைத் தவிர்த்தல்.
- கையடக்கத் தொலைபேசியை கூடிய வரை தவிர்த்தல்.
- படிக்கும் பாடங்களை சிறு குறிப்பெழுதிப் படிக்க வேண்டும்.
- கடந்தகால வினாப்பத்திரங்களைச் செய்து பார்த்தல் வேண்டும்.
- எந்நேரத்திலும் பரீட்சைக்குத் தயாராக இருத்தல் வேண்டும்.
- பரீட்சையில் உரிய வினாக்களைக் குறித்த நேரத்தில் செய்ய வேண்டும்.
- தூக்கக் கலக்கத்தில் படிக்காதீர்கள். அதில் எவ்வித பயனும் இல்லை.
- அதிகாலையில் விழித்தெழுந்து படியுங்கள். பூரண பயன் உண்டு.
- ஏனைய தேவைகளை விட படிப்புக்கு அதிக நேரம் செலவிடுங்கள்.

இவற்றைக் கடைப்பிடித்தால் வாழ்வில் நிச்சயம் வெற்றி பெறலாம் என்று கூறிக்கொண்டு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எல்லோரையும் கொண்ட சமூகம் உயர்வு பெறுக என மனதார வாழ்த்தி அமைகின்றேன்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹப்புகஸ்தன்ன தோட்டத் தொழிலாளர் உண்ணாவிரதம்; நாளொன்றுக்கு 19 கிலோ நிபந்தனைக்கு எதிர்ப்பு

நுவரெலியா, ஜூன் 28

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்துக்குச் சொந்தமான ஹப்புகஸ்தென்ன தோட்டத் தொழிலாளர்கள் ஹட்டன் தொழில் காரியாலயத்தின் முன்னால் கடந்த புதன் கிழமை மாலை உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் பணிபுரியும் தோட்டத்தில் நாளொன்றுக்கு தொழிலாளியொருவர் குறைந்த பட்சம் 19 கிலோ தேயிலைக் கொழுந்து பறிக்க வேண்டும் என நிர்வாகம் நிர்ப்பந்தித்ததையடுத்தே இந்த உண்ணாவிரதம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு 19 கிலோ கொழுந்தைப் பறிக்க முடியாத தொழிலாளிகளின் நாளாந்த சம்பளத்திலிருந்து முப்பது ரூபா வெட்டப்படுகின்றது என்றும், அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அண்மையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மீளாய்வு செய்யப்பட்டபோது குறைந்த பட்சம் நாளொன்றுக்கு 16 கிலோ கொழுந்து பறிக்கப்படவேண்டும் என இணக்கம் காணப்பட்டது.

எனினும், தங்கள் தோட்ட நிர்வாகம் அதை 19 கிலோ

வாக அதிகரித்துள்ளது என்றும் இது நியாயமற்ற செயல் என்றும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்த தொழிலாளர்கள் தெரிவித்தனர். (ளி)

# மாவனல்லையில் வாசிகசாலை

கண்டி, ஜூன் 28

மாவனல்லை நகரில் பல வசதிகளையும் கொண்ட வாசிகசாலை ஒன்றை நிறுவுவதற்கு மாவனல்லை பிரதேசசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்பொருட்டு தற்போது பெலிகம மனையில் சுமார் எட்டு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் மூன்று மாடிக்கட்டடத்தின் ஒரு பகுதி ஒதுக்கப் படவுள்ளது.

மும்மொழிகளிலுமான - பெறுமதி வாய்ந்த பல நூல்களுடன் கணினி வசதிகளும் கொண்ட தாக பிரஸ்தாப நூல் நிலையம் அமையவுள் ளது - என பிரதேச சபைத்தலைவர் இந்துநில் சாந்த தெரிவித்தார். (ளி)

# மாத்தளை மாவட்டத்தில் புகையிலைச் செய்கைக்குத் தடை

மாத்தளை, ஜூன் 28

மாத்தளை மாவட்டத்தில் புகையிலைப் பயிர்ச்செய்கைக்கு முற்றாகத் தடை விதிப் பதற்கு மாவட்ட விவசாயக்குழு தீர்மானித்துள்ளது.

புகையிலைப் பயிர்ச் செய்கையைப் பற்றி வெளியிடப்பட்டுள்ள விசேட அறிக்கை யொன்றின் அடிப்படையிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது என மாத்தளை அரச அதிபர் கமினி செனவிரத்ன தெரிவித்தார்.

புகையிலையை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் சகல பொருள்களும் மனிதனுக்கு ஊறு விளைவிப்பவை என்பதால் அதனைத் தடை செய்யத் தீர்மானித்துள்ள தாக மாவட்ட விவசாயக்குழு தெரிவித்துள் ளது.

புகையிலைச் செய்கையால் மண்ணரிப்பு, மந்தவளர்ச்சி, சுற்றாடலில் இரசாயனம் சேரல் போன்ற தீமைகள் ஏற்படுவதுடன், பயிர்ச்செய்கை யில் ஈடுபட்டவர்கள் புகைப்பழக்கத்துக்கு அடிமையாதல் போன்ற பல்வேறு தீமைகளும் ஏற்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இத்தீய விளைவுகளை கருத்தில் கொண்டே புகையிலை உற்பத்திக்கு முற்றாகத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கலேவெல, களுந்தேவ, கந்தலம், சீகிரிய மற்றும் தேவு ஹூவ, வஹ கோட்டே, மாதி பொல உட்பட பலபிர தேசங் களில் புகையிலை உற்பத்தி மேற் கொள்ளப்பட விருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விசேடமாக முஸ்லிம் வியாபாரிகள் புகையிலை உற்பத்தியிலும், விற்பனையிலும் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர் - எனக் கூறப்படுகிறது. (ளி)

# கப்பம்கோரி மூன்றுவயதுக் குழந்தையை கடத்தியவர் வெல்லவாய நீதிமன்றில் சரண்

மொனராகலை, ஜூன் 28

மொனராகலையில் கப்பம்கோரி மூன்று வயதுக் குழந்தையைக் கடத்தினார் எனக் கூறப்படும் சம்பவத்தில் சந்தேகநபர் சட்டத் தரணியின் மூலமாக வெல்லவாய நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

சரணடைந்த சந்தேகநபரை ஜூலை மாதம் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு மாறு வெல்லவாய பதில் நீதிவான் அநுர தேசப்பிரிய உத்தரவிட்டார்.

தமண வரிப்பணம் சேனை, ஆப்தீன் வீதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

கடந்தவாரம் மிகுந்த பரபரப்பை ஏற் படுத்தியிருந்த இக்கடத்தல் சம்பவத்தில் புத்தல முஸ்லிம் கிராமத்தைச் சேர்ந்த ஏ. எம். ரஷ்மி எனும் மூன்று வயது ஆண்குழந்தை கடந்த 17 ஆம்திகதி கடத்தப்பட்டிருந்தது.

குழந்தையை விடுவிக்க வேண்டுமெனில் ஏழரை லட்சம் ரூபாவைக் கப்பமாகத் தர வேண்டுமென சந்தேகநபர் குழந்தையின் பெற்றோரை மிரட்டினார் எனக் கூறப்பட்டது.

பதற்றமடைந்த பெற்றோர் தரகர் ஒருவர் மூலமாக கடந்த 20 ஆம் திகதி பணத்தை அனுப்பினர். குழந்தை அம்பாறையில் வைத்து விடுவிக்கப்பட்டிருந்தது.

கப்பப் பணத்தைப் பெற்றபின் சந்தேகநபர் தலைமறைவானார் எனக் கூறப்பட்டது.

இந்த நிலையில் சந்தேகநபர் சட்டத் தரணி ஊடாக நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

சந்தேகநபரிடம் வாக்கு மூலமொன்றைத் தாழ் பெறவுள்ளனர் எனப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். அதையடுத்துச் சிறைச்சாலையில் அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்ய நீதிவான் அனுமதி வழங்கினார். (ளி)

# மட்டக்களப்பில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 23, 963 வீடுகள் நிர்மாணம்

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப் பேரலைத் தாக்கத்தினால் வீடுகளை இழந்த அனைவருக்கும் புதிதாக வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் 8 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆழிபேலையால் அழிக்கப்பட்ட 23,ஆயிரத்து 962 வீடுகளை அரசும், உள்நாட்டு, வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களும் நிர்மாணித்துக் கொடுத்துள்ளன என மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் எஸ்.ஜெகநாதன் தெரிவித்தார்.

வாகரையில் 3ஆயிரத்து 254 வீடுகளும், மட்டக்களப்பு நகரில் 6ஆயிரத்து 010 வீடுகளும், களுவாஞ்சிக்குடியில் 6ஆயிரத்து 176 வீடுகளும், ஆரையம்பதியில் 3ஆயிரத்து 147 வீடுகளும், காத் தான்குடியில் 3ஆயிரத்து 171வீடுகளும், வாழைச்சேனையில் 1ஆயிரத்து 648 வீடுகளும், செங்கலடியில் 498 வீடுக ளும், கிரான் செயலகப்பிரிவில் 58 வீடுகளும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஆராயும் உயர் மட்ட மாநாடு மாவட்ட அரச அதிபர் எஸ்.அருமைநாயகம் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன், மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர் எஸ்.ஜெகநாதன், நேர் மாவட்ட பணிப்பாளர் கே.பாக்கியராஜா ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண் டனர். (ளி)

# மூதூர் வியாபார நிலையங்களில் பொருள்களின் விலைப்பட்டியல் இல்லை

திருகோணமலை, ஜூன் 27

திருகோணமலை, மூதூர் பிரதேசங்களிலுள்ள வியாபார நிலையங்கள் பெரும்பாலானவற்றில் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் பின்பற்றப்படாததால் அக்கடைகளில் பொருள்களின் விலைப்பட்டியல் எதனையும், காணமுடியாதிருப்பதாகப் பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

2003 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கப் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் அரிசி, மா, சீனி, வெங்காயம் முதலான அத்தியவசிய உணவுப் பொருள்களின் விலை விவரம் பாவனையாளர் பார்வைக்கு வைக்கப்படவேண்டும். மேலும்,14 வகையான பொருள்களின் விலைகளும் காட்சிப்படுத்தப்படவேண்டும்.

திருகோணமலை, மூதூர் பிரதேசங்களிலுள்ள சில வியாபார நிலையங்களில் விலை குறிக்கப்படாத பொருள்களின் பெயர்ப் பட்டியலே காட்சிப்படுத்தப்பட்டுள்ள தா கவும், வர்த்தகர்கள் தாம் நினைத்தவிலைக்கு குறித்த பொருள்களை விற்பனை செய்கின்றனர் எனவும், தெரிவிக்கும் பாவனையாளர்கள், அதிகாரிகள் இது குறித்து கவனம் செலுத்தவேண்டியது அவசியம் எனப் வலியுறுத்துகின்றனர். (ளி)

# ஏறாவூர் பிரதேசப் பாடசாலைகளுக்கு மீண்டும் போஷாக்கு மாத்திரை வழங்க ஏற்பாடு

மட்டக்களப்பு, ஜூன் 28

ஏறாவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கு அடுத்த மாதம் தொடக்கம் மீண்டும் போஷாக்கு மாத்திரைகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இது தொடர்பாக வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தின் போதே, போஷாக்கு மாத்திரை விநியோகத்தை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். ஜெயினுதீன் உட்பட பாடசாலை அதிபர்களும், பொதுச் சுகாதார பரிசோதகர்களும் கலந்து கொண்டனர்.

ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 18 பாடசாலைகளின் மாணவர்களுக்கு ஏற்கனவே போஷாக்கு மாத்திரைகள் வழங்கப்பட்டு வந்த போதிலும், மீராகேணி மாக்கான் மாக்கார் வித்தியாலயத்தில் போஷாக்கு மாத்திரைகள் உட்கொண்ட மாணவர்கள் திடீர் சுகவீனமடைந்ததையடுத்து மாத்திரை வழங்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இந்த விடயம் தொடர்பாக பகிரங்க அறிவித்தல் மூலமாக பொதுமக்களைத் தெளிவுபடுத்திய பின்னர் தற்போது, போஷாக்கு மாத்திரை வழங்கும் வேலைகளை மீள ஆரம்பிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, மாணவர்களுக்கான போஷாக்குணவு வழங்கும் நடவடிக்கைகளின்போது, சுகாதார அதிகாரிகளின் மேற் பார்வைகளை அதிகரிப்பது பற்றியும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ளி)

# நன்னீர் மீன் உற்பத்தி மட்டக்களப்பில் அமோகம்

மட்டக்களப்பு,, ஜூன் 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று தசாப்த கால யுத்தம் காரணமாகப் பாதிக்கப் பட்டிருந்த நன்னீர் மீன் உற்பத்தித் தொழில் மீண்டும் அபிவிருத்தி காணத் தொடங்கியுள்ளது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள் குடியேறிய கொக்கொட்டிச்சோலை, வெல்லாவெளி, வவுணதீவு, வாகரை, செங்கலடி, கிரான், படுவான் கரை ஆகிய பிரதேசங்களிலுள்ள பெரிய, சிறிய, நடுத்தர குளங்களில் மீன் வளர்ப்பு நடைபெறுகின்றது.

விரால், குறட்டை, ஜப்பான், பனையான், மீசைப்பனையான், சுங்கான் உட்பட பலவகை மீன்வகைகள் குளங்களில் வளர்கின்றன.

குளங்களில் இந்த மீன் வகைகளை வளர்ப்பதற்கு மாவட்ட கமநல சேவைகள் அபிவிருத் தித் திணைக்களம் கடன் மற்றும் மானிய உதவிகளைச் செய்து வருவதாக திணைக்கள பிரதி ஆணையாளர் டாக்டர் ஆர்.ருஷாங்கன் தெரிவித்தார்.

குளத்து மீன் உற்பத்தி காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பல்லாயிரம் குடும்பங்கள் நாளாந்த வருமானத்தைப் பெற்றுவருகின்றன. (ளி)

# அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் கல்முனை வலயத்திற்கு 04 தங்கப் பதக்கங்கள்

மட்டக்களப்பு,, ஜூன் 28

2009ஆம் ஆண்டுக்கான அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டியில் கல்முனை வலயத்திற்கு 04 தங்கப் பதக்கங்களும், 02 வெள்ளிப் பதக்கங்களும், 01 வெண் கலப்பதக்கமும் கிடைத்துள்ளன என கல்முனை வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் கண்.வரதராஜன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடந்தவாரம் நடைபெற்ற போட்டிக்குச் சென்றுவந்த ஆசிரிய ஆலோசகர் வரதராஜன் மேலும் கூறுகையில்,

தேசிய நிலைப்போட்டி 03 குழு நிகழ்ச்சிகளுக்கு பதக்கங்கள் கிடைத்தன. இதனை யிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டுகிறேன் - என்றார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறைகள் வாடகைக்கு** யாழ்.நகரில் தங்கி இருந்து கல்வி கற்கும் அல்லது தொழில் புரியும் மாணவர்கள் மற்றும் ஏனையோருக்கு ஏற்ற வகையில் அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- 67/08, 2ஆம் ஒழுங்கை, சீவிவாசகம் றோட், கொட்டடி. 0770770529, 0777283811

ஜக்பொட் பரிசு ரூ. 10,985,425/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 135082 | 20/- | 2,701,640/- |
| 2 இல | 9692 | 100/- | 969,200/- |
| 3 இல | 200 | 1,000/- | 200,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 5193 | 40/- | 207,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 345 | 1,000/- | 345,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,985,425/- | - |
| 1 இல + போனஸ் இல | 6442 | 100/- | 644,200/- |
| 2 இல + போனஸ் இல | 292 | 500/- | 146,000/- |
| 3 இல + போனஸ் இல | 02 | 100,000/- | 200,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 273 | 200/- | 54,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 20 | 1,500/- | 30,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 02 | 150,000/- | 300,000/- |
| மொத்தம் | | | 6,918,360/- |
| தங்க நாணயங்களின் பெறுதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 157566 | | 7,518,360/- |

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாந்தோட்டை | 302049997-8-41 |
| கம்பஹா | 302049581-9-34 |
| அம்பாறை | 302050833-3-09 |
| திருகோணமலை | 302049349-8-04 |
| யாழ்ப்பாணம் | 302047235-3-16 |
| வவுனியா | 302049118-7-18 |
| களுத்துறை | 302049683-1-42 |
| பொலன்னறுவை | 302050543-7-23 |
| காலி | 302052709-4-33 |
| இரத்தினபுரி | 302050039-6-04 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

**ரூ. 11,353,975/-**

ஜதா நீர டிக்கட்டுகள் 2010 ஜூன் 30 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
15ம், சுகாதார சேர்மன் கதி டி சில்வா மாவத்தை, கொழும்பு - 02
தொலை: 2333567

டயிடஸ் ஸ்ரோஸ்
2439422


## தவறிவிட்டன

வேலாயுதம் சந்திரசிங்கம், சந்திரசிங்கம் சுசீலாதேவி ஆகியோரின் இலங்கை தேசிய அ.அட்டைகளும், கனேடிய அடையாள அட்டைகள் மற்றும் கடவுச் சீட்டுக்கள் என்பன அடங்கிய பேர்ஸ் நயினாதீவுக்குச் சென்று வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- திரு.கு.மோகனா
193, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P.No- 0778733614,0776560574

## ஏனிந்த மின்தடை? கிடைக்குமா சரியான விடை

வண்ணை, ஜூன் 28

குருநகர், சின்னக்கடை மற்றும் யாழ். 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்கு வீதிகள் அடங்கிய பகுதிகளில் அடிக்கடி மின் வெட்டு நடைபெற்று வருவதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

சமீபகாலத்தில் இரவு, பகல் என்றில்லாமல் திடீர் திடீரென எந்த நேரங்களிலும் மின்வெட்டை மேற்கொள்வதால் மாணவர்களும், வர்த்தக நிலையங்களும் பாதிப்புற்று வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின் விநியோகம் சீரடைவதற்கு முன்பாக இருந்துவந்த மின் தடையை மிஞ்சியதாக இப்பொழுது மேற்கொள்ளப்படும் மின்தடைகள் எந்தவித முன்னறிவித்தலும் இல்லாமல் நடத்தப்படுவதாகவும் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-160)

## மாணவி காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

உழவு இயந்திரப்பெட்டியிலிருந்து பயணித்த பாடசாலை மாணவி ஒருவர் தவறிவீழ்ந்து காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை காலை சாவகச்சேரி மருதடிப் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.சகிலா (வயது 12) என்னும் மாணவியே காயமடைந்த நிலையில் சாவகச்சேரிவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-207)

## மணவாளக் கோலம்

வண்ணை, ஜூன் 28

அளவெட்டிதெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மணவாளக்கோல விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் பூசை ஆரம்பமாகும். 9 மணிக்கு விசேட சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் அதனை அடுத்து நாராயண சுவாமி தேவியரோடு வீதியுலா எழுந்தருளுதலும் மகேஸ்வர பூசையும் நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளன. (எ-160)


## வாழ்த்தி வரவேற்கின்றோம்

அதிபர் பதவியுயர்வுபெற்று எமது பாடசாலையில் 16.06.2010 புதன் கிழமை தொடக்கம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு.இராஜரட்ணம் புஸ்பரட்ணம் அதிபர் (B.Sc., Dip.-in-Ed.,SLPS-2-II) அவர்களை வாழ்த்தி வரவேற்பதோடு மேலும் அவர் பல படிகள் முன்னேறி உயர்வடையும் அதேசமயம் எம் பாடசாலையும் வளர்ச்சியுற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வணங்கி நிற்கின்றோம்.

ஆசிரியர் குழுகம்

[99924] யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் த.க.வி. ஆனைக்கோட்டை.

# INDIAN - இந்திய STUDENT VISA

A/L சித்தியடைந்த மாணவர்கள் இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து Engineer / Graduate ஆக வாய்ப்பு

Anna Engineering University / Bangalore University

University Grant Commission Approved Degrees

- I.T Engineering, • Computer Science Engineering,
- Electronics and Communication Engineering, • Mechanical Engineering,
- B.Sc. (Genetics), • B.Sc. (Biotechnology), • B.Sc. (Microbiology),
- B.Sc. Physiotherapy • B.Sc. Nursing • BBM. / BBA • B.Com (Computers)
- B.Sc. (Fashion & Apparel Design), • B.A. (Journalism),
- BHM. (Bachelor of Hotel Management), • BCA. (Computer Applicants),

Call : 077 9004194 / 0777 767818

SIC, 734, Hospital Road, Jaffna.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

25-06-2010

1202 சிவப்பு

மேடம்

06 22 33 51

ஜக்பொட் பரிசு ரூபா. 8,963,325/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 87,557 | 20/- | 1,751,140/- |
| 2 இலக்கங்கள் | 8,000 | 40/- | 320,000/- |
| 1 இல. + லக்கினம் | 7,863 | 60/- | 471,780/- |
| 2 இல. + லக்கினம் | 725 | 200/- | 145,000/- |
| 3 இலக்கங்கள் | 215 | 1000/- | 215,000/- |
| 3 இல. + லக்கினம் | 17 | 10,000/- | 170,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 200,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 8,963,325/- | 8,963,325/- |
| மொத்தம் | | | 12,236,245/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 104,384 | | 12,736,245/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

2010 ஜூன் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 501385616-2-16 |
| மாத்தறை | 501382934-9-40 |
| கேகாலை | 501385079-7-36 |
| மாத்தளை | 501385406-1-45 |
| கண்டி | 501383654-3-26 |

# ஆம் நாள் நினைவஞ்சலியும் 31 நன்றி நவிலலும்

எங்கள் அன்புத் தெய்வமே!
எத்தனை நாட்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எமைவிட்டு நீங்காது.

தோற்றம்
27.12.1948

மறைவு
29.05.2010

அமரர் சுந்தரப்பிள்ளை கதிரேசபிள்ளை

[முத்துலிங்கம்] (ஓய்வு பெற்ற பராமரிப்பு உத்தியோகத்தர், நீர் பாசனத்திணைக்களம்- கிளிநொச்சி, எழுதுநர், இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம்-யாழ்ப்பாணம்)

அன்னாரது பிரிவுச்செய்தி கேட்டு ஓடி வந்து உதவியோருக்கும், இறுதிக்கிரியை நிகழ்வில் கலந்து ஆறுதல் அளித்தோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு

இன்று (28.06.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய பாடசாலை வீதி,
கல்வயல், சாவகச்சேரி.
தொ.பே: 021 492 2644

குடும்பத்தினர்.



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அருளப்பு ஞாயிஸ்
அருளானந்தம் (போமன்)

கடந்த 30.05.2010 ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், தந்தி, கடிதம், ஈமெயில் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் நாளை (29.06.2010) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு தும்பளை கிழக்கு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சென்.தோமஸ் லேன், பருத்தித்துறை. குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாரை எங்கே வைப்பது

துளசியைப் பூஜை அறையில் வைக்கிறோம். கறிவேப்பிலையைச் சமையல் அறையில் வைக்கிறோம். இரண்டும் இலை தானே. இருந்தாலும் ஏன் வேறு வேறு இடம்? ஒரே இடத்தில் வைப்பதில்லையே. செருப்பை வாசலில் விடுகிறோம். பூங்கொத்தை வரவேற்பறையில் வைக்கிறோம்... இடமாற்றி வைப்பதில்லையே! ஏன்? ஒரு வீட்டில் எதை எதை எங்கே எங்கே வைப்பது என்கிற தெளிவு நமக்கு இருக்கிறது. அதாவது உயிரற்ற அஃறிணைப் பொருட்களைக் கூட எங்கெங்கே வைக்க வேண்டும் என்கிற விழிப்பு நம்மிடம் இருக்கிறது. அது இருப்பதால்தான் வீடு வீடாக இருக்கிறது.

நாம் பழகும் நபர்களையும் இதே மாதிரி எங்கே எங்கே வைக்க வேண்டும் என்று நமக்குத் தெரிய வேண்டாமா? சமத்துவம், மனிதத்தன்மை, பண்பாடு, இரக்கம் இதன் காரணமாக எல்லா மனிதர்களையும் சமம் என்று மதித்தாலும் யாரை எங்கே எப்படி வைக்க வேண்டும் என்று தெரியாததால் எத்தனை குடும்பங்கள் வீணாகிவிட்டன தெரியுமா?

கூனியை எங்கே நிறுத்தி இருக்க வேண்டும் என்று கைகேயிக்குத் தெரியவில்லை. சகுனியை எந்த இடத்தில் வைத்திருக்க வேண்டும் என்பது துரியோதனனுக்குப் புரியவில்லை. ஏன்... சூர்ப்பனகையை எங்கு நிறுத்தி இருத்திருக்க வேண்டும் என்பது அந்த ராமனுக்கே கூட விளங்கவில்லை... யாரை எங்கு வைப்பது என்பது யாருக்கும் புரியவில்லை...என்ற வரிகள் உண்மையில் எவ்வளவு அர்த்தமுள்ளவை.

பெருவாரியான அரசியல் தலைமைகள் வீணாய்ப் போனதற்குக் காரணம் எல்லை தெரியாமல் ஆட்டம் போட்ட அதிகார மையங்கள் தான் என்று வரலாறு சமாளிக்கிறது. ஆனால் அந்த மையங்களைச் சரியான இடங்களில் நிறுத்தி வைக்காத தலைமைகள் தான் அதற்கு உண்மையான காரணம்.

நாயை வாசலில் கட்டி வைக்கிறோம். பசுவைத் தோட்டத்தில் கட்டி வைக்கிறோம். பூனையை வீடு முழுவதும் உலவ விட்டாலும் சமையல் அறைக்குள் நுழையாமல் கவனமாகப் பார்த்துக் கொள்கிறோம். ஆனால் இப்படி நண்பர்களை, உறவினர்களை, பணியாளர்களை, நாம் சார்ந்த இயக்கத்தில் இருப்பவர்களை, ஏன் நமது வழிகாட்டிகளாகப் பவனிவரும் சமய குருமார்களைக் கூட எந்த எல்லையில், எந்தப் புள்ளியில் நிறுத்தி வைக்க வேண்டும் என்பது நம்மவருக்குத் தெரிய வேண்டும்....தெரிகிறதா?

பேரறிஞர் அண்ணா அமரர் ராஜாஜியுடன் கூட்டு வைத்துத் தேர்தலைச் சந்தித்த போது தந்தை பெரியாரை எதிர்க்க நேர்ந்தது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் அண்ணாவிடம் ''ராஜாஜியுடன் சேர்வது... பெரியாரைப் பகைப்பது.... தமிழினத்திற்குத் தீங்கு தராதா?'' என்று நேரடியாகவே கேட்டுவிட்டார். அண்ணா பொறுமையுடன் ''நீங்களும் இருக்கத்தான் போகிறீர்கள்... நானும் இருக்கத்தான் போகிறேன்... பொறுத்திருந்து பாருங்கள்'' என்றார். தாம் வெற்றி பெற்ற பின்னர் தம் ஆட்சியைப் பெரியாருக்கு அர்ப்பணித்தார். மூதறிஞர் ராஜாஜி சொன்ன நபர்களை அவர் சொன்ன பதவிக்கு நியமிக்க மறுத்துவிட்டார். வரலாறு அறி யும்.

இன்று பல குடும்பங்கள், இயக்கங்கள், நாடுகள் துன்பப்பட ஒரே காரணம்''யாரை எங்கே வைப்பது என்பது யாருக்கும் தெரியலே'' என்கிற அனுபவவரிகள் தான்!

*(நன்றி: சுகி.சிவம்)*

# அவமானம் ஒரு முதனம்

நீங்கள் அவமதிக்கப்பட்டவரா? பிறரால் அலட்சியப் படுத்தப்பட்டவரா? யாராவது உங்களை அவமானப்படுத்தி யிருக்கிறார்களா? 'ஆம்' என்றால் நீங்கள் அதிர்ஷ்டசாலி. முன்னேறுவதற்கான மூலப்பொருள் உங்களிடம் உள்ளது. நம்ப முடியவில்லையா? இதிகாசங்களைப் பாருங்கள்.

தாய், தந்தை யார் என்று அறிய முடியாத அனாதை என்று கர்ணனைத் துரோணர் இகழ்ந்தார். '' நீ என்ன ராஜகுமாரனா? தேரோட்டி மகன்'' என்று அலட்சியப்படுத்தினார். விளைவு..? வளர்ந்தான்... வானளாவ வளர்ந்தான். தேரோட்டி மகன் என்று கேலி பேசப்பட்டவன், சல்லியன் என்ற அரசன் தேரோட்டத் தேரேறி வந்தான். இகழ்ச்சியே அவனது வாழ்வைப் புகழ்ச்சி நோக்கிய பயணம் ஆக்கியது. எப்படி?

அள்ளிக் கொடுத்து, அள்ளிக் கொடுத்து வள்ளலாக வாழ்ந்தான். அவனிடம் மக்கள் கையேந்தினர். புலவர்கள் கையேந்தினார்கள். அனாதை ஆக்கிய அம்மா குந்தியே கை ஏந்தினாள். அடுத்து தேவேந்திரன் வந்து, அருமை மகன் அர்ஜூனனுக்காகக் கவசகுண்டலங்களைக் கையேந்தி வாங்கினான். அதுவும் போதாது என்று அண்டசாரங்களின் அருமைத் தலைவனாம் ஆண்டவன் கண்ணனே வந்து கை ஏந்தி, '' கொடையால் விளைந்த புண்ணியத்தைக் கொடு'' என்று கேட்டார். அம்மா, அப்பா பெயர் தெரியாத அநாதை என்று அவமானப்படுத்தப்பட்ட கர்ணன், '' அம்மா தாயே, நான் அநாதை'' என்று கை ஏந்தாது அம்மா முதல் ஆண்டவன் வரை கை ஏந்திக் கேட்ட வள்ளலான வரலாற்றுக்கான வீர்ய வித்து அவமதிப்பு. அவமானம். அவமதிப்பு... அலட்சியம்....அவமானம் இவை யாவும் அக்கினிக் குஞ்சுகள். விண்ணில் பாயும் நம் வெற்றிக் கலனுக்கான எரிசக்திகள். பழைய ரயில் என்ஜினில் தகதகவென்று எரியும் நெருப்பைக் கண்டதுண்டா? அந்த நெருப்புத் தான் ரயிலை நகர்த்தும் ஜீவசக்தி. அந்த என்ஜினின் நெஞ்சில் நின்று எரியும் நெருப்பு எத்தனை நெடிய பயணத்தை நிறைவேற்றும் தெரியுமா? அப்படியே உங்கள் நெஞ்சில் எரியும் நெருப்பை, அவமதிப்பை வெற்றிக்கான எரிச்சக்தியாகும்.

ஒரு நிமிடம் அவமதித்தவர்களைப் பழிவாங்கத் துடிப்பது அறிவீனம்... அகங்காரம். அவமதித்தவருக்கு வருந்தும் படியாக ஏற்கும் படியாக வளர்வதே அங்கீகாரம். உன்னதமான முன்னேற்றம். தன்னை அவமதித்த பிரிட்டிஷ் அதிகாரியும் மதிக்கும்படி விஸ்வரூபம் எடுத்தவர் மகாத்மாகாந்தி. மாறாகப் பழிவாங்கத் துடித்தவர்கள் பாழானதுதான் மிச்சம்.

எங்கு அவமதிக்கப்பட்டரோ, அங்கு கவிஞர் தம் வெற்றியை அரங்கேற்றியிருக்கிறார். அவமானம் ஒரு மூலதனம்.. இது புரிந்தால் வெற்றி நிச்சயம்.

*(நன்றி: சுகி.சிவம்)*

# சுய விமர்சனம் - சுய தரிசனம்

வெற்றிபெற வேண்டும் என்று எல்லோரும் நினைக்கிறோம். வெற்றி என்பது இரண்டு வகைப்படும்.

ஒன்று - பிறரை வெல்வது. அல்லது பிறவற்றை வெல்வது. அதாவது உலகத்தை வெல்வது அல்லது உலகத்தில் சில விடயங்களை வெல்வது.

இரண்டாவது வகை - தன்னை வெல்வது. தன்னில் உள்ள குற்றம் குறைகளைத் தன் அறிவின் துணையால் வெல்வது.

'இக - பரசௌபாக்யம்'என்ற வாசகம் இவ்விரண்டு வெற்றிகளையே குறிக்கும். மண்ணுலக இன்பம், மோட்ச இன்பம் ஆகிய இவ்விரண்டு வெற்றிகளைக் குறிப்பன.

முருகன், வள்ளி தெய்வயானையுடன் இருப்பதைப் பார்ப்பவர்கள், 'கடவுளுக்கே இரண்டு மனைவியர்!' என்று நீட்டி முழக்குவார்கள். இது தவறு. வள்ளி மண்ணுலக இன்பங்களை விளக்கும் அருட்சக்தி. தெய்வானை விண்ணில் பிறந்து விண்ணில் வளர்ந்தவள். அவள் விண்ணுலக இன்பமாகிய மோட்சத்தை விளக்கும் அருட்சக்தி.

முருகன் உலக வாழ்வின் இன்பங்களையும், மோட்ச இன்பத்தையும் ஒருங்கே கொடுப்பவன் என்பதை விளக்கவே, இரு சக்திகளையும் தேவியராகக் கொண்டு காட்சி தருகின்றான். ஞானம் நடுவில் வேலாக விளங்குகிறது. அறிவை மையப்படுத்தியே இக பர இன்பங்கள் வழங்கப்படும்.

உலகை வெல்லவும், உன்னையே நீ வெல்லவும் சிறந்த வழிகள் இரண்டு. ஒன்று சுய விமர்சனம் - மற்றொன்று சுயதரிசனம். நம்முடைய செயல்கள், நடவடிக்கைகள் பற்றி மற்றவர் விமர்சனம் செய்தால் நமக்குப் பற்றிக் கொண்டு வருகிறது. கோபமும் ஆத்திரமும் எரிமலைக் குழம்பாய் வெடிக்கிறது. இது தவறு.

பிறர் விமர்சனம் செய்வது பிடிக்கவில்லை என்றாலும், நம்மை நாமே விமர்சனம் செய்து கொள்வது நல்ல வழி. விழிப்புக்கும் தூக்கத்துக்கும் இடையில் நிகழ்த்திய வாழ்க்கை நிகழ்ச்சிகளை நிறுத்துப் பார்ப்பது நமது கடமை.

உடம்பை அடிக்கடி நிறுத்து எடை பார்ப்பது போல ரத்த அழுத்தத்தை அடிக்கடி அளந்து பார்த்து செய்வது போல் சுய சோதனை செய்வது அவசியம்.

மனிதன் இயல்பில் ஒரு விலங்குதான். கட்டுப்பாடுகளால்தான் மனிதன். பக்குவத்தால் தெய்வம். இப்போது நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்கிற சுய பரிசோதனை அடிக்கடி அவசியம். நமது செயல்பாடுகள் மீதான சுய விமர்சனம் மிகத் தேவை.

சுய விமர்சனம் விலங்கை மனிதனாக்கும். சுய தரிசனம் மனிதனைத் தெய்வமாக்கும். விலங்கில் இருந்து மனிதனாய் - மனிதனில் இருந்து தெய்வமாய் உயர்வை நோக்கிப் பயணப்படுவதால்தான் நாம் உயர்திணை மற்றவை அஃறிணை.

இப்படியும் சொல்லலாம்.

ஆசை நம்மை விலங்காக்குகிறது.

அன்பு நம்மை மனிதனாக்குகிறது.

அருள் பழுத்தால் நாம் தெய்வமாகலாம்.

நமது உத்தேசம் என்ன?

*(நன்றி: சுகி.சிவம்)*

# நிஜத்தை நேசி... பொய்யைப் புதை

பிறர் தன்னைப் புகழ வேண்டுமென்ற எதிர்பார்ப்பு தவறே அல்ல. ஆனால் வலுக்கட்டாயமாகப் புகழவைப்பது ஓர் ஆக்கிரமிப்பு. அது உண்மையான வெற்றி ஆகாது. இன்று வெற்றி பெறாமலேயே தங்களை வெற்றியாளர்களாகக் காட்டிக் கொள்ளப் பலர் விரும்புகின்றார்கள். நட்பே! உனக்கு அப்படி ஓர் எண்ணம் வேண்டாம்.

நிஜமான புகழ் என்பது துணையோடு துய்த்த தூய கலவி. செயற்கைப் புகழ் என்பது வள்ளுவர் கூறிய உவமை போலானதாகும். பிணத்துடன் நடத்திய உடலுறவு என்னும் அசிங்கமும் அருவருக்கத்தக்கதுமானது. பலர் கூச்சமில்லாமல் பாராட்டுக்கும் புகழுக்கும் ஏற்பாடு செய்து கொள்கிறார்கள். மாலைகள் சூட மலர் பறித்துத் தருகிறார்கள். சுவரொட்டி ஒட்டக் கூழ் காய்ச்சுகிறார்கள். ஒரு விடயம் புகழுக்கான தகுதி தனக்கு உள்ளது எனப் புரிந்து வைத்திருப்பது தலைமைப் பண்பு. ஆனால் புகழைப் பிறரிடமிருந்து தேடிச் செய்வது அநாவசியம்.

தகுதி இருந்தும் செயற்கைப் புகழ் தேடுவது தவறு. தகுதியே இல்லாமல் வெற்றியாளனைப் போல் காட்டிக் கொள்வது தவறல்ல. ஆனால் அது ஆபத்தான அணுகுமுறையும்கூட.

புதுப் பணக்கார்கள் நாலு காசுகளை வீசி எறிந்தால் புகழ்ந்து தள்ளப் தமிழ்ப் பேச்சாளர்கள் சிலர் தலையைச் சொறிந்து கொண்டு முன் வருகிறார்கள். இது கறுப்புப் புகழ். கள்ளத் தொடர்பு. கண்டிக்கத்தக்கது.

பாராட்டுக்கும் புகழுக்கும் தான் தகுதி உடையவன் என்ற தெளிவு, உங்களை உயர்த்தும். ஆனால் அற்கான ஏற்பாடு உங்களைத் தாழ்த்தும்.

அண்மையில் ஒரு கொடிய நிகழ்ச்சி. என்னிடம் ஒருவர் தமது புத்தகத்தைப் பாராட்டி முன்னுரை தரும்படி கேட்டுக் கொண்டார். நான் விரும்பிய புத்தகங்களைப் படிக்கவே எனக்கு நேரம் கிடைக்காதபோது இதைப் படிக்கும் சுமை என்மீது திணிக்கப்பட்டது. எனக்கு விருப்பம் இல்லை. '' எனக்கு நேரம் இல்லை'' என மறுத்தேன். அவரோ 'படிக்கவே வேண்டாம்.... சும்மா பாராட்டி ஒரு முன்னுரை கொடுங்களேன்'' என்றார். அநியாயமில்லையா இது.

நிஜமான புகழ்... நிஜமான புகழ்... வெற்றியின் வேர். பொய்யான புகழ்... பொய்யான புகழ்... தோல்வியின் தாய்... புரிந்தவருக்கு வெற்றி நிச்சயம்.

*(நன்றி: சுகி.சிவம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## கணக்கீடு — பகுதி - I

✱ 01-20 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிக.

01. விற்பனை நாளேட்டில் பதிய பயன்படுத்துவது,
1) காசு விற்பனைகள் மாத்திரம்.
2) நடைமுறையல்லாச் சொத்துக்களின் கடன்விற்பனை.
3) கடன் விற்பனைகள் மட்டும். 4) கடன், காசு விற்பனை.
5) நடைமுறையல்லாச் சொத்துக்களின் காசு விற்பனை.

02. கணக்கீட்டுத் தகவல்களின் வகைப்படுத்தலாக அமைவது,
1) செயற்பாடு, செயற்பாடற்ற, ஏனையவை.
2) நிதிசார், நிதிசாராத்தகவல்.
3) முகாமை, நிதி, ஏனையவை.
4) முகாமை, கிரயம், செயற்பாடு. 5) நிதி, முகாமை, கிரயம்.

03. திரவத்தன்மை அடிப்படையில் சொத்துக்களின் வகைப்படுத்தலாக அமைவது,
1) வருமதி உண்டியல், காசு மீதி, வங்கி மீதி, கடன்படுநர்.
2) கடன்படுநர், வங்கி மீதி, வருமதி உண்டியல், காசு மீதி.
3) கடன்படுநர், வருமதி உண்டியல், வங்கி மீதி, காசு மீதி.
4) காசு மீதி, கடன்படுநர், வருமதி உண்டியல், வங்கி மீதி.
5) காசு மீதி, வங்கி மீதி, கடன்படுநர், வருமதி உண்டியல்.

04. Files ஒரு வருடத்திற்கும் மேலாக பாவனை செய்யக்கூடியதாக இருந்தும், இவை கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திலேயே இதன் கிரயம் இலாபநட்ட கணக்கில் முழுமையாக பதிவழிக்கப்பட்டுள்ளது. இதற்கான கணக்கீட்டினைப் பின்வரும் எந்த எண்ணக்கரு உறுதிப்படுத்துகின்றது?
1) முன்னெச்சரிக்கை. 2) கால அளவு.
3) இணைதல். 4) அட்டுறு. 5) பொருண்மை.

✱ 05 ஆம், 06 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.
2009.03.31 இல் கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ.100,000
2009.03.31 இல் மொத்தக் கடன்கொடுநர் பேரேட்டு மீதி ரூ.160,000
A - கொள்வனவு நாளேட்டின் மொத்தக் கூட்டுத்தொகை ரூ.120,000 ஆனது கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 90,000 எனப் பதியப்பட்டது.
B - பெறப்பட்ட கழிவு ரூ. 20,000 கட்டுப்பாட்டு கணக்கில் மட்டுமே பதியப் பட்டுடிருந்தது.
C - சென்மதி உண்டியல் ரூ.1,000 கட்டுப்பாட்டுக் கணக்கில் தவறவிடப்பட்டுள்ளது.

05. கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கின் 31.03.2009 இல் உள்ளபடியான சரியான மீதி,
1) 120,000/= 2) 129,000/= 3) 130,000/= 4) 160,000/= 5) 100,000/=

06. கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கை இணக்கம் செய்யும்போது மேலே தரப் பட்டு உள்ள A,B,C தகவல்களில் எத்தகவல் கடன்பட்டோர் துணைப்பேரேடு களில் சீராக்கத்தை வேண்டி நிற்கும்,
1) A,B மாத்திரம். 2) A,B,C ஆகிய எல்லாம்.
3) A,C மாத்திரம். 4) B மாத்திரம். 5) C மாத்திரம்.

07. நிமால் கம்பனியின் 2009.03.31 இல் ஏற்பட்ட தீ விபத்தால் கம்பனியின் இருப்பு களில் ஒரு பகுதி சேதமடைந்தது. தீ விபத்தினால் காப்பற்றப்பட்ட இருப்புக்களின் பெறுமதி ரூ. 50,000. இத்தினத்தில் பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றன.
2008.04.01 இல் இருப்பு ரூ. 200,000.
வருடத்திற்கான கொள்வனவுகள் ரூ. 500,000.
வருடத்திற்கான விற்பனைகள் ரூ. 1000,000.
நிறுவனத்தின் சாதாரண மொத்த இலாபம் விற்பனையில் 40% ஆகும். தீயினால் அழிவடைந்த இருப்புக்களின் பெறுமதி எவ்வளவு?
1) 100,000/= 2) 50,000/= 3) 200,000/= 4) 400,000/= 5) 500,000/=

08. ஒரு வணிக நிறுவனம் ரூ. 20,000 பெறுமதியான சரக்குகளை 10% வியாபாரக் கழிவுடன் கடனுக்கு கொள்வனவு செய்தது. மேலும் கொடுப்பனவைத் தீர்த்துக் கொள்ளும்போது 5% காசுக்கழிவினையும் பெற்றுள்ளது. கொள்வனவுக் கணக்கில் இக் கொடுக்கல்வாங்கலானது பின்வரும் எப்பெறுமதியில் பதியப்படும்?
1) 18,000/= 2) 17,100/= 3) 17,000/= 4) 18,500/= 5) 20,000/=

09. பின்வருவனவற்றுள் எது பெறுமானத்தேய்விடக்கூடிய சொத்தாகும்?
1) மீள் விற்பனை நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம்.
2) நிறுவன பாவனைக்காக கொள்வனவு செய்த நிலம்.
3) நிறுவன பாவனைக்காக கொள்வனவு செய்த பழைய கார்.
4) இருப்புக்கள். 5) நன்மதிப்பு.

10. ஓர் இயந்திரத்தின் கொள்வனவுக் கிரயம் ரூ. 360,000 ஆகவும் அதன் பயன்படு ஆயுட்காலம் 6 வருடங்களாகவும் இருந்தது. இவ்வியந்திரத்தின் முதல் இரண்டு வருடங்களுக்கான திரண்ட பெறுமானத்தேய்வு ரூ. 100,000 ஆகும். கம்பனி யானது தனது இயந்திரங்களுக்கு நேர்க்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடு கிறது. இவ் இயந்திரத்தின் பெறுமானத்தேய்விடக்கூடிய பெறுமதி யாது?
1) ரூ. 60,000 2) ரூ. 50,000 3) ரூ.300,000 4) ரூ.260,000 5) ரூ.100,000

11. நிறுவனமொன்று ரூ. 50,000இற்கு பொறியொன்றை கொள்வனவு செய்தது. இதன் பொருத்துதல் செலவு ரூ.10,000 ஆகும். 3 வருட இறுதியில் இச் சொத்து ரூ. 40,000 இற்கு விற்கப்பட்டது. இதன் பெறுமானத்தேய்வு ரூ.30,000 ஆகும். இப் பொறி விற்பனையால் எழுந்த இலாபம்/நட்டம் எவ்வளவு?
1) ரூ. 10,000 இலாபம். 2) ரூ.15,000 நட்டம்.
3) ரூ.10,000 நட்டம். 4) ரூ. 5,000 இலாபம்.
5) ரூ. 20,000 நட்டம்.

✱ 12 ஆம், 13ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன் பயனபடுத்துக.
ரஞ்சித் வியாபார நிலையத்தின் காசுப்புத்தகத்திலுள்ள வங்கிநிரல் 2009.03.31 இல் ரூ.10,000ஐக் காட்டியது. இத்திகதியில் வங்கிக்கூற்றில் காணப்பட்ட மீதி காசுப் புத்தக வங்கி மீதியுடன் உடன்படவில்லை. காசுப்புத்தகத்தை வங்கிக்கூற்றுடன் ஒப்பிடுகையில் பின்வரும் வேறுபாடுகள் வெளிப்பட்டன.
1) காசோலை வைப்புச் செய்து வசூலிக்கப்படாத காசோலை ரூ. 6,000
2) வழங்கப்பட்டு சமர்ப்பிக்கப்படாதவை ரூ. 4,000
3) காசுப்புத்தகத்தில் பதியாத வங்கிக் கட்டணம் ரூ. 500
4) வங்கியில் நேரடி வைப்பு ரூ. 3,000

12. 2009.03.31 இல் காசேட்டின் சரியான வங்கி மீதி?
1) ரூ. 8,500 2) ரூ.13,500 3) ரூ. 12,500 4) ரூ. 5,500 5) ரூ.7,500

13. 2009.03.31 இல் வங்கிக்கூற்று வங்கி மீதி யாது?
1) ரூ.10,500 2) ரூ.12,000 3) ரூ.11,000 4) ரூ.11,500 5) ரூ.13,000

✱ 14 தொடக்கம் 16 வரையான வினாக்களுக்கு விடை அளிப்பதற்கு பின்வரும் தகவல் களைப் பயன்படுத்துக.
பின்வருவன "சன்" விளையாட்டுக்கழகத்தின் கணக்குப்புத்தகங்களிலிருந்து எடுக்கப் பட்ட அங்கத்துவ பணம் தொடர்பான விவரங்கள் வருமாறு:-
2008ஆம் வருடத்தில் சேகரிக்கப்பட்ட சந்தாப்பணங்கள்
- 2007 ஆம் ஆண்டு ரூ. 2,000
- 2008 ஆம் ஆண்டு ரூ 18,000
- 2009 ஆம் ஆண்டு ரூ. 2,000
நிலுவையாக உள்ள சந்தாப்பணங்கள்
- 2007ஆம் ஆண்டிறுதியில் ரூ.5,000
- 2008ஆம் ஆண்டிறுதியில் ரூ.6,000
2007ஆம் வருடத்தில் பெறப்பட்ட 2008இற்கான சந்தாப்பணம் ரூ. 2,000.

14. வருமானத்தை இனங்காண்பதில் காசு அடிப்படையை பயன்படுத்தின், 2008ஆம் ஆண்டிற்கான வருமானச்செலவுக் கணக்கில் பதியவேண்டிய சந்தா வருமானம்,
1) ரூ.15,000. 2) ரூ.18,000. 3) ரூ.17,000. 4) ரூ.22,000. 5) ரூ.20 ,000.

15. வருமானத்தை இனங்காண்பதில் "அட்டுறு" அடிப்படையை பயன்படுத்தின், 2008 ஆம் ஆண்டிற்கான வருமானச் செலவுக்கணக்கில் பதியவேண்டிய சந்தா வருமானம்,
1) ரூ.15,000. 2) ரூ.16,000. 3) ரூ.17,000. 4) ரூ.21,000. 5) ரூ.23,000.

16. அட்டுறு அடிப்படையை பயன்படுத்தின், 2008ஆம் ஆண்டிறுதியில் ஐந்தொகையில் காட்டவேண்டிய நிலுவை சந்தா, முற்பணச் சந்தா முறையே,
1) ரூ. 6,000 உம் ரூ. 2,000 உம். 2)ரூ. 6,000 உம்ரூ.1,000 உம்.
3) ரூ. 6,000 உம் ரூ. 5,000 உம். 4)ரூ. 2,000 உம் ரூ.5,000 உம்.
5) ரூ. 5,000 உம் ரூ. 1,000 உம்.

17. A,B ஆகிய இருவரும் எழுத்து மூலமான உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தாது பங்குடமை வியாபாரமொன்றை நடத்தி வருகின்றனர். பின்வரும் தகவல்கள் கணக்குப் புத்தகங்களிலிருந்து ஏற்படுத்தப்பட்டன.

| | A | B |
|---|---|---|
| நடைமுறைக்கணக்கு செலவு மீதி 2008.04.01 இல் | 60,000 | ? |
| நடைமுறைக்கணக்கு செலவு மீதி 2009.03.31 இல் | 80,000 | ? |
| பற்றுக்கள் 2008/2009 இல் | 10,000 | 20,000 |

இக்கணக்காண்டு காலத்தில் பற்றுக்களும், இலாபங்களும் மட்டுமே நடைமுறைக் கணக்கில் பதியப்பட்டிருந்தது. 2009.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடமையின் பகிர்வுக்குரிய இலாபம் என்ன?
1) 30,000/= 2) 40,000/= 3) 50,000/= 4)60,000/= 5)70,000/=

18. 2008 டிசம்பர் மாதத்திற்கான ஊழியர்களின் மொத்தச்சம்பளம் தொடர்பான தகவல்கள் வருமாறு:-
- ஊழியர் மொத்தச்சம்பளம் ரூ.400,000.
- ஊழியர் சேமஇலாப நிதி ஊழியர் பங்களிப்பு 10%. நிறுவன பங்களிப்பு 15%.
- ஊழியர் நம்பிக்கை நிதியபங்களிப்பு 3%.
- ஊழியர் கடன் மீட்பு ரூ.60,000.
தேறிய சம்பளம், கம்பனியின் ஊழியர் தொடர்பான மொத்த செலவுகளும் முறையே,
1) 400,000/=, 454,000/= 2) 354,000/=, 472,000/=
3) 354,000/=, 473,000/= 4) 400,000/=, 472,000/=
5) 300,000/=, 472,000/=

19. வரையறுத்த சரண்யா கம்பனியானது 'பெறுமதிசேர்த்த வரி"(VAT) இற்காக பதியப் பட்டதாகும். VAT உட்பட விற்பனையானது ரூ.115,000 ஆகும். கொள்வனவு ரூபா 345,000 ஆகும். VATகணக்கின் இறுதி மீதி யாது?
1) வரவு மீதி 20,000/= 2) செலவு மீதி 30,000/=
3) செலவு மீதி 40,000/= 4) வரவு மீதி 30,000/=
5) வரவு மீதி 45,000/=

20. சாஜித் நிறுவனத்தின் டிசம்பர் மாதத்திற்கான கொடுக்கல்வாங்கல்கள் வருமாறு :-
- காணிக் கொள்வனவு தொடர்பில் இம் மாதம் ரூ.10,000 செலுத்தப்பட்டது.
- காசுக் கொள்வனவு ரூ.40,000. இவற்றில் 20,000 கிரயமுள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.
- இம்மாதத்திற்கான சம்பளம் செலுத்தியது ரூ. 4,000
- உரிமையாளர் பற்று ரூ. 8,000
- மாதத்திற்கான வாடகை ரூ. 6,000. நிலுவை ரூ. 4,000
இம்மாதத்திற்கான வருமானத்திற்கு எதிரான மொத்தச் செலவு,
1) 48,000/= 2) 34,000/= 3) 62,000/= 4) 64,000/= 5) 54,000/=

21. வணிகமொன்றின் கணக்கீட்டுப் பெறுபேறுகளை பாதிக்கின்ற நான்கு சூழல் காரணிகள் தருக.
1) ..... 2) .....
3) ..... 4) .....

22. நிறைவில் பதிவுமுறை தோன்றுவதற்கான காரணங்கள் 2 தருக.
1) ..... 2) .....

23. நடைமுறையல்லாச் சொத்தின் பெறுமானத்தேய்வுத் தொகையைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை?
.....

24. கொள்ளல் கொடுத்தல் கணக்கிற்கும்,காசுகணக்கிற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.
1) ..... 2) .....

25. பங்குடமை வியாபார அமைப்பினை இனங்காட்டுவதற்குரிய நான்கு சிறப்புப் பண்புகளைத் தருக.
1) ..... 2).....
3) ..... 4) .....

26. பொறுப்பு ஒன்றின் பண்புகள் 2 தருக.
1) ..... 2) .....

27. கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி 2008.04.01 இல் "சமன்" வியாபாரத்தின் தேறிய சொத்துக்களின் பெறுமதியைக் காண்க.

| | ரூபா |
|---|---|
| 2009.03.01 இல் உள்ள தேறியச்சொத்துக்கள் | 800,000 |
| வருட இலாபம் | 150,000 |
| உரிமையாளர் காசுப்பற்று | |
| கணக்கிலிடப்படாத, உரிமையாளரினால் பற்றுதல் செய்யப்பட்டப் பொருள் | 50,000 |

2008.04.01 தேறியச் சொத்துக்களின் பெறுமதி? ரூ. .....

(13 ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: திரு.R.ஜனதன் B.BA (Hons)
கொ/விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.
உதவி: R.ருஷாந்தி, கொழும்பு விவேகானந்தா கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கீடு, பகுதி – I: தொடர்ச்சி.....

28. பங்குடமை ஒப்பந்தத்தில் எச்சந்தர்ப்பத்தில் மூலதன வட்டி சேர்த்துக் கொள்ளப் படுதல் பொருத்தமானதாகும்?

.....

✱ 29ஆம்,30ஆம் வினாக்களுக்கு விடை எழுதுவதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

| சரக்கிருப்பு | 31.12.2007 ரூபா | 31.12.2008 ரூபா |
|---|---|---|
| மூலப்பொருள் | 60,000 | 70,000 |
| குறைவேலை (மூலச்செலவில்) | 90,000 | 40,000 |
| 2008ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவுகள் | | |
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 670,000 | |
| திருப்பி அனுப்பிய மூலப்பொருட்கள் | 30,000 | |
| மூலப்பொருட்களுக்கான உட்சுமைகூலி | 20,000 | |
| நேர்ச்செலவுகள் | 70,000 | |

29. 2008 இல் மூலப்பொருள் பாவனை ரூ.....

30. 2009ஆம் ஆண்டில் மூலச்செலவு ரூ.....

✱ 31 தொடக்கம் 35 வரையான வினாக்களுக்கு "சரி" அல்லது "பிழை" எனக் குறிப்பிடுக.

31. நிலம் பொருளியல் வாழ்க்கை காலத்தைக் கொண்டில்லாததால் நிலத்திற்கு பெறுமானத்தேய்வு இடப்படமாட்டாது. ( )

32. பெறுமானத்தேய்வு என்பது ஒரு சொத்துக் கணக்காகும். ( )

33. பங்காளர் ஒருவனது கட்டடத்தில் பங்குடமை இயங்குகின்றது. இந்த நிலையில் பங்குடைமையினால் குறித்த பங்காளனுக்கு வாடகை என்ற பெயரில் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை அப்பங்காளனின் நடைமுறைக்கணக்கில் செலவு வைக்கப் படும். ( )

34. பங்குடமையில் பங்காளர் மிதக்கும் மூலதன கணக்கினை பேணுகையில் பங்காளர் நடைமுறைக்கணக்கைப் பேணுதல் அவசியமாகும். ( )

35. காசுப்புத்தகத்தில் கழிவு நிரல் ஒரு ஞாபக நிரலாகும். ( )

✱ 36 தொடக்கம் 40 வரையான கூற்றுக்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

36. அட்டுறுசெலவுமும், முற்பண வருமானமும்.....கணக்காகும். வரு மதி வருமானமும், முற்பணச்செலவும்..... கணக்காகும்.

37. பயன்படுத்தப்பட்ட சிறப்பு நன்கொடையானது ..... உடன் சேர்க்கப் படும்.

38. இருப்பு வழக்கிழப்பு, விற்பனை விலைக் குறைதல் போன்ற காரணங்களால் இருப் பின்..... ஐ விட ..... குறைவாக இருக்கும்.

39. பங்குடமை ஒன்றில் உள்ள பங்காளர்களின் இணக்கப்பாடுகளே பங்குடமையின் .....ஆகக் காணப்படும்.

40. பங்காளரின் மூலதனத்திற்கு மேலான கடன்களுக்கு ..... வீத வட்டி வழங்கப் பட வேண்டும் என்று பங்குடமை கட்டளைச்சட்டத்தின் ..... பிரிவு குறிப்பிடு கின்றது. தகவல்களில் எத்தகவல் கடன்பட்டோர் துணைப்பேரேடுகளில் சீராக் கத்தை வேண்டிநிற்கும்.

## கணக்கீடு — பகுதி – II

✱ **முதலாம் வினா உட்பட வேறு நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01. பங்குடமையொன்றில் பாலாவும் சிவாவும் 3:2 என்னும் விகித்தில் இலாபநட்டங் களைப் பகிர்வர். இவர்களது பங்குடமை ஒப்பந்தம் வருமாறு:
1) மூலதன வட்டி ஆண்டுக்கு 6% என்பதுடன், நடைமுறைக் கணக்கு தொடர்பாக வட்டி ஏதும் இல்லை.
2) பங்காளரது மாதாந்தச் சம்பளங்கள் பாலா 1,500 ரூபா, சிவா 1,000 ரூபா.
3) பற்று வட்டி ஆண்டுக்கு 10%.

2008 மே 01 ஆம் திகதியன்று ரவி என்பவர் புதிய பங்காளியாக அனுமதிக்கப்பட்டார். அந்நாளில் சிவா பங்குடமையிலிருந்து இளைப்பாறுவதாகத் தெரிவித்தார். ரவி தனது மூலதனத் தொகையாக 50,000 ரூபாவை வழங்கினார். புதிய உடன்படிக்கை வருமாறு:
1) மூலதன வட்டிகள், பற்று வட்டிகள் மாற்றமின்றித் தொடர்ந்திருக்கும்.
2) பங்காளரது வருடாந்த சம்பளங்கள் பாலா 24,000 ரூபா, ரவி 12,000 ரூபா.
3) இலாபநட்டம் 2:1 என்றபடி பேணப்படும்.
4) நன்மதிப்பு பங்காளரது மூலதனக் கணக்குகளினூடகச் சீராக்கப்படும்.

2008 டிசம்பர் 31இல் காணப்பட்ட பரீட்சைமீதி

| விவரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் (2008.01.01) இல் | | |
| - பாலா | | 150,000 |
| - சிவா | | 100,000 |
| நடைமுறைக்கணக்கு (2008.01.01) | | |
| -பாலா | | 14,000 |
| -சிவா | | 9,000 |
| கொள்வனவு,விற்பனைகள். | 260,000 | 420,000 |
| இருப்புக்கள்(01.01.2008) | 18,000 | |
| நிர்வாக செலவுகள் | 16,000 | |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 12,000 | |
| நிதி ஏனைய செலவுகள் (வட்டி தவிர) | 6,000 | |
| 6%பாலாவின் கடன் | | 40,000 |
| குறுங்கால கடன் | | 32,000 |
| பங்காளர் பற்றுக்கள் | | |
| -பாலா | 12,000 | |
| -சிவா | 8,400 | |
| -ரவி | 10,000 | |
| 12% மூதலீடுகள் (2008.01.01) | 50,000 | |
| காணிக்கட்டம் - கிரயம் | 140,000 | |
| மோட்டார் வாகனம்- கிரயம் | 90,000 | |
| அலுவலக சாதனம்- கிரயம் | 65,000 | |
| தேய்மான ஏற்பாடு (2008.01.01) | | 28,000 |
| -காணிக்கட்டம் | | 40,000 |
| -மோட்டார் வாகனம் | | 24,000 |
| -அலுவலக சாதனம் | | |
| கடன்பட்டோர் | 35,000 | |
| ஐயக்கடன் ஏற்பாடு | | 3,000 |
| காசு, வங்கி மீதிகள் | 137,600 | |
| | 860,000 | 860,000 |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் உமக்குத் தரப்படுகின்றன.
1) கையிருப்புக்கள் ஏப்பிரல் 30 இல் 24,000 ரூபாவும், டிசம்பர் 31 இல் 38,000 ரூபாவும் ஆகும்.
2) விற்பனைகளில், கொள்வனவுகளில் 30% ஆனவை ரவியால் மேற்கொள்ளப்பட்டவை உடையவையாகும்.
3) பங்காளியினது பற்றுக்களின் விவரங்கள் வருமாறு:
பாலா 01.03.2008 இல் பற்றியது 12,000 ரூபா.
சிவா 01.04.2008 இல் பற்றியது 8,400 ரூபா.
ரவி ஆகஸ்ட் மாதத்திலிருந்து மாதத் தொடக்கங்களில் 2,000 ரூபாப்படி சீராகப் பற்றி வந்தார்.
4) விற்பனை விநியோக செலவுகள் (மோட்டார் தேய்வு தவிர) விற்பனைகளின் விகிதாசாரமாக பங்கிடப்பட வேண்டும். ஏனைய வருமானங்கள் செலவுகள் பற்றி ஏதும் கூறாதவிடத்து கால அடிப்படையில் பகிர்தல் வேண்டும்.
5) ஐயக்கடன்களின் ஏற்பாடானது வியாபாரக் கடன்பட்டோரின் 5% ஆக பேணப் படவேண்டும். வியாபாரக் கடன்பட்டோர் தொகை 2008 ஏப்பிரல் 30 இல் 20,000 ரூபாவாகும்.
6) நிலையான சொத்துக்களுக்கான தேய்மான ஏற்பாடுகள் வருமாறு:
காணிக்கட்டடம் - 5%
மோட்டார் வாகனங்கள் - 10% அலுவலக சாதனம் -10%
மறுமதிப்புகளுக்கு முன்னர் சொத்துக்களின் கிரயங்கள் மீதும் மறுமதிப்புக்கு பின்னர் மறுமதிப்பீட்டுத் தொகைகள் மீதும் தேய்மானம் கணிக்கப்படும். 2008 ஏப்பிரல் 30 இல் சொத்துக்கள் பின்வருமாறு மதிப்பீடு செய்யப்பட்டன.
6) ஏப்பிரல் 30 இல் சொத்துக்கள் பின்வருமாறு மதிப்பீடு செய்யப்பட்டன.
காணிக் கட்டடங்கள் - 130,000 ரூபா.
மோட்டார் வாகனங்கள் - 45,000 ரூபா.
அலுவலக சாதனங்கள் - 38,000 ரூபா.
7) பங்குடமையினது மொத்த நன்மதிப்பு 2008 ஏப்பிரல் 30 இல் 30,000 ரூபா.
8) ரவி எனும் பங்காளரது ஆண்டு மொத்த வருமானம் 90,000 ரூபாவுக்குக் குறையக் கூடாது. அவ்வாறு குறைவேதும் ஏற்படுமாயின் அதனை பாலா பொறுப்பேற்க வேண்டும்.

**வேண்டப்படுபவை:**
அ. 31.12.2008 இல் முடிவடைந்த ஆண்டு வியாபார இலாபநட்டக் கணக்கு.
ஆ. பங்காளனது மூலதனக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள்.
இ. 31.12.2008 இல் பாலா,ரவி என்போரது புதிய ஐந்தொகை.

02. பாலா வணிகத்தில் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் 2009 ஜூலை மாதத்தில் இடம்பெற்றன.
1) அலுவலக பயன்பாட்டிற்காக 60,000 ரூபாவிற்கும் மீள விற்பதற்காக 40,000 ரூபாவிற்கும் பண்டங்கள் மூன்றுமாதக் கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன.
2) கட்டடத்தின் ஒரு பகுதி 2009 ஆகஸ்ட் முதல் வாடகைக்கு வழங்கப்படும் பொருட்டு முற்பணமாக 2,000 ரூபா பெறப்பட்டது.
3) விளம்பர மற்றும் வாடகைச் செலவுகள் 8,000 ரூபா கொடுக்கப்பட்டது.
4) உரிமையாளர் மேலதிக மூலதனமாக 10,000 ரூபா காசையும் 20,000 ரூபா பெறுமதியான தளபாட உபகரணங்களையும் ஈடுப்படுத்தினார்.
5) 20,000ரூபா கிரயமான பண்டங்கள் 40,000 ரூபாவிற்கு விற்கப்பட்டன.
6) வருமதியாளர்கள் மீதிகள் மீது 3,000 ரூபா ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்யப் பட்டது.
7) 8,000 ரூபா கிரயமான மீள்விற்பனைக்காக இருந்த பண்டங்களை உரிமை யாளர் தனது சொந்த பயன்பாட்டுக்கென எடுத்துக்கொண்டார்.
8) நிலுவையாக உள்ள காப்புறுதிக்கட்டணம் 6,000 ரூபா.
9) வங்கியிலிருந்து பெறப்பட்ட இருவருடக் கடன் 100,000 ரூபா.
10) 50,000 ரூபா காசுடன் 30,000 ரூபா நன்மதிப்புத் தொகையுடனும் (காசாக) அனுமதிக்கப்பட்டார்.

**வேண்டப்படுபவை:**
அ. மேலுள்ள கொடுக்கல்வாங்கல்களைப் பின்வரும் சமன்பாடில் குறிக்க.
நடைமுறைச் சொத்து + நடைமுறையல்லாச் சொத்து =
நடைமுறைப் பொறுப்பு + நடைமுறையல்லாப் பொறுப்பு + மூலதனம்
ஆ. 2009 ஜூலை மாதத்திற்கான இலாபம்/நட்டத்தைக் கணிப்பிடுக.

03. கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணும் சக்தி கம்பனியானது ஏடுகளில் 2008 ஆம் ஆண்டுக்கான நிதியறிக்கைகள் தயாரிக்கப்பட்டு தேறிய இலாபமாக 41,000 ரூபா கணிக்கப்பட்ட பின்னர் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
1) கொள்வனவு நாளேடு 24,000 ரூபாவினால் கூட்டி கூட்டப்பட்டது.
2) வெளித்திரும்பல் 1,800 ரூபா பொதுப்பேரேட்டிலுள்ள கணக்குகளில் இடம் பெற்றபோதும் கடன்பட்டோரது ஆட்குறிக்கும் கணக்கில் விடுப்பட்டது.
3) வாடகை கணக்கு மீதி 8,000 ரூபா பரீட்சைமீதியில் விடுப்பட்டுள்ளது.
4) வருமதியாளரிடம் பெற்ற காசோலை 4,000 ரூபா காசேட்டிலும் உரிய ஏனைய கணக்குகளிலும் 4,400 எனப் பதியப்பட்டது.
5) அறவிடமுடியாக்கடன் 4,700 ரூபா அக்கணக்கில் 4,000ரூபா எனவும் வரு மதியாளரது சொந்தக் கணக்கில் 700 ரூபா எனவும் பதியப்பட்டது. அதே வேளை கட்டுப்படுத்தும் கணக்கில் சரியாக உள்ளது.

**வேண்டப்படுபவை:**
அ. திருத்த நாட்குறிப்பேடுகளைத் தருக.
அ. சரியான தேறிய இலாகத்தைக் காட்டும் கூற்று.

04. பின்வரும் தகவல்கள் 2008ஆம் ஆண்டு தொடர்பானவையாகும்.

| | | |
|---|---|---|
| 01.01 2008 இல் கடன்பட்டோர் மீதிகள் | வரவு | ரூ. 52,000. |
| | செலவு | ரூ. 5,500. |
| விற்பனை நாளேடு | | ரூ. 73,000. |
| கடன்பட்டோரிடமிருந்து சேகரித்த காசு | | ரூ. 54,000. |
| காலம் கடந்த மீதிகள் மீதான வட்டி | | ரூ. 600. |
| கொள்வனவு பேரேட்டுக்கு மாற்றம் | | ரூ. 8,000. |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசோலை | | ரூ. 40,000. |
| காசோலை மதிப்பிழப்பு | | ரூ. 8,000. |
| அனுமதித்த கழிவுகள் | | ரூ. 7,300. |
| உட்திரும்பல் | | ரூ. 4,500. |
| 31.12.2008இல் செலவு மீதி | | ரூ. 4,000. |

எனினும் பின்வரும் தவறுகள் கணக்கேடுகளில் கண்டுக்கொள்ளப்பட்டன.
1) உட்திரும்பல் 4,080 ரூபா வாடிக்கையாளனது பெயருள் கணக்கில் இடம் பெறவில்லை.
2) வருமதி உண்டியல்களின் பெறுவனவு 1900 ரூபா ஏடுகளில் முழுமையாக விடப்பட்டது.
3) காசேட்டுப் பெறுவனவு பக்க கழிவு நிரலின் கூட்டுத்தொகை 2,300 ரூபா வால் அதிகமாக கூட்டப்பட்டிருந்தது.
4) வருமதியாளர் ஒருவரிடம் பெற்ற காசு ரூபா 4,000 காசேட்டில் பதியப்படாது அவரது பெயருள் கணக்கில் சரியாகப் பதியப்பட்டிருந்தது.
5) வருமதியாளர் ஒருவரிடம் பெற்ற காசு ரூபா 4,000 காசேட்டில் பதியப்படாது அவரது பெயருள் கணக்கில் சரியாக பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுபவை:**
அ. திருத்தங்கள் செய்யும் முன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு.
அ. கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கில் திருத்தங்கள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காயத்தில் குழிழ் அழுகல், வெங்காய இலைச்சுருளி நோய்களைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

யாழ்.மாவட்டத்தில் செய்கை பண்ணப்படும் பிர தான பணப் பயிர்களில் சின்ன வெங்காயம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. நாட்டின் ஏனைய பகுதிக ளுக்கு விதை வெங்காயத்தை விநியோகிக்கும் முக்கிய தளமாக யாழ்.மாவட்டமே விளங்குகின்றது. யாழ். மாவட்டத்தில் 2009/2010 காலப்போகத்தில் 1293.5 ஹெக்டயர் விஸ்தீரணத்தில் சின்ன வெங்காயம் பயி ரிடப்பட்டது. 2010 சிறுபோகத்தில் 411 ஹெக்டரில் ஆனிமாதம் வரை சின்ன வெங்காயம் பயிரிடப்பட் டுள்ளது. இம்மாதம் 10ஆம் திகதி ஒரு சில மணித்தி யாலங்களில் 29 மி.மீ மழை வீழ்ச்சி பெறப்பட்டது. இம்மழையின் பின் உடுவில், புத்தூர், உரும்பிராய், சண்டிலிப்பாய், நல்லூர், கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் குமிழ் அழுகல் நோய், இலைச்சுருளி நோய் ஆகியவற்றால் சின்ன வெங்காயப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது. இந் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நட வடிக்கைகள் எடுக்கப்படுதல் அவசியமாகும். கட் டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்காவிடில் பயிர்கள் முற்றுமுழுதாக பாதிக்கப்படுவதுடன் விதை வெங்கா யம் பெறுவதற்கே கஷ்டங்களை எதிர்நோக்க வேண் டிய நிலை ஏற்பட லாம்.

01.குமிழ் அழுகல் நோய் (BULB ROT)

இந்நோய் பியூசேரியம், ஸ்கொலரட்டியம், பித்தியம் ஆகிய மண் வாழ் பங்கசுக்களால் ஏற்படுத்தப்படுகின்றது.

குமிழ் அழுகல் நோயால்
பாதிக்கப்பட்ட வெங்காயப் பயிர்



நோயின் அறிகுறிகள்

- இலைகள் மஞ்சளாகும்
- பயிர்கள் வளர்ச்சி குன்றிக் காணப்படும்
- இலைகள் பின்நோக்கி இறக்கும்.
- குமிழ்கள் அழுகிக் காணப்படும்.

கட்டுப்படுத்தல் முறைகள்

இந்நோயின் தாக்கத்தைத் தவிர்ப்பதற்கு ஆரம் பத்திலிருந்தே கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

அ) இந்நோய் எல்லா சின்ன வெங்காய வர்க்கங் களையும் தாக்கும். பூக்கின்ற வல்லாரை போன்ற வர்க் கங்களில் பூக்களை முறிக்கும்போது பூத்தண்டின் சிறு பகுதி குமிழுடன் மீதமாக விடப்படும். இது அறுவடை யின் பின் நன்கு காயும் வரை உலர்த்தப்படாவிடில் பிடி கள் கட்டி களஞ்சியப்படுத்தும் போது பிடிகளினுள் ஈரம் ஏற்பட்டு அழுகி குமிழ்கள் களஞ்சியத்தினுள் சொரி யும் இவ்வாறு அழுகிய பிடிகளைக் களஞ்சியத்திலி ருந்து அப்புறப்படுத்துவதுடன் நடுகைக் குமிழுக்காகப் பயன்படுத்துவதை தவிர்க்கவும்.

ஆ) தொற்று ஏற்பட்ட நிலத்தில் தொடர்ந்து வெங் காயச் செய்கையை மேற்கொள்ளாமல் ஒரு போகத் திற்கு குரக்கன் போன்ற தானியப் பயிர்களைப் பயிர் செய்யவும்.

இ)நடுகைக்கு முன் தொற்று ஏற்பட்ட குமிழ்க ளைத் தெரிவு செய்து அகற்றவும்.

ஈ) நடுகை செய்யமுன் குமிழ்களைப் பிரித்து கீழ்க் காணும் பங்க நாசினிகள் ஒன்றில் 30 நிமிடம் ஊற விட்டு வடித்தெடுத்து நிழலில் உலரவிட்டு நடுகை செய்யும்.

| இரசாயனப் பெயர் | விற்பனைப் பெயர் | குமிழ்ப்பரிகரணம் செய்வதற்கான கலவை அளவு |
|---|---|---|
| திரையோபனேற்மீதைல்70% நனையக்கூடிய தூள் | ரோவரல்70% நனையக்கூடிய தூள் | 20 கிராம் - 10 லீற்றர் நீரில் |
| திராம்80% நனையக்கூடிய தூள் | போசால்ரோபே 80% நனையக்கூடிய தூள் | 15 கிராம் - 10 லீற்றர் நீரில் |
| திரையோபனேற்மீதைல்50%+ திராம் 30% நனையக்கூடிய தூள் | தோமாய் | 18 கிராம் - 10 லீற்றர் நீரில் |

நடுகைக்கு முன் விதைக்கு குமிழ்களை பரிகரித்தல்

- ½ பரல் ஒன்றை எடுக்கவும்
- வலை அமைப்புடைய துளைகள் கொண்ட 50கிலோ விதை வெங்காயம் கொள்ளக்கூடிய பொலி பாக் ஒன்றை எடுக்கவும்
- 25 கிலோ விதை வெங்காயத்தை பையினுள் இட்டு தளர்த்திக் கட்டவும்.
- 25 லீற்றர் நீரை பரலினுள் விடவும்
- 45 கிராம் ஹோமாய் நனையக் கூடிய தூளை இட்டு நன்கு கரைக்கவும்.
- விதை வெங்காயம் கொண்ட பொலிபாக்கினை 30நிமிடங்கள் இக்கரைசலில் அமிழ்த்தவும்
- 30நிமிடங்களின் பின் பொலிபாக்கினை வெளியில் எடுத்து நன்றாக வடியவிடவும்.
- கரைசல் வடித்தபின் நிழலான இடத்தில் பரவி உலர விடவும். மறுநாள் நடுகை மேற்கொள்ளவும்.

50 கி.கி விதை வெங்காயத்தைப் பரிகரிப்பதற்கு 50 லீற்றர் கரைசல் தேவை. ஒரு முறை பரிகரித்து வெளி யில் எடுத்தபின் மீண்டும் 50 கிலோவை அதே கரைச லில் பரிகரிக்கலாம்

02.இலைச்சுருளி நோய்
(LEAF TWISTING DISEASE)

இந்நோய் டிஸ்கோ நோய், இலைச் சுருள் அந்தி ராக்கோஸ், அமிலநோய் எனப் பல பெயர்களால் அழைக் கப்படுகின்றது. இருப்பினும் யாழ்.விவசாயிகள் இத னைக் கூழன்நோய் என அழைப்பர்கள். பெரிய வெங் காயத்தில் கொலற்றோறிக்கம் கிளியோஸ் போறி யோடெஸ் எனும் பங்கசுவினாலும் சின்ன வெங்காயத் தில் கிளியோஸ் போறியோடெஸ் பியூசேரியம் என் னும் பங்கசுக்களினாலும், விலாங்குப் புழுக்களினா லும் ஏற்படுத்தப்படுகின்றது. 30 - 35 நாள் வயதுடைய வெங்காயப் பயிர்களில் இதன் தாக்கம் அவதானிக் கப்பட்டுள்ளது.

இலைச் சுருளி நோயால்
பாதிக்கப்பட்ட வெங்காயப் பயிர்



நோயின் அறிகுறிகள்

- இலைகளில் வெண்மஞ்சள் புள்ளிகள் காணப் படும்.
- தாவரங்கள் பலவீனமடையும்
- இலைகள் வெளிறிக் காணப்படும்.
- இலைகள் சுருண்டு முறியும்.
- இலைகள் தட்டையான நாடாபோல் திரிபடைந்து காணப்படும்.
- பயிர்கள் தொட்டம் தொட்டமாக எரிந்தது போன்று காணப்படும்.
- குமிழ்கள் விருத்தியடையாமல் (கோழிக்கால்) காணப்படும்.
- இதனைத் தொடர்ந்து குமிழ்கள் அழுகும்
- நாற்றுக்கள் தாக்கப்பட்டால் இலைகள் சுருளும்
- காலம் செல்லச் செல்ல நீள்வட்டமான புள்ளிகளில் கறுப்புநிற பங்கசுக்கள் இருப்பதை அவதானிக்க முடியும்.

பரவுதல்

பயிரின் வயது, நோய் பரவியுள்ள விஸ்தீரணம் என்பவற்றில் நோய்த்தாக்கத்தின் வேகம் தங்கியுள் ளது. விதை, நாற்று, தாய்க்குமிழி என்பவற்றின் மூலம் பரவும் மண்ணில் காணப்படும் அதிக ஈரப்பதன் இந் நோய் பரவுதலுக்கு சாதகமானது.

கட்டுப்படுத்தல்

அ)மண்ணில் காணப்படும் அதிகரித்த ஈரப்பதன் பரவுதலுக்கு சாதகமாக உள்ளதால் மேலதிக நீர் வடிந்து ஓடக்கூடியவாறு வடிகால்களை அமைக்கவும்.

ஆ)நோயை உண்டாக்கும் வித்திகள் நோய் ஏற் பட்ட தாவரப் பாகங்களிலும் மண்ணிலும் இருக்கும் என்பதால் ஒரே தோட்டத்தில் தொடர்ச்சியாக வெங் காயத்தை செய்கை பண்ணுவதைத் தவிர்க்கவும்.

இ)இவ்வாறான தோட்டங்களில் பாசிப்பயறு, உழுந்து, சோளம், வற்றாளை, குரக்கன் போன்ற பயிர் களைச் செய்கை பண்ணியபின் வெங்காயத்தைச் செய்கை பண்ணவும்.

ஈ)நோய் ஏற்பட்ட வெங்காயத்தின் பயிர் மீதி களில் பங்கசு வித்திகள் உயிர்வாழும் என்பதால் அவற் றைச் சேகரித்து எரிக்கவும்.

உ) விதை வெங்காயத்தின் மூலம் இந்நோய் பரவுதால் நோய் ஏற்படாத தோட்டத்தில் இருந்து பெற்ற தொற்று அற்ற விதைக் குமிழ்களை நடுகைக்கு பயன் படுத்தவும்.

ஊ) திறாம் 80% நனையக்கூடிய தூள் 70 கிராம் 50 லீற்றர் நீரில் கரைத்து 10 சதுர மீற்றர் நிலத்தை நன்கு நனையக்கூடியவாறு பூவாளியின் உதவியுடன் தெளித்து அதனைத் தொடர்ந்து கீழ்க்காணும் பங்கசு நாசினி களில் ஒன்றை மாறி மாறி 7-10 நாள்களுக்கு ஒரு தடவை விசிறவும்.

| இரசாயனப் பெயர் | விற்பனைப் பெயர் | கலவை அளவு |
|---|---|---|
| குளோரோதலோனில் 500 கிராம்/ லீற்றர் / ஈசி | டகோனில் | 8 மிலி - 10 லீற்றர் நீரில் |
| குளோரோதலோனில் 75%நனையக்கூடிய தூள் | டகோனில் | 20 கிராம் - 10 லீற்றர் நீரில் |
| மங்கோசெப் 80%நனையக்கூடிய தூள் | மங்கோசெப் | 20 கிராம் - 10 லீற்றர் நீரில |

எ) கடந்த போகங்களில் இலைச்சுருளி நோய் ஏற் பட்ட தோட்டங்களுக்கு வேப்பம் குழை, வேப்பம்

க. தனபாலசிங்கம்
பாடவிதான உத்தியோகத்தர் (பயிர்பாதுகாப்பு)
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்
யாழ்ப்பாணம்.

பிண்ணாக்கு, கோழி எரு ஆகியவற்றை இடுவதன் மூலம் விலாங்கு புழுவினால் ஏற்படும் இலைச்சுருளி நோயை கட்டுப்படுத்த முடியும்.

## மக்கள் களரியில் 'மிருச்ச கடிக' நாடகத்திலிருந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.06.1992

* தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் மீது படையினரால் மேற் கொள்ளப்பட்ட விமானக்குண்டுத் தாக்கு தலில், ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த பொது மக்களில் நால்வர் பலியான துடன் பலர் காயமடைய நேர்ந்ததாகவும் தெரிவிப்பு.

* வடபகுதியில் நான்கு நாள்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட 'சுழல்காற்று' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரில் இதுவரை 71 பேர் கொல் லப்பட்டதாகக் கொழும்பில் தெரிவிப்பு.

02.06.1992

* இலங்கையின் எதிர்காலம் - தலை விதி ஜனாதிபதி பிரேமதாஸ மற்றும் விடு தலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் ஆகிய இருவரின் கைகளி லேயே தங்கியுள்ளது என கொழும்பில் பி.பி.ஸியின் செய்தியாளராகப் பணி புரிந்தகிறிஸ் தோபர் மொறிஸ் தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்கு யுத்தத்தை இன்ன மும் இரண்டு மாதங்களில் அரசு முடி வுக்குக் கொண்டு வந்துவிடும் என பிரதமர் டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு.

03.06.1992

* தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் மீது விமானப் படையினர் மேற் கொண்ட தாக்குதல் குறித்து கிறிஸ்தவ மத குருமார் தமது கண்டனத்தை மகஜர் மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பு.

* இலங்கை இராணுவத்தினர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடத்திய தாக் குதல், இறுதித் தாக்குதலுக்கு முன்னோடி யானதொன்று என கொழும்பில் பாதுகாப்புப் படைத்தரப்புத் தெரிவித்ததாக பி.பி.ஸி. செய்தியாளரின் கண்ணோட்டத்தில் விவ ரிப்பு.

04.06.1992

* இனம் தெரியாத ஆயுத பாணிகளால் அம்பாறைப் பகுதியில் பயணிகள் பஸ் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்கு தலில் 15 முஸ்லிம்களும் ஒரு சிங்களப் பொலிஸாருமாக 16 பேர் கொல்லப் பட்டதாகத் தெரிவிப்பு.

* முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்குத் தொடர் பான பூர்வாங்க விசாரணைகளை இதற் கென அமைக்கப்பட்ட விசேட நீதி மன்றம் நேற்று ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிப்பு.

05.06.1992

* இனப்பிரச்சினையைத் தீர்ப்ப தற்கு அரசு இரட்டை அணுகுமுறையைக் கடைப் பிடித்து வருவதாக அமைச் சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரி விப்பு.

* மதவாச்சியில் கடந்த வார இறுதியில் இடம் பெற்ற பொதுக்கூட்டமொன்றில் வைத்து ஜனாதிபதி பிரேமதாஸவைப் படு கொலை செய்யச் சதி செய்ததாக சந் தேகத்தின் பேரில் வடமத்திய மாகாண சபை எதிரணி உறுப்பினரொருவர் பொலிஸாரால் கைது.

06.06.1992

* யாழ்.குடாநாட்டில் ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள், அகதி முகாம்கள், பாட சாலைகள் மீது அரச படையினர் குண்டு வீச்சு நடத்துவதைக் கண்டித்து யாழ். நகரில் மக்கள் பேரணி நடத்தப்பட்டதாகத் தெரி விப்பு.

* யாழ்ப்பாணத்தை அரச படையினர் கைப்பற்ற முடிந்தாலும் கூட பிரச்சினை தீரப்போவதில்லை;சண்டை தொடரத்தான் செய்யும் என இராணுவ அதிகாரியொருவர் ரொயட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்ததாக அறிவிப்பு.

07.06.1992

* நாட்டில் ஏற்பட்டு வரும் விலை வாசி உயர்வை எதிர்க்கு பாரிக அளவி லான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதென இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் முடிவு.

* விடுதலைப்புலிகள் இயக்கம் மீது அரசு தடைவிதிப்பதன் மூலம் அவர் களை அடக்கி விடமுடியாது என அமைச் சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரம சிங்க கருத்துத் தெரிவிப்பு.

08.06.1992

* இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிப்பது என்ற தனது முடிவை சுதந்திரக்கட்சி விரைவில் கைவிடும் என அக்கட்சியின் செயலாளர் பி.பி.ஸிக்குத் தெரிவிப்பு.

* ஜனாதிபதி பிரேமதாஸவின் பிறந்த தினத்தன்று அன்னையர் முன்னணி ஏற் பாடு செய்யும் எதிர்ப்பு நடவடிக்கை யில் சுமார் 60 ஆயிரம் தென்பகுதித் தாய்மார் இணைந்து கொள்வர் என சுதந்திரக் கட்சி எம்.பி. மங்கள சமரவீர தெரிப்பு.

09.06.1992

* முல்லைத்தீவு மாவட்டம் குமுழ முனைப் பகுதியில் விடுதலைப் புலிக ளுடான மோதலில் 11 இலங்கை இராணுவத் தினர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிப்பு.

* வடக்கு- கிழக்கு இணைப்பை ஐ.தே கட்சி எதிர்ப்பதாகவே அக்கட்சி தெரிவுக் குழுவிடம் தெரிவித்துள்ளதாகச் சுதந்தி ரக் கட்சியைச் சேர்ந்த அனுரா பண்டார நாயக்கா தெரிவிப்பு.

10.06.1992

* திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களில் விடுதலைப்புலிகள் நேற்று நடத்திய இருவேறு அதிரடித் தாக்குதல்களில் 17க்கும் அதிகமான படை யினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

* விடுதலைப்புலிகள் கோரினால், இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அவர் களுடன் பேசத் தாம் தயாராயிருப்பதாக அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

11.06.1992

* வலி.வடக்கில் பல பகுதிகளில் இலங்கை விமானப் படையினர் நடத்திய விமானக் குண்டு வீச்சுக்களில் ஏழு அப் பாவிப் பொதுமக்கள் உயிரிழந்ததாகவும் பலர் படுகாயமடைய நேர்ந்ததாகவும் தெரிவிப்பு.

* பூநகரி பகுதியில் நேற்று முன் தினம் விடுதலைப்புலிகள் நடத்திய கண்ணி வெடித்தாக்குதலில் படையினரின் ஜீப் வண்டி சிக்கியதில் மூன்று படை அதி காரிகள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

12.06.1992

* வலி.வடக்குப் பகுதியில் மூன்று முனைகளில் முன்னேற முயன்ற படை யினர் மீது விடுதலைப்புலிகள் மேற் கொண்ட தாக்குதலில் 18 இராணுவத்தினர் பலியானதாகத் தெரிவிப்பு.

* விடுதலைப்புலிகள் இயக்கத்தை இந்தியா தடை செய்தமையைக் கண்டித்து பிரான்ஸ் மற்றும் சுவிற்சர்லாந்தில் வாழும் விடுதலைப்புலிகள் இயக்க ஆதர வாளர்கள் கண்டன ஊர்வலங்களை நடத்தி யதாகத் தெரிவிப்பு.

13.06.1992

* முதலில் அரசு இராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளது பலத்தை முற்றாக அழித்த பின்னர் இனப்பிரச்சி னைக்கு அரசியல் தீர்வு காணும் என பாது காப்புப் பதில் இராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்க பலாலியில் வைத்துத் தெரிவிப்பு.

* விடுதலைப் புலிகள் இயக்கம் மீது இந்திய அரசு தடை விதித்தமையைக் கண்டித்து இம்மாதம் முழுவதும் தமிழ் நாட்டுக்கு வரும் மத்திய அமைச்சர் களுக்குக் கறுப்புக்கொடி காட்டப் போவ தாக பாட்டாளி மக்கள் கட்சி அறிவிப்பு.

14.06.1992

* தமிழீழ விடுதலைப் புலிகளை முழு மையாக வெற்றிகொள்வதென்பது இயலாத காரியம் என அரச உயர் அதிகாரியொரு வர் தம்மிடம் தெரிவித்ததாக பி.பி.ஸி யின் கொழும்புச் செய்தியாளர் தெரிவிப்பு.

* விடுதலைப்புலிகள் இயக்கம் விரும்பினால் தெரிவுக்குழுவை யாழ்ப் பாணத்துக்கு வரவழைத்துத் தமது யோசனையைத் தெரிவிக்கலாம் என அவர்களுக்கு அரசு தகவல் அனுப்பியுள் ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி யொன்று தெரி விப்பு.

15.06.1992

* சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதற்காக இராணுவத் தாக்குதலை நிறுத்தமாட்டோம் என இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்ன 'சண்டே ரைம்ஸ்' பத்திரி கைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவிப்பு.

* தமிழ் மக்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய யோசனைகளை பேரினவாதக் கட்சிகள் முன்வைக்காத வரை இனப் பிரச்சினை தீரப்போவ தில்லை என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

# 'பல்ப்' இருக்கு! வயர் இருக்கு! இரவில் மின்சாரம் மட்டும் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 28

வலி.கிழக்குப் பிரதேசத்தில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவது குறித்து பிரதேச மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இரவு நேரங்களிலேயே இவ்வாறு மின்சாரம் திடீர் திடீரென தடைப் படுகின் றது.

மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் பிரதேச மக்கள் இருளிலேயே தமது இரவுப் பொழுதைக் கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 'பல்ப்' இருக்கு! வயர் இருக்கு ஆனால் இரவில் மின்சாரம் மட்டும் இல்லை என இப்பகுதி மக்கள் அங்கலாய்க் கின்றனர்.

அதனைவிட ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக் காகத் தயாராகி வரும் மாணவர்களும் தமது கற்றல் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத நிலையும் தோன்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

(எ-224)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உளவளத்துறை வழங்கும் செயற்றிட்டம்

மூளாய்,ஜூன்28

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும் பங்களுக்கான உளவளத்துறை வழங்கும் விசேட செயற்றிட்டம் ஒன்று வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

வன்னியிலிருந்து திரும்பி மீள் குடிய மர்ந்த குடும்பங்களை இலக்காகக் கொண்டே இந்த விசேட செயற்றிட்டம் அமுல்படுத் தப்பட்டு வருகின்றது.

யுத்தத்தின் போது அங்கவீன முற்றவர் கள், காயமடைந்தவர்கள், குடும்ப உறுப் பினர்களை இழந்தவர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் போன்ற அனைத்து வகையான பாதிப்புக்குள்ளானவர்களுக் குமான உளவளத் துணை வழங்கும் மற்று மொரு உதவித் திட்டமே இதுவாகும்.

முதற் கட்டமாக தொல்புரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் ஏற்கனவே இச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டு விட் டது. விசேட பயிற்சி பெற்றஅலுவலர்கள் களநிலையில் சென்று பணியாற்றி வரு கின்றனர். ''சாந்திகம்'' நிறுவனம் இச் செயற்றிட்டத்துக்கு உதவி வழங்கி வரு கின்றது.

ஏனைய கிராமங்களுக்கும் இச் செயற் றிட்டம் படிப்படியாக விஸ்தரிக் கப்பட விருக்கின்றது. (50-99)

# வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 3 பெண் கிராம அலுவலர்கள் நியமனம்

நாவற்குழி,ஜூன்28

அண்மையில் புதிதாகத் தெரிவு செய் யப்பட்ட கிராம அலுவலர்களில் 3 பெண் கிராம அலுவலர்கள் வலி.கிழக்கு - கோப் பாய் பிரதேச செயலகப் பிரிவுக்கு நியமிக் கப்பட்டு உள்ளனர்.

செல்வி தியாகராஜா குணசீலி, செல்வி பூபாலசிங்கம் கனிதா, செல்வி தவராஜ சிங்கம் சியாமளா ஆகியோரே இவ்வாறு நியமனம் பெற்ற பெண் கிராம அலுவலர் கள் ஆவார்.

இவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரையில் பிரதேச செயலகத்திலும், வெளிக்களத்திலும் சேவைக்காலப் பயிற் சிகளைப் பெற உள்ளனர். அதன் பின்னரே அவர்களுக்கு கடமையாற்ற கிராம அலு வல பிரிவுகள் வழங்கப்படவுள்ளன.

வலி.கிழக்குப் பிரதேச செயலக வர லாற்றில் இம்முறை தான் பெண்கிராம அலுவலர்கள் முதன் முறையாக நியமிக் கப்பட்டுள்ளதாக மூத்த கிராம அலுவலர் க்ள் தெரிவித்துள்ளனர். (121)

# சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றோர் விவரங்கள்

வலி.கிழக்கு,ஜூன்28

வலி.கிழக்கு சைவசமய அருள் நெறி மன்றத்தால் கோப்பாய் வீரபத்திர சுவாமி கோயில் மஹோற்சவத்தையொட்டி நடத் தப்பட்ட சமய அறிவுப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. பரிசு பெற்றோர் விவரங்கள் வருமாறு,

**முதலாம் இடம்**

பிரார்த்தனா இராஜசூரியர் (சிவபூதரா யர்வீதி, சுன்னாகம்)

**இரண்டாம் இடம்**

சண்முகநாதன் மதுரிகா (குமாரசாமி வீதி,புத்தூர் கிழக்கு புத்தூர்)

**மூன்றாம் இடம்**

கஜானன் (பகவான் பாதை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்)

**ஆறுதல் பரிசு பெற்றோர்**

விஜிதா கைலாயநாதன் - வறுத்தலைப் பிள்ளையார் கோயிலடி பன்னாலை, மகேந்திரராசா மயூரன் - கோப்பாய் தெற்கு, கோப்பாய், ரவீந்திரன் பிறேமலதா - பழைய வீதி,கோப்பாய், ந.லக்ஷன் - வீரபத்திர கோயிலடி, கோப் பாய், பா.சிவஆரணி - பகவான்பாதை, கோப்பாய், ப.வேணுஜா - புத்தூர் கிழக்கு, புத்தூர், அன்பு சின்னத்துரை - கலாப வனம் அச்சு வேலி வடக்கு, பாலசிங்கம் கிருசாயி - கோப்பாய் தெற்கு, கோப்பாய், திருமதி சந்திரசேகரம் நிர்மலா தேவி - கோப்பாய், ஆறுமுகசாமி சிந்துஜன் - வீரபத்திரர் கோவிலடி, கோப்பாய்.

**கேள்வி பதில் போட்டியில் பரிசு பெற்றோர்**

செல்வராசா அனுசாந்தன், ஆறுமுக சாமி சிந்துஜன், ஆறுமுகசாமி திவ்வியன். (எ)

# கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்28

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி முடிவுகள் வருமாறு -

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் - சி.மதுரங்கன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் - இ.கார்த்திகா(கொக்குவில் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் - இ.ஜனரஞ்சனி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ர.லக்ஷியா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**ஆறுதல் பரிசு**

தெ.ஜனனி (கொக்குவில் இந்துக் கல் லூரி), கு.சரண்யா (கொக்குவல் இந்துக் கல்லூரி), வி.வக்சாஸ்கிதசர்மா (யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி),

**மத்திய பிரிவு**

முதலாம் இடம் - ஆ.ஹரிசங்கர் (யாழ்.இந்துக் கல்லூரி),2 ஆம் இடம் - சு.கமில்றன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் - உ.சாந்திகா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**ஆறுதல் பரிசுகள்**

ப.பிரதீஸ் (யாழ்.இந்துக் கல்லூரி), த.தஸ்மினி (மானிப்பாய் மெமோறியல் கல்லூரி), கே.கௌசிகன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

**மேற்பிரிவு**

முதலாம் இடம் - க.வசீகரன் (மானி. இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் - க.உசாந் தன் (யாழ்.இந்துக் கல்லூரி), 3ஆம் இடம் - சுஜேனுஷா (வட்டு. இந்துக் கல்லூரி)

**ஆறுதல் பரிசு**

த.நாராயணி - கொக்குவில் இந்துக் கல்லூரி, ச.சஞ்சீவன் - கொக்குவில் இந் துக் கல்லூரி, இ.சாமந்தி - கொக்குவில் இந்துக் கல்லூரி. (201-க)

## நீடிக்கும் தட்டுப்பாடு!

யாழ்.நகரில் உள்ளூர் உற்பத்திப் பொரு ளுக்குத் தொடர்ந்தும் கிராக்கி நிலவி வருவ தாகத் தெரிவிக்கப் படுகின்றது.

பனம் ஒடியல்,ஒடியல்மா, பனாட்டு உட் பட பல உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் பல வற்றுக்குமே இவ்வாறு தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது. இந்த உள்ளூர் உற்பத்தி பொருள் களின் மீது மோகம் கொண்டுள்ள தென்னி லங்கை பயணிகள் அவற்றைக் கூடுதலாக வாங்கிச் செல்கின்றனர். இதனாலேயே சீண்டு வாரற்றுக் கிடந்த உள்ளூர் உற்பத்திகளை கண்ணாலும் காண முடியா நிலை தோன்றி யிருக்கிறது. (எ-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு
ஸ்ரீ அற்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில்
**மஹோற்சவம் -2010**

30.06.2010 புதன்கிழமை
முற்பகல் 11.00 மணி கொடியேற்றம்
04.07.2010 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6.00 மணி தண்டிகைத்திருவிழா
07.07.2010 புதன்கிழமை
மாலை சப்பறத்திருவிழா
08.07.2010 வியாழக்கிழமை
முற்பகல் 10.00 மணி தேர் உற்சவம்
09.07.2010 வெள்ளிக்கிழமை
முற்பகல் 10.00மணி தீர்த்தோற்சவம்
மாலை 5.30 மணி கொடியிறக்கம்

(99952) -ஆலய அறங்காவலர்கள்-

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் கந்தையா
பொன்னம்மா (பெரியபோட்டை)

அன்னை மடியில்
04.04.1945

இறைவன் அடியில்
29.05.2010

கடந்த 29.05.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (28.06.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சரஸ்வதி வீதி, ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
புத்தூர் கிழக்கு, புத்தூர். (99954) குடும்பத்தினர்.

# சுன்னாகம் பல.நோ.கூ. சங்கம் (வ.து) சுன்னாகம்

கீழ்க்குறிப்பிடப்படும் நிரந்தரப் பதவிகளுக்கு தகுதியான வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.பொதுமுகாமையாளர்: குறி.இல.101:08
சம்பளத்திட்டம்: 11200-14100
140 x10-150x10

தகைமை:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டப் பதவியில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளரின் 10ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது,

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டப் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது,

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்)/ க.பொ.த.உயர்தரப் பத்திரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2.கணக்காளர் குறி.இல.104:09
சம்பளத்திட்டம்: 10950-13650
130x 10- 140x 10

தகைமை:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கு அல்லது உட்துறைக் கணக்காய்வு லிகிதர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது உட்துறைக் கணக்காய்வாளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தில் இறுதிப்பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத் துறையிலான 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது,

இ) கூட்டுறவுப்பணியாளர் உயர்தரப் பத்திரம்/ க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியல் பாடத்திலான சித்தி அடங்கலாக 03 பாடங்களில் சித்தியும் ஆறு வருடங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான அனுபவம்.

வயது- விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது).

*சங்கப் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை தமது சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவும்.*

விண்ணப்பப்படிவங்களையும் மேலதிக விவரங்களையும் சங்கத் தலைமை அலுவலகத்தில் வேலை நாள்களில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 12.07.2010**

28.06.2010 (சி/568704) தலைவர்


Baraka®
உங்கள் நலத்தின் பங்காளி

JointSafe
மூட்டுவலிகளினால் ஏற்படும் உபாதைகளுக்கான நிவாரணி.

Memo-Plus
கற்றல், ஞாபகசக்தி மற்றும் மனம் சம்பந்தமான தொழிற்பாடுகளை அதிகரிக்கும்.

FOOT-KIO
பித்த வெடிப்பு மற்றும் வரண்ட சருமத்தினை மென்மையாக்கும்.

HAIRMENN
இளநரை மற்றும் முடி உதிர்தலை தடுக்கும்.

Manufactured by:
BIO EXTRACTS (PVT) LTD.
No: 11, S.De. S. Jayasinghe Mawatha, Kalubowila, Dehiwela.
Marketed by:
EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
HOT LINE: 0777 800668


யாழ். விநியோக முகவர்:
SIVA NARUMANAB POONGA
No: 288, Hospital Road,
Jaffna.
TEL 021 222 2567


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 33
திகதி - 26.06.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: K | அதிர்ஷ்ட இலக்கம்: 09 | வெற்றி இலக்கம்: 1 6 8 6 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K | 09 | 1 | 6 | 8 | 6 | 8 | ரூ. | 11,941,703.00 | பரிசு - |
| 1 பரிசு | | 09 | 1 | 6 | 8 | 6 | 8 | ரூ. | 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 1 | 6 | 8 | 6 | 8 | ரூ. | 100,000.00 | பரிசு 02 |
| 3 பரிசு | | | | 6 | 8 | 6 | 8 | ரூ. | 10,000.00 | பரிசு 21 |
| 4 பரிசு | | | | | 8 | 6 | 8 | ரூ. | 1,000.00 | பரிசு 185 |
| 5 பரிசு | | | | | | 6 | 8 | ரூ. | 50.00 | பரிசு 1844 |
| 6 பரிசு | | | | | | | 8 | ரூ. | 20.00 | பரிசு 17525 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | 1 | 6 | 8 | 6 | ரூ. | 1,000.00 | பரிசு | 20 |
| 8 பரிசு | | 1 | 6 | 8 | | ரூ. | 100.00 | பரிசு | 193 |
| 9 பரிசு | | 1 | 6 | | | ரூ. | 50.00 | பரிசு | 1857 |
| 10 பரிசு | K | | | | | ரூ. | 20.00 | பரிசு | 7206 |
| 11 பரிசு | K | 09 | | | | ரூ. | 100.00 | பரிசு | 863 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,400,270.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வங்கிகளுக்கு உட்பட்டு, மீசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2439631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ. 12,207,794.00

# தசாகரும் (கல்லெடுப்பு) சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்
23
03
1989

மறைவு
18
06
2010

**அமரர் சிதம்பரசபாரத்தின தேசிகர் இராஜேந்திர தேசிகர்**

எங்கள் அன்புத்தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நாளை (29.06.2010) செவ்வாய்க்கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் இடம்பெறவுள்ளன. இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் புதன்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பண்டாரி அம்மன்கோயில்,
தம்பசெட்டி, பருத்தித்துறை.
தொ.பே.: 0212263944
0776701678, 0213001326.
குடும்பத்தினர்.
(99830)

# மரண அறிவித்தல்

## சிவக்கொழுந்து காசிநாதன்

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து காசிநாதன் அவர்கள் கடந்த 23.06.2010 புதன் கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக் கொழுந்து - வள்ளியம்மை தம்பதியினரின் புதல்வனும் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதியினரின் மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் சுதர்சினி (லண்டன்), கெங்காகரன் (சுவிஸ்), சுதாகரன் (விளையாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), கிருபாகரன் (லண்டன்), பத்மலோஜினி (வவுனியா), மனோகரன் (கனடா), சசிகரன் (உதவிப் பணிப்பாளர், கைத்தொழில் அபிவிருத்தி சபை, வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரபாகரன்(லண்டன்), சிவலிங்கம்(கட்டார்), சுமிளா (சுவிஸ்), கோமதி, கயல் விழி(லண்டன்), இராஜகலா(கனடா), மைதிலி (ஆசிரியை, வேலணை நடராசா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும் பிரபிஷா, பிரசுஷா, பிரபீஷன், கஜனி, சகானி, ராகவி, லேனுஷன், சகீன், லக்சிகா, சிவமத்சன், அமரர் சிவயதுசன், விதுர்சன், சோபிசன், மிருஷன், நர்மிதா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா.சுதாகரன் (மகன்)
(விளையாட்டு உத்தியோகத்தர், நல்லூர்).

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
021 3217061
(99984)

# பெற்றோரை இழந்து எவ்வித வசதிகளும் இன்றி வாழும் மழலைகளுக்கு முன்பள்ளி கல்வி மிக அவசியமானது

## நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன்

கிளிநொச்சி , ஜூன் 28

தாய்,தந்தையரை, சகோதரர்களை, உறவுகளை இழந்த காணாமற்போன நிலையில் எவ்வித வசதிகளும் அற்ற தறப்பாள் கொட்டில்களிலும், உடைந்த வீடுகளிலும் வசித்துவரும் மழலைகளுக்கு முன்பள்ளிக் கல்வி காலத்தின் கட்டாயமானது. ஆனால் புறச் சூழ்நிலைகளினால் அது இன்று சிக் கலாக மாறியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன்

கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியின் 15 ஆவது ஆண்டு வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்று கையில் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சியில் நீண்ட காலமாக சிறப் பாக இயங்கிவரும் இந்த முன்பள்ளி தாய், தந்தையரை இழந்த எந்தவித வசதிகளும் அற்ற நிலையில் தறப்பாள் கொட்டில் களுக்குள்ளும் உடைந்த வீடுகளிலும் வசிக்கும் மழலைகளுக்கு முன்பள்ளிக் கல்வியை வழங்கும் சிக்கலான பணியை ஆற்றுவது பாராட்டுக்குரியது என்று புகழாரம் சூட்டினார்.

மக்கள் மீள்குடியேற்றப்பட்டதும் அவர்கள் தமது தொழில்களை ஆரம்பிக்கும் முன்னரே தென்னிலங்கையில் இருந்து வருகைதரும் நிறுவனங்கள் தொழில் களை ஆரம்பிக்கப் போட்டி போடுகின்றன.

எனவே மக்கள் தாங்கள் முன்னர் செய்த தொழில்களை மீண்டும் ஆரம்பித் துப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் பங் காற்ற வேண்டும். இவ்வாறான நிலை ஏற் படும்போது மட்டும்தான் நாம் எமது மண் ணில் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழமுடியும். மிகக் குறுகிய காலத்தில் சுறுசுறுப்புடன் நாம் அனைவரும் முன்னேற வேண்டும் - என்றார். (6-405)

## அழிக்கப்படும் மரங்களை பாதுகாக்கக் கோரிக்கை

கிளிநொச்சி , ஜூன் 28

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங் களில் மக்கள் மீள்குடியேறிய பிரதேசங் களில் காணப்படும் பெரிய மரங்கள் பல வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளில் மீள்குடியமர்ந்தவர்கள் தமது தேவைகளுக்காக மரங்களை வெட்டி அழிக்கின்றனர். இதனால் அப்பிரதேசங் களில் மரங்கள் இல்லாது போய்விடும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக சூழல் ஆர்வ லர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து மரங் களைப் பாதுகாக்க முன்வருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-405)

# நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மன்னாரில் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம்

மன்னார் , ஜூன் 28

16 மாத இடைவெளிக்குப் பின்னர் மன் னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் மன்னார் செயலகக் கேட்போர் கூடத்தில் அண்மையில் கூடியது. இக்கூட்டத்திற்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந் திரசிறி, கைத்தொழில் வர்த்தக அமைச்சர் நிஷாட் பதியுதீன் ஆகியோர் கூட்டுத் தலைமை வகித்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம்,சிவசக்தி ஆனந் தன், ஜனாவ் ஹீனைஸ்பாரூக், முன்னாள் வன்னி புனர்வாழ்வு அமைச்சர் அல்ஹாஜ்நூர் தீன் மசூர் உட்படப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் மன்னாரிலிருக்கும் அரச திணைக்களங்கள், சபைகள், கூட்டுத் தாப னங்கள் என்பவற்றின் உயர் அதிகாரிகளும் இராணுவ, பொலிஸ் அதிகாரிகளும் ஆளு நரின் செயலாளரும் வடமாகாண சபையின் செயலாளரும் கலந்துகொண்டனர். (எ-80)

# இனநல்லுறவை மேம்படுத்த மன்னாரில் இளைஞர் உறவுப் பாலம் அங்குரார்ப்பணம்

மன்னார் , ஜூன் 28

மன்னார் சர்வோதய சிரமதானச் சங்கத் தின் அனுசரணையில் மூன்று நாள்கள் இளைஞர் உறவுப் பாலம் பயிற்சியளிப்புத் திட்டம் இன்று திங்கட்கிழமை ஆரம்ப மாகின்றது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த் தியடைந்துள்ளது என மன்னார் மாவட்ட 'சர்வோதய சாந்தி சேவை' சங்கத்தின் இணைப்பாளர் யுகேந்திரன் தெரி வித்தார்.

மன்னாரில் பனைவளம்,நீர்வளம், இயற்கை வளம் நிறைந்துள்ள கீரிக் கிராமத் தில் உள்ள அனைத்து வீடுகளிலும் இந்த இளைஞர்கள் பயிற்சிக் காலமான மூன்று தினங்களும் தங்கியிருந்து இங்குள்ள தமிழ், முஸ்லிம் மக்களுடன் நல்லுறவை மேம்படுத்துவார்கள்.

மன்னாரில் முதன் முறையாக நடை பெறவுள்ள இந்நிகழ்வுக்கு மாத்தறை மாவட்டத்திலிருந்து சுமார் 60 இளைஞர், யுவதிகளும் பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து சுமார் 40 இளைஞர் , யுவதிகளும் உறவுப் பாலத்தில் கலந்து கொள்வர் எனவும், இவர்களுக்கான சகல அடிப்படை வசதிகளையும் மன்னார் சர்வோதய சாந்தி சேவாச் சங்கம் ஏற் படுத்தியுள்ளது என்றும் மன்னார் இணைப் பாளர் மேலும் தெரிவித்தார். (எ-80)

# வரண்டுபோய்க் கிடக்கிறது வாய்க்கால்; வற்றுகின்றது கிணற்று நீரின் மட்டம்

கிளிநொச்சி , ஜூன் 28

இரணைமடுக்குளத்தில் இருந்து வட் டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்கு நீர் செல்லும் வாய்க்கால் நீண்ட காலமாக நீரின்றி வரண்டு போய் உள்ளது.

இதனால் அப்பிரதேசங்களில் உள்ள கிணறுகளின் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைவடைந்து செல்கின்றன. அத்துடன் கால்நடைகளும் நீருக்காக இப் பகுதி எங்கும் அலைந்து திரிவதாகவும் கூறப் படுகின்றது.

யுத்த காலத்தின் போது குறித்த வாய்க் காலில் இரண்டு பெரிய உடைப்புகள் ஏற்பட்டதாலேயே இவ்வாறு நீர் வரத் தின்றி வாய்க்கால் வரண்டு போய் நீர்ப் பாசன நடவடிக்கைகள் பாதிக்கப்பட் டுள்ளது.

மக்கள் மீளக்குடியமர்ந்து இரண்டு மாதங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் இன்னமும் இந்த உடைப்புகள் சீர் செய் யப்படவில்லை.

காலபோக நெற்செய்கைப் பருவம் நெருங்கி வருவதால் குறித்த உடைப்பு கள் விரைவாக சீர்செய்யப்பட்டு வாய்க் கால் ஊடான நீர்ப்பாசன நடவடிக் கைகளை ஆரம்பிக்க வேண்டும் என உரிய அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ- 6 - 405)

# 20 வருடங்களின் பின்னர் விடத்தல்தீவில் முஸ்லிம் மக்கள் மீள்குடியமர்ந்தனர்

மன்னார் , ஜூன் 28

இருபது வருடங்களின் பின்னர் மன் னார் விடத்தல் தீவு முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்தனர்.

இந்த மக்கள் 1990 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்டு புத்தளம் மாவட்டத்தில் வாழ்ந்து வந்தனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சுமூக நிலையை அடுத்து முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்தனர். விடத்தல் தீவு ஜூம்மா பள்ளியில் நடைபெற்ற தொழு கையுடன் இவர்களின் மீள்குடியமர்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன், முன்னாள் வன் னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் எம்.பி, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்களான பாரூக், செல்வம் அடைக்கல நாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(6-80)

# பஸ்ஸுக்காக 15 கிலோ மீற்றர் நடக்கும் மீளக்குடியமர்த்தப்பட்ட மாந்தை மக்கள்

மன்னார், ஜூன் 28

மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சவராய் சீது விநாயகர் குளம் பகுதி மக்கள், எவ்வித அடிப்படை வசதிக ளுமற்ற நிலையில் மீள் குடியேற்றப்பட்டுள் ளதாகவும் இதனால்அவர்கள் பல பிரச் சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதா கவும் தெரிவிக்கப்படுகின்றது.

சவராய் கிராமத்தைச் சேர்ந்த 21 குடும்பங்களைச் சேர்ந்த 72 பேரும், சீது விநாயகர் குளம் பகுதியைச் சேர்ந்த 29 குடும்பங்களைச் சேர்ந்த 112 பேரும் இவ் வாறு மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

எனினும் போக்குவரத்து பிரச்சினை தற்போது காணப்படுவதாகவும் தங்க ளுடைய கிராமத்திலிருந்து சுமார் 15 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்ற பின்னரே பஸ் சில் பயணிக்க வேண்டியிருப்பதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றார்.

எனவே முதலில் உடனடியாக தங்களு டைய கிராமத்திற்குப் போக்குவரத்து வசதியை செய்து தருமாறு உரிய அதிகாரிக ளிடம் அம்மக்கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர். (6)

## கமநல சேவை நிலையத்தை மீள ஆரம்பிக்கக் கோரிக்கை

கிளிநொச்சி , ஜூன் 28

காலபோக நெற்செய்கையில் ஈடுபடு வதற்கு வசதியாக இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தை உடன் ஆரம்பிக்கு மாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கமநல சேவை நிலையம் உட னடியாக ஆரம்பிக்கப்பட்டாலே தாம் கால போக நெற்செய்கையில் ஈடுபட முடியும் என்று விவசாயிகள் கூறுகின்றனர். விவ சாயக்குழுக்களை அமைத்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட வசதி செய்து தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (6-405)

# அதிகாரிகளுக்கு நேரமில்லை; மக்களுக்கோ கூரையில்லை!

கிளிநொச்சி , ஜூன் 28

ஏதுமற்ற ஏதிலிகளாக மீளக்குடியமரும் மக்களுக்கு தறப்பாள்களை வழங்குவதில் அதிகாரிகள் பாகுபாடு காட்டுவதாக அந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாகத் தற்போது கண்டாவளைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து வரு கின்றனர். பத்து அல்லது அதற்கும் குறை வான எண்ணிக்கையில் மீளக்குடியமர வரும் மக்களுக்கு தறப்பாள்கள் வழங்க அதிகாரிகள் நேரமில்லை என்று கைவிரிப் பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் ஏதுமற்றவர்களாக அகதி முகாம் களில் இருந்து வருவதாக அவர்களுக்கு எடுத்துக் கூறியபோதிலும் அதிகாரிகள் பாராமுகமாகவே நடப்பதாகவும் முன்னர் வந்த குடும்பங்களுடன் இணைந்து இருக்கு மாறும் பின்னர் தரலாம் என்று காலத்தை இழுப்பதாகவும் மக்கள் விசனமும் வேத னையும் தெரிவித்துள்ளனர்.

வெயிலில் வாடும் தமக்கு தறப் பாளையாவது தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (எ- 6-)

கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியின் 15 ஆவது விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. முன்பள்ளி சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வையும், விளையாட்டு நிகழ்வில் ஈடுபட்டிருப்பதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் (படங்கள் : கிளிநொச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேஷம்

மருத்துவ செலவுகளைச் சந்திக்கலாம். உங்களின் செயல் ஒன்றால் மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம். நாளை நடக்கப் போகும் சம்பவம் ஒன்றை நினைத்து மனதிற்குள் சந்தோஷம் அடைவீர்கள். நண்பர் ஒருவருக்காக மற்றொரு நண்பரிடம் உதவி கேட்கலாம். கொண்டாட்டங்களில் பங்கேற்று மகிழ்ச்சி அடைவீர்கள்.

### இடபம்

உங்களுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்க பல இடங்களுக்கு அலைந்து திரிவீர்கள். நீங்கள் நல்லது செய்ய நினைத்தாலும், சிலர் அதை தவறாக புரிந்து கொள்ளலாம். உங்களுக்குத் தெரிந்த ஒருவர் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டுவர். உல்லாசமான, இடாம்பீகமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும்.

### மிதுனம்

தேக ஆரோக்கியக் குறைவுகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். பெரிய பிரச்சினையாகி விடுமோ என பயந்த விடயம் ஒன்று பிசுபிசுத்துப் போகலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கலாம். நீண்ட நாள்களாக பார்க்காத உறவினர் ஒருவரை பார்க்கும் சூழ்நிலை உருவாகும்.

### கடகம்

எதிலும் விழிப்பாகவும், கவனமுடனும் செயற்பட்டு சாதனை படைப்பீர்கள். பெண்கள் அல்லது ஆண்கள் வழியில் பொருள் உதவிகளைப் பெறலாம். செலவுகளை குறைத்து சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். அரசியல்வாதிகள் அலைச்சல்களுக்கு ஆளாகலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்வீர்கள்.

### சிங்கம்

உங்களிடம் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். கடன் அல்லது கைமாத்து வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். நீங்கள் செய்த வேலை ஒன்றை, மற்றவர்கள் தாங்கள் செய்ததாகக் காட்டிக் கொள்ளலாம். உறவினர் ஒருவருடன் வெளியூர் அல்லது வெளியிடங்களுக்குச் செல்லலாம். வீண் பயம் உண்டாகும்.

### கன்னி

உறவினர்களுக்காக பிணை அல்லது உத்தரவாதம் கொடுப்பீர்கள். உடன் பிறப்புக்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். இரண்டு நாள்களுக்கு முன் பாதியில் விட்ட வேலை ஒன்றை இன்று முடிப்பீர்கள். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலைகளை நீங்கள் எளிதாக செய்வீர்கள். தாய் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம்.

### துலாம்

புத்துணர்ச்சி, தெம்புடன் செயற்படுவீர்கள். புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். மற்றவர்களுக்குத் தெரியாமல் ரகசியமாக சில திட்டங்களை நிறைவேற்ற முற்படுவீர்கள். பால்ய நண்பர்களைச் சந்தித்து பழங்கதைகள் பேசுவீர்கள்.

### விருச்சிகம்

வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். விருப்பம் இல்லாமல் சிலருக்கு உதவி செய்வீர்கள். உங்களுக்கு வேண்டிய ஒருவரைப் பற்றி சிலர் உங்களிடம் குறை சொல்லலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். வெளியூர் பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள்.

### தனுசு

வரவுகளை எதிர்பார்த்து சில செலவுகளைச் செய்வீர்கள். மற்றவர்கள் மத்தியில் உங்களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். உங்களின் கடந்த கால அனுபவங்களைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள்.

### மகரம்

உங்களின் தவறான செயற்பாடு ஒன்றை மற்றவர்கள் அறிந்து கொள்ளலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் செலவுகள் ஏற்படலாம். வெளியூர் அல்லது வெளிநாட்டில் இருக்கும் ஒருவர் உங்களைத் தொடர்புகொண்டு பேசலாம். சில பொருள்களை மறதியாக எங்காவது வைத்துத் தேட நேரிடலாம்

### கும்பம்

கணவன் மனைவியர் இடையே சிறு சச்சரவுகள் ஏற்பட்டாலும், அது சிறிது நேரத்தில் சரியாகிவிடும். விலகிச் சென்ற சொந்தங்கள் திரும்ப வந்து சேரும். ஆன்மிக விடயங்களுக்காக குறிப்பிட்ட அளவு பணத்தை செலவு செய்வீர்கள். பழைய நல்ல சம்பவம் ஒன்றை நினைத்துப் பார்ப்பீர்கள். சந்தோஷ அனுபவம் உண்டு.

### மீனம்

எந்த விடயத்திலும் பிறரை நம்பாமல், அனைத்தையும் நீங்களே செய்ய நினைப்பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவுகள் சரியான நேரத்தில் கிடைக்கும். உங்களை நம்பி சிலர் முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். உடன் பிறப்புக்கள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம்.


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 555

திகதி 2010/06/26

சுப்பர் இலக்கம் 03

வெல்லப்பட்ட இலக்கங்கள் 11 22 52 53

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| அதி பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 26,841,650.40 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 06 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 162 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 318 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 8,310 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 4,716 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 118,506 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 19,118 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 5,714,120.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
ஐந்து இலட்சம் அல்லது அதற்குகூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டதிட்டங்களுக்கு உட்பட்டது
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 26,909,612.00

தேசிய லொத்தர் சபை



மஹஜன சம்பத
மஹஜன சம்பத
Mahajana Sampatha

25.06.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2257

வெற்றி எழுத்து O வெற்றி எண்கள் 7 6 7 1 0 1

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | O 7 6 7 1 0 1 | ரூபா. 19,626,363/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 7 6 7 1 0 1 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் - |
| 2 பரிசுகள் | 6 7 1 0 1 | ரூபா. 100,000/= | பரிசுகள் 03 |
| 3 பரிசுகள் | 7 1 0 1 | ரூபா. 10,000/= | பரிசுகள் 59 |
| 4 பரிசுகள் | 1 0 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் 553 |
| 5 பரிசுகள் | 0 1 | ரூபா. 100/= | பரிசுகள் 5587 |
| 6 பரிசுகள் | 1 | ரூபா. 20/= | பரிசுகள் 55288 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 7 6 7 1 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 05 |
| 8 பரிசுகள் | 7 6 7 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் 54 |
| 9 பரிசுகள் | 7 6 7 | ரூபா. 100/= | பரிசுகள் 558 |
| 10 பரிசுகள் | 7 6 | ரூபா. 50/= | பரிசுகள் 5603 |
| 11 பரிசுகள் | O | ரூபா. 20/= | பரிசுகள் 21955 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 3,986,510.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை


## இடமாற்றமும் புதிய நியமனமும்

நாவற்குழி, ஜூன் 28

கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை இடமாற்றத்தின் மூலம் மந்துவில் றோ.க.த.க. பாடசாலைக்குச் சென்றுள்ளார்.

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இல் தெரிவாகிய எஸ்.தயாபரன், கலைவாணி வித்தியாலயத்தின் புதிய அதிபராகக் கடமையேற்றுள்ளார்.

கைதடி நவபுரம் எருதிடல் அ.த.க. பாடசாலை அதிபர் எஸ்.பாலசுப்பிரமணியம், கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டுள்ளார். இதனால் இப் பாடசாலையின் அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளது.

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் புதிய அதிபராக அதிபர் சேவையில் தெரிவாகிய திருமதி லலிதாமலர் முகுந்தன் கடமையேற்றுள்ளார். (எ-121)

## கலாசார மண்டபத் திறப்பு விழா

வலி.வடக்கு, ஜூன் 28

மல்லாகம் சுவாமிநாதன் ஸ்ரீ பாஸ்கரன் ஞாபகார்த்த கலாசார மண்டபத் திறப்பு விழா மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி.ஆனந்தசங்கரி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, சிறப்பு விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் எஸ். முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(எ-86)


## வேலை ஆள்கள் தேவை

அப்பள வேலைக்கு ஆண்/பெண் வேலை ஆள்கள் (ஆண்-800/=, பெண் -300/=) உடனடியாகத் தேவை.
Packing செய்வதற்குப் பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு:- இ.மகேஸ்வரன் (அப்பளக் கொம்பனி)
சீனிப்புளியடி, கே.கே.எஸ். வீதி,
ஆரம்பப் பாடசாலை அருகில், இணுவில்.
தொ.பே.: 0771393670



## கண்ணீர் அஞ்சலி

நல்லூர்ப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தரும் விளையாட்டவைச் செயலாளருமான திரு.கா.சுதாகரன் அவர்களின் அன்புத் தந்தை

**சிவக்கொழுந்து காசிநாதன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
நல்லூர்.

[சி/568713]

நல்லூர்ப் பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கமும்
விளையாட்டவையும்.



## மரண அறிவித்தல்

### அமரர் வயிரவி செல்லத்துரை

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது முதலி கோயிலடி, சேச்லேன், கொக்குவில் மேற்கில் வசித்தவருமாகிய வயிரவி செல்லத்துரை நேற்று (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வயிரவி இராசம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புக்கணவரும், கந்தசாமி, தங்கரத்தினம் காலஞ்சென்றவர்களான இராசதுரை, நவரத்தினம் மற்றும் கனகேஸ்வரி, செல்வரத்தினம், ராஜேஸ்வரி, குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நிர்மலகாந்தன் மற்றும் நிர்மலா, நிர்மலராஜன், நிர்மலராகினி (லண்டன்), நிர்மலரூபி(பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், பற்பராதேவி, சுரேஸ்குமார், நந்தினி, கௌரிகாந்தன் (லண்டன்), பிரபாகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜீவிதா, கீர்த்தனா, கிரிஷா, கபில்ராஜ், இராகுஜன், தாட்சாயினி, தர்மிகா, சுபாஸ்திகா, தேனுகா, கௌசா, காரிகன், கார்த்திகா, ஹரிஸ், ஹாரினி, ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2010) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலிகோயிலடி,
சேச்லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
செ.இராசம்மா (மனைவி),
பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் 'சமபோஷ' நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்ட 13 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான உதைபந்தாட்ட இறுதி ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம்.
(படங்கள்: நேசன்)

# யாழ்.மாவட்டப் பெண்களின் உதைபந்தாட்டம்;

## வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது பருத்தித்துறை!

வலி.வடக்கு, ஜூன் 28

யாழ்.மாவட்ட பெண்களுக்கான உதை பந்தாட்டச் சம்பியனானது பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி.

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயல கத்தின் விளையாட்டுப் பிரிவுப் பிரதேச செய லகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுக ளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி யாட்டம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் உடுவில் பிரதேச செயலக அணி யும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி யும் மோதின.

போட்டியின் ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட் டத்தில் கடுமையாக மோதிக் கொண்டன. ஒரு அணிக்கு மற்றைய அணி சளைத்த வர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகை யில் ஆட்டம் அமைந்திருந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் இரு அணிகளாலும் முறியடிக் கப்பட்டது. இந்நிலையில் கோல்கள் எவை யும் பெறப்படாத நிலையிலேயே முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணி களும் கோல்கள் பெறுவதற்குக் கடும் முயற்சிகளை மேற்கொண்டன. இதில் வெற்றிகண்ட பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி தனக்கான சந்தர்ப்பங்க ளைச் சரியான முறையில் பயன்படுத்தி 2 கோல்களைப் பெற்றுக்கொண்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் சந்தர்ப் பங்களைத் தவறவிட்ட உடுப்பிட்டிப் பிரதேச செயலக அணியால் கோல்கள் எத னையும் பெறமுடியவில்லை. இந்நிலை யில் ஆட்டம் முடிவடையவே பருத்தித்து றைப் பிரதேச செயலக அணி 2:0 எனும் கோல்கணக்கில் உடுப்பிட்டிப் பிரதேச செயலக அணியை வெற்றிகொண்டு சம் பியனானது. (6-86)

## சர்வதேச ஒலிம்பிக் தின வினாடி- வினாப் போட்டி முதலிடம் சென்.ஜோன்ஸுக்கு

ஊர்காவற்றுறை, ஜூன் 28

சர்வதேச ஒலிம்பிக் தினத்தையொட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்ட ரங்கில் நடைபெற்ற வினாடி- வினாப் போட் டியில் முதலிடத்தை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியினர் பெற்றனர்.

இரண்டாம் இடத்தை ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரியினர் பெற்ற னர். இந்தக் கல்லூரி சார்பில் ஜெ.டொமின்கோ, அ.அருள்வபில்றாஜ், யே.குவ ரோனிக்கா, பா.தர்சிகா ஆகியோர் பங்குபற்றினர். இவர் களுக்குப் பரிசுத்தொகையாக 16ஆயிரம் ரூபாவும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

(6-325)

## கடும் சவால்களை ஏற்படுத்திய எல்லேப் போட்டி; பருத்தித்துறைப் பிரதேச செயலகம் சம்பியனானது!

வலி.வடக்கு, ஜூன் 28

வட மாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செய லக விளையாட்டுப் பிரிவுப் பிரதேச செய லகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுக ளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான எல்லேப் போட்டியில் பருத்தித்துறைப் பிர தேச செயலக அணி மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட் டரங்கில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

இரண்டு இனிங்ஸ்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் முதலில் விளையாடிய தெல்லிப் பழைப் பிரதேச செயலக அணி 03 ஓட்டங்க ளைப் பெற்று அனைவரும் ஆட்டமிழந்தனர்.

ஜெவன்ராஜ், சந்தோஷ், சுதன் தலா ஒரு ஓட்டத்தைப் பெற்றனர்.

பதிலுக்கு விளையாடிய பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 06 ஓட்டங்களைப் பெற்று அனைவரும் ஆட்டமிழந்தனர்.

விமல்ராஜ் 02, வினோத் 02, சிவதர்சன், இராஜ்குமார் தலா ஒரு ஓட்டத்தையும் பெற் றுக் கொண்டார்கள்.

இரண்டாவது இனிங்ஸில் தெல்லிப்ப ழைப் பிரதேச செயலக அணி வீரர்கள் எட் டுப் பேர் ஆட்டமிழந்த நிலையில் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் 14ஆவது வீரனாக விளையாடிய பிரசன்னா தனது முத லாவது ஓட்டத்தைப் பெற்றார்.

தொடர்ந்து ஆடிய இரு வீரர்களும் இரண் டாவது இனிங்ஸில் 06 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்கள்.

பிரசன்னா 04, கபிலன், அனுரதன் தலா ஒரு ஓட்டத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

04 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பருத்தித் துறைப் பிரதேச செயலக அணி 14 பேர் ஆட் டமிழந்த நிலையில் 04 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி.

ஆட்ட நிறைவில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 10:09 ஓட்டங்கள் என்ற அடிப்படையில் தெல்லிப்பழைப் பிர தேச செயலக அணியை வெற்றிபெற்று மாவட்ட சம்பியனாகத் தெரிவாகியது. (86)

# துடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் றொசான் கலக்கல்; உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷனை வென்றது ஸ்கந்தா!

யாழ்ப்பாணம், ஜூன் 28

றொசானின் அரைச்சதமும் மதுசனின் பந்து வீச்சும் கைகொடுக்க உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை 9 விக் கெட்டுக்களால் வென்றது சுன்னாகம் ஸ்கந் தவரோதயாக் கல்லூரி.

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் அகில இலங்கை ரீதி யில் நடைபெறும் 15 வயதுக்குட்பட்டோ ருக்கான கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சுன்னாகம் ஸ்கந் தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக் கன் மிஷன் கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந் தவரோதயாக் கல்லூரியும் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உடுப் பிட்டி அமெரிக்கன் மிஷனை முதலில் துடுப் பெடுத்தாடுமாறு அழைத்தது.

இதன்படி முதலில் ஆடிய ஸ்கந்தவரோ தயாக் கல்லூரி 25 ஓவர்களில் சகல விக்

கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்க ளைப் பெற்றுக்கொண்டது. ஸ்கந்தா சார் பில் துடுப்பெடுத்தாடிய ஆர்.நிரோஜன் 3 பௌண்டறிகள் ஒரு சிக்ஸர் உட்பட 28 ஓட் டங்களையும் பு.சஞ்சீவன் 21 ஓட்டங்களை யும் பெற்றனர்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் பந்து வீசிய எஸ்.மதுசன் 5 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக் கெட்டுக்களையும் றொசான் 5 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஜே.ஜனக்சன் 2 விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

119 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த ஸ்கந் தவரோதயாக் கல்லூரி 19 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றிபெற் றது.

பந்து வீச்சில் அசத்திய றொசான் துடுப் பாட்டத்திலும் அதிரடி காட்டினார். றொசான் 9 பௌண்டறிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 65 ஓட்டங்களையும் நிறோஸ் 16 ஓட்டங்க ளையும் பெற்றனர்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் சார் பில் பந்துவீசிய பி.பிரணவன் ஒரு விக் கெட்டை வீழ்த்தினார்.

(6-55)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியில் மாவட்ட சம்பியனான பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியையும்- இரண்டாமிடத்தைப் பெற்ற தெல் லிப்பழைப் பிரதேச செயலக அணியையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டில்...

# உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் 5 நாள்கள் நிகழ்வுகளும் ஒரே பார்வையில்

தமிழகத்தின் கோவையில் கோலா கலமாக ஐந்து நாள்களாக நடைபெற்று வந்த உலகத் தமிழ்ச் செம் மொழி மாநாடு நேற்று மாலையுடன் நிறைவடைந்தது. நிறைவு விழாவில், தமிழ் வளர்ச்சிக்காக பல்வேறு முக் கிய அறிவிப்புகளை தமிழக முதல்வர் கருணாநிதி வெளி யிட்டார். உதயன் வாசகர்களுக்காக செம்மொழி மாநாட் டின் 5 நாள் நிகழ்வுகளும் சுருக் கமாக ஒரே பார்வையில் இங்கு பட்டியல் இடப்படுகின்றன.

கலைஞர் கருணாநிதி கண்காட்சியை பார்வையிடுகிறார்

கலைஞர் கருணாநிதியின் பேர்த்தியான எழிலரசி ஜோதிமணியின் வீணை இசைக் கச்சேரி.

### மாநாட்டின் முதல் நாள் விழா

தமிழைச் செம்மொழியாக அறிவித்த பின்பு நடைபெறும் முதல் மாநாடு என் பதால், மிகுந்த உற்சாகத்துடன் மாநாடு கோலாகலமாகத் தொடங்கியது. தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில்நடை பெற்ற இந்த விழாவை இந்திய ஜனாதி பதி பிரதீபா பாட்டீல் தொடக்கி வைத்தார். பின்லாந்து அறிஞர் அஸ்கோ பர்போலா வுக்கு கலைஞர் கருணாநிதியால் 'செம் மொழித் தமிழ் விருது' வழங்கி கௌரவிக் கப்பட்டது. 'இனியவை-40' என்ற பெய ரில் தமிழர் பண்பாடு, கலாசாரத்தை பிரதி பலிக்கும் வகையில் நடந்த பிரமாண்ட மான பேரணியை பல லட்சம் மக்கள் கண்டு ரசித்தனர்.

### மாநாட்டின் இரண்டாம் நாள் விழா

இரண்டாம் நாளில் ஆய்வரங்கத்தை இலங்கைத் தமிழறிஞர் பேராசியர் கா.சிவத் தம்பி தலைமையில் முதல்வர் கருணாநிதி தொடக்கி வைத்தார். இணையத் தமிழ் மாநாட்டை சிங்கப்பூர் அமைச்சர் ஈஸ்வரன் தொடக்கி வைத்தார்.

50க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து வந்திருந்த 1020 அறிஞர்கள் ஆய்வுக்கட்டு ரைகளைச் சமர்ப்பித்தனர். மலேசியா, சிங்கப்பூர், இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் இருந்து ஏராளமான பார்வையா ளர்களும் ஆர்வத்துடன் பங் கேற்றனர்.

தமிழர் கலாசார சிறப்புகளை விளக்கும் கண்காட்சி, இணையக் கண்காட்சி, புத்தகக் கண்காட்சி ஆகியவையும் நடைபெற்றன. இணையக் கண்காட்சியை இந்தி மத்திய ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதி மாறன், புத்தகக் கண்காட்சியை மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன், பொதுக் கண்காட்சியை டி.ஆர்.பாலு ஆகியோர் திறந்து வைத்த னர்.பயனுள்ள வகையில் அமைந்திருந்த இந்தக் கண்காட்சிகளை லட்சக் கணக்கான மக்கள் பல மணி நேரம் வரிசையில் காத்திருந்து பார்த்தனர்.

### மாநாட்டின் மூன்றாம் நாள் விழா

மூன்றாம் நாள் நிகழ்ச்சி யில் முதல்வர் கருணாநிதி தலைமையில் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கம் நடை பெற்றது. இதில் இந் திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலா ளர் டி.ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யின் அரசியல் தலைமைக்குழு உறுப்பி னர் சீதாராம் யெச்சூரி, தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, பாரதிய ஜனதா கட்சி யின் முன்னாள் தமிழகத் தலைவர் இல. கணேசன், திராவிடர் கழகத் தலைவர் வீரமணி, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஜி.கே.மணி உட்பட பல்வேறு கட்சித் தலைவர்களும் பங்கேற்று தமிழ் மொழி யின் பயன்பாடு பரவலாக்கப்பட வேண்டி யதன் அவசியம் குறித்து தமது கருத்துக் களைத் தெரிவித்தனர்.

பார்வையாளர்களோடு இணைந்து உணவு வரிசையில் காத்திருக்கும் கலைஞரின் மகள் கனிமொழி

### மாநாட்டின் நான்காம் நாள் விழா

நான்காம் நாளில் கவிஞர் வாலி தலை மையில் கவி யரங்கம், தமிழறிஞர் வா.செ. குழந்தைசாமி, க.ப.அற வ ா ண ன் தலைமை யில் த னி த் த னி கருத்தரங்கங் கள், சாலமன் பாப்பையா தலைமையில் பட்டி மன்றம் என்பனபோன்ற இ ல க் கி ய நயம் சார் நிகழ் வுகள் நடந்தேறின.

செம்மொழி மாநாட்டில் வெளியிடப்பட்ட சிறப்பு முத்திரை

### மாநாட்டு நிறைவு விழா

தமிழ் இணைய மாநாட்டு நிறைவு விழா நேற்று மாலை 4 மணிக்கு பொது அரங்கில் நடைபெற்றது. இந்திய நிதிய மைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமை வகித் தார். இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம் பரம் நிகழ்வுக்கு முன்னிலை வகித்தார். மாநாட்டை முடித்து வைத்த, தமிழக முதல்வர் கருணாநிதி, சிறந்த தமிழ் மென் பொருள்களை உருவாக்கியவர்களுக்கு 'கனியன் பூங்குன்றனார் பரிசு' வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் தமிழர்களின தும் தமிழ் மொழியினதும் வளர்ச்சிக்காக பல்வேறு முக்கிய அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டார். மாநாட்டு நினை வாக சிறப்பு தபால் தலையை இந்தியத் தொலைத்தொடர்பு அமைச்சர் ராசா வெளி யிட்டார். கோவையில் நேற்று நடைபெற்ற மாநாட்டின் நிறைவு விழாவில் லட்சக் கணக்கானோர் பங்கேற்றனர். (எ)

# செம்மொழி மாநாட்டு சனத்திரளில் காணாமற்போன குழந்தைகள் மீட்பு

செம்மொழி மாநாட்டில் பங்கேற்பதற் காக தமிழகத்தின் பல பாகங்களில் இருந் தும் குடும்பத்துடன் வந்தவர்களில் சிலர் தமது குழந்தைகளைத் தவறவிட்டு விட் டனர். பெரும் சனத் திரளினுள் காணாமற் போன தமது பிள்ளைகள் மீளக் கிடைக் குமோ என்ற சந்தேகம் எழுந்ததால் பெற் றோர் அழுகையுடன் அருகிலுள்ள காவல் துறை உதவி மையங்களில் கூடினர்.

இவ்வாறு குழந்தைகள் தவறவிடப் பட்ட தகவல் கட்டுப்பாட்டு அறையி லுள்ள பொலிஸாருக்கு தெரிவிக்கப் பட்டு,அவர்கள் மூலம் மாநாட்டு வளா கத்தில் சாதாரண உடையில் பணியில் இருந்து பொலிஸாருக்கு தொலைத் தொடர்பு கருவி மூலம் தகவல் பரிமாறப் பட்டது. இதன் பின்னர் அவர்கள் எடுத்த நட்வடிக்கையின் பயனாக பெற்றோரில் லாமல் தனியாகச் சுற்றித்திரிந்த 30 குழந் தைகளை கண்டுபிடித்து மீட்ட பொலி ஸார், அவர்களைப் பெற்றோரிடம் சேர்த் தனர். இவ்வளவு பெரிய கூட்டத்தில் குழந்தை கள் தவறிச் சென்றிருந்தாலும் மீட்டு ஒப் படைத்த பொலிஸாரை பலரும் பாராட்டினர்.

# ஒன்றரை லட்சம் தலைப்புகளில் ஒரு கோடி புத்தகங்கள் கண்காட்சியில்

கண்காட்சியைக் காண அலைமோதும் சனக் கூட்டம்

செம்மொழி மாநாட்டில் புத்தக கண் காட்சியும் பெரும் வரவேற்புடன் நடந்து வருகிறது. சிஐடி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றுவரும் இப்புத்தக கண்காட்சி யில் 136 காட்சி அறைகள் அமைக்கப் பட்டுள்ளன. 35 ஆயிரம் சதுர அடி பரப்பள வில் புத்தகக் கண்காட்சிக் கூடம் அமைக் கப்பட்டுள்ளது.

கண்காட்சியில் முத்தாய்ப் பாக உல கத் தமிழ்ச் சங்கம் சார்பில் பிர மாண் டமான திருக்குறள் புத்தகம் காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளது. 6 அடி உயரமும், 3 அடி அகலமும் கொண்ட இந்தத் திருக்குறள் புத்தகம் ஒரு தொன்னுக்கும் அதி கமான எடை கொண்டது. இந்தத் திருக்குறள் புத்தகத்தைப் பொதுமக்கள் திரண்டு வந்து மிக ஆர்வத்துடன் பார்த்துச் செல் கின்றனர். கண்காட்சியில் சங்க கால, இடைக்கால, தற்கால, நவீன கால இலக்கியங்கள் இடம்பெற் றுள்ளன. ஒன்றரை லட்சம் தலைப்பு களில் ஒரு கோடி புத்தகங்கள் இக் கண்காட்சி யில் இடம்பெற்றுள்ளன.

இதில் இலக்கியப் புத்தகங்கள், கவிஞர் வாலி, கவிஞர் வைரமுத்து போன்றோர் எழுதிய புத்தகங்கள், முதல்வர் கருணா நிதி எழுதிய புத்தகங்கள் அதிக அளவில் விற்பனையாகின்றன எனக் கூறப்படுகின் றது. இதுவரை 3 லட்சத்திற்கும் மேற்பட் டோர் இப் புத்தக கண்காட்சியை பார்வை யிட்டுள்ளனர். (எ)

# தமிழர்களின் வழித்தோன்றல்களே கொரியர்கள் ஆதாரத்தோடு விஞ்ஞானி கண்ணன் விளக்கம்



தமிழர்களின் வழித் தோன்றல் களே கொரியர்கள். தமிழ் மொழியில் இருந்து பிறந்தது தான் கொரிய மொழி. அங்குள்ள எழுத்து வடிவங்கள் இதனை புலப் படுத் துகின்றன, என்று தமிழ் இணைய மாநாட்டில் ஆதாரங்க ளுடன் விளக்கினார் கொரிய நாட்டு விஞ் ஞானி கண்ணன்.

செம்மொழி மாநாட்டில் தமிழ் மென் பொருள் மற்றும் இணையப் பக்கங்கள் உருவாக்கியவர்களுடனான கலந்துரையா டல் நிகழ்ச்சியில் கொரியா நாட்டின் விஞ் ஞானி கண்ணன், கொரியா நாட்டுக்கும், தமிழகத்துக்கும் உள்ள தொடர்பு குறித்து விளக்கி பேசினார். அப்போது அவர் கூறி யவை வருமாறு:-

தமிழில் இருந்து பிறந்தது தான் கொரிய மொழி. அங்குள்ள எழுத்து வடிவங்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன. கொரிய மொழி வரிவடிவம் பெறாத நேரத்தில், தமிழின் வரிவடிவத்தை கொண்டே கொரிய மொழியின் வடிவம் அமைக்கப்பட்டுள் ளது. இதற்கு ஆதாரங்கள் உள்ளன. மொழி ஒற்றுமையைப் போன்று பல்வேறு ஒற் றுமைகள் தமிழ்-கொரியாவுக்கிடையே உள்ளது. பாண்டிய நாட்டின் இலச்சினை யான மீன் இலச்சினைகள் கொரியாவில் பயன்படுத்தப்படுகின்றன. சொல்லா எனும் மாவட்டம் கொரியாவில் உள்ளது. இது சோழா எனும் பெயரின் திரிந்த சொல் லாகவே கருதத் தோன்றுகிறது.

இதேபோல், உணவு முறைகளிலும் கொரியாவுக்கும் தமிழுக்கும் தொடர்புள் ளது. தோசை, கொழுக்கட்டை உள்ளிட்ட தமிழர்களின் உணவுகள் அங்கு பிரதான உணவுகளாக உள்ளன. அதேபோல், பெரு மாள் கோயிலும் அங்குள்ளது. தமிழர் களின் பழக்க வழக்கங்கள் அங்கு பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய் வின் படி, தமிழர்களின் வழிவந்தவர்களா கவே கொரியர்கள் கருதப்படுகின்றனர். பலர் இதை ஒப்புக்கொண்டுள்ளனர். இது பற்றிய மேலும் ஆதாரங்களை திரட்ட இது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு கண்ணன் பேசி னார். இந்த நிகழ்வின் போது, தமிழ் மற்றும் கொரிய மொழிகளுக்கு உள்ள தொடர்பு மற்றும் மக்களுக்குள்ள தொடர்புகள் குறித்த ஆதாரங்களை அவர் படங்கள் மூலமும் விளக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களே உலகின் முதல் இனம் அதற்குச் சான்று குமரிக்கண்டம்!

## செம்மொழிக் கருத்தரங்கில் அன்பழகன் பெருமிதம்

கோவை,ஜூன்28

உலகத்திலேயே தமிழர்கள்தான் முதல் முதலாகத் தோன்றிய இனம் என்பதற்கு குமரிக்கண்டம் ஒரு சான்றாக உள்ளது - என்று நிதியமைச்சர் க.அன்பழகன் குறிப்பிட்டார்.

தமிழ்ச் செம்மொழி மாநாட்டை ஒட்டி சனிக்கிழமை நடைபெற்ற 'தமிழ்ச் செம் மொழியின் தனித்தன்மை' எனும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் கூறியவை வருமாறு -

தமிழ்ச் சொற்கள் பல வடமொழியில் கலந்தன. பின்னர், வடமொழி பேச்சு வழக் கிலிருந்து விடுபட்டதால் அதில் கூடுதல் தமிழ் மொழிக் கலப்பு ஏற்படும் வாய்ப்பு இல்லாமல் போனது. ஆனால், தமிழ் தொடர்ந்து பேச்சு வழக்கில் இருந்ததால் வடமொழிச் சொற்கள் கலப்பது நீடித்தது. அதைக்காரணம் காட்டி, தமிழை மட்டுப் படுத்தும் முயற்சிகள் இடைக்காலம் முதல் நடைபெற்றன.

ஆனால், பரிதிமாற் கலைஞர் உள் ளிட்ட தமிழறிஞர்களின் தனித்தமிழ் முயற் சிகள், அதனைத் தடுப்பதில் நல்ல பங்க ளிப்பை ஏற்படுத்தின. உலகத்திலேயே தமிழினம்தான் முதன் முதலாகத் தோன் றிய இனம் என்பதற்கு குமரிக்கண்டம் ஒரு சான்றாக உள்ளது. ஒரு மொழி கண்ட நாக ரிகம், மூதறிஞர்கள் கண்ட நாகரிகம் என் றால் அது தமிழ் மொழியைத்தான் குறிப் பிடும். மொழி வேறு, நாம் வேறு என்பதை நான்மறை என்று தெரிவிக்கப்பட்டது.

அது ஆரம்ப காலத்தில் எவ்வாறு தோன்றியிருக்கும் என்றால் ஒருமறை யாகத் தோன்றி நாளடைவில் மும்மறை யாக உருவெடுத்து பிற்காலத்தில் நான்மறையாகத் தோன்றியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

உலகத்தார் அனைவருக்கும் தமிழர் தான் நல்வழி காட்டினர் என்று புராணங் களில் கூறப்படுகிறது. அறிவியல் ஆய்வா ளர்கள் உலகில் ஒரே ஒரு மொழிதான் தோன்றியிருக்கக் கூடும் என்று கூறி யுள்ளனர். ஒருமொழி என்பது இன்றைய வளர்ச்சி பெற்ற மொழியாக இருப்பதற்குக் காரணம், தொடக்கத்தில் அம்மொழி குழந்தையின் மழலை மொழியாகத்தான் தோன்றியிருக்கக் கூடும்.

- இப்படி அன்பழகன் கூறினார்.

# தமிழுக்கு வயது 10 ஆயிரம்

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தெரிவிப்பு

கோவை,ஜூன்28

தொன்மைமிக்க தமிழ் இலக்கியத்தின் வயது 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட் டது - என்று தவத்திரு குன்றக்குடி பொன் னம்பல அடிகளார் தெரிவித்தார்.

தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் 4 ஆம் நாளான சனிக்கிழமை மாநாட்டுப் பொது அரங்கில் 'செம்மொழித் தகுதி' எனும் தலைப்பிலான கருத்தரங்கில் 'தொன்மை யில்' எனும் பொருளில் அவர் பேசியவை வருமாறு -

வணிகத்தின் மொழி ஆங்கிலம், தூதின் மொழி பிரெஞ்சு, காதலின் மொழி இத்தாலி, தத்துவத்தின் மொழி ஜெர்மனி. ஆனால், உலகிலேயே பக்தியின் மொழி தமிழ்தான்.

காயப்பட்டு, சேதப்பட்டு, சிதைக்கப் பட்டுக் கிடந்த தமிழைச் செம்மொழி எனும் சிம்மாசனத்தில் அமர வைத்து மணி மகுடம் சூட்டிய பெருமை கருணாநிதி யையே சாரும்.

தொல்காப்பிய இலக்கண மருந்தை இலக்கியத் தேனில் குழைத்து தொல்காப் பியத்தை பாமரனும் படிக்கும் வகையில் தொல்காப்பியப் பூங்காவாக மாற்றிக் காட் டினார். தமிழ் இலக்கணத்தின் தொடை வகைகள் 13,699 ஆகும்.

இதில் எதிலும் சேராத செந்தொடை வகைகள் 8556 ஆகும். இவற்றின் இலக் கிய வளம், காலத்தைக் கணக்கில் கொண் டால் அவை தொல்காப்பியம் தோன்றிய தற்கு 7 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும். அப்படியா னால், தமிழ் இலக்கியத்தின் வயது 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் இருக்க வேண்டும் என்று இலக்கணச் சான்றுகள் கூறுகின்றன.

ஆகவே, தமிழின் தொன்மையின் அடையாளத்தை இலக்கியம், இலக்கணம் வாயிலாக அறிய முடிகிறது. குறுந்தொகை யின் காலம்கூட கி.மு. 5 ஆம் நூற்றாண் டுக்கு முற்பட்டதாக உள்ளது. எழுத்தின் ஆதாரமாகத் தமிழின் 'யா' என்ற எழுத்தும் உள்ளது.

சேரனின் மூதாதையர்கூட சிந்துசமவெளி நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களும் தமிழ் மண்ணைச் சேர்ந்தவர்கள், அவர் களது மொழியும் தமிழே என்று கல்வெட் டுகள், சில்லுகள் தெரிவிக்கின்றன.

மண்பாண்டங்களில் தமிழ் எழுத்துகள் அதிகமாகக் காணப்படுவதும் தமிழகத்தில் தான் என்று கல்வெட்டு ஆராய்ச்சியாளர் ஐராவதம் மகாதேவன் போன்றோர் எடுத்து ரைக்கின்றனர். அப்படியெனில், தமிழர் கள் எவ்வளவு புராதன காலத்திலேயே எழுத்தறிவைப் பெற்றவர்களாக விளங்கி வந்திருக்கிறார்கள் என்பது நன்கு தெரிய வரும். ஆகையால், தொன்மை என்பது நாம் வாழ்ந்ததன் பழைய அடையாளம் அல்ல. நமது ஆணிவேரின் அடையாளம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# தமிழ் இலக்கியங்கள் குறித்து அறிய ரஷ்ய நாட்டு இளைஞர்கள் ஆர்வம்

## அந்நாட்டு தமிழறிஞர் தெரிவிப்பு

கோவை,ஜூன்28

தமிழ் இலக்கியம் பற்றி அறிய ரஷ்ய இளைஞர்களிடம் ஆர்வம் அதிகரித்துள் ளது. உலகம் முழுவதும் தமிழ்ப் பண்பாடு, கலாசாரத்தைப் பரப்ப தமிழர்கள் தீவிர முயற்சி எடுக்க வேண்டும் - என்று ரஷ்ய தமிழறிஞர் அலெக்சாண்டர் துபியான்ஸ்கி வலியுறுத்தினார்.

தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி நடைபெற்ற ஆய்வரங்கில் 'சிலப்பதிகாரத் தில் உள்ள ஆய்வு சிக்கல்கள்' என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரையை சமர்ப் பித்த பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியவை வரு மாறு -

ஒப்பிலக்கியம் குறித்த ஆய்வில் ஈடு பட்டு வருகிறேன். சிலப்பதிகாரம் தனித் தமிழ் இலக்கியம் அல்ல. இது ஒரு சிக்க லான இலக்கியம். இந்திய இலக்கியங் களின் மரபுகள் இவற்றில் பொதிந்துள் ளன. சமஸ்கிருதம், தமிழ்ப் பண்பாடுகள் இவற்றில் உள்ளன.

இவை இரண்டையும் சேர்க்க முயற்சி நடைபெற்றுள்ளது ஆய்வில் தெரிகிறது. தமிழ் இலக்கியம் பற்றி அறிய ரஷ்ய இளைஞர்களிடம் ஆர்வம் அதிகரித்துள் ளது.

தமிழ் செம்மொழி என்பதை உணர வேண்டும். பின்னர் அது குறித்து பிற நாடுகளில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பிற நாடுகளில் தமிழர்களின் பண்பாடு, கலாசாரத்தைப் பரப்ப தமிழர் கள் முயற்சி எடுக்க வேண்டும். தமிழ் ஆய்வு செய்யும் வெளிநாட்டு அறிஞர் களுக்கு, தமிழக அரசின் உதவி தேவை.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# தமிழக சட்டசபை காங்கிரஸ் தலைவர் சுதர்சனத்தின் பூதவுடல் இன்று தகனம்

சென்னை,ஜூன்28

தமிழக சட்டசபையின் காங்கிரஸ் தலைவர் சுதர்சனத்தின் உடல் சென்னை யில் இன்று தகனம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதர்சனம் கடந்த 23ஆம் திகதி கோவை மாநாட்டிற்கு வந்தார். அங்கு திடீர் நெஞ்சு வலி ஏற்பட்டதால் அவினாசியிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்ட சுதர்சனத்துக்கு சத்திர சிகிச்சை நடந் தது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி சனிக் கிழமை இரவு அவர் காலமானார்.

இவரின் பூதவுடலுக்கு கருணாநிதி நேரில் அஞ்சலி செலுத்தினார்.

சுதர்சனத்தின் உடல் சென்னையில் இன்று தகனம் செய்யப்படும் என அறி விக்கப்பட்டுள்ளது. இன்று மாலை 4 மணிக்கு சென்னை அமைந்தகரையில் அவரது உடல் தகனம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதர்சனத்தின் உடல் கோவையிலி ருந்து நேற்றுக்காலை சென்னை கொண்டு வரப்பட்டது. பெரம்பூரில் உள்ள அவ ரது வீட்டில் மக்கள் அஞ்சலிக்காக அவரது உடல் வைக்கப்பட்டுள்ளது.

**இந்தியச் செய்திகள்**

# மாநாட்டின் இறுதி நாளான நேற்று சிவகுமார் தலைமையில் கருத்தரங்கு

செம்மொழி மாநாட்டின் 5 ஆவது நாளான நேற்றுக்காலை 9 மணிக்கு பொது அரங்க நிகழ்ச்சிகள் திருக்குவளை சகோதரிகள் மங்கல இசையுடன் ஆரம்பமாகின. 10 மணிக்கு, 'வித்தாக விளங்கும் செம்மொழி' என்ற தலைப் பில் கருத்தரங்கு நடந்தது.

கருத்தரங்கை சுப.வீரபாண்டியன் தொடக்கி வைத்தார். நடிகர் சிவக்குமார் தலைமை தாங்கினார். ஜெகத் கஸ்பார், பர்வீன் சுல்தான், சட்டத்தரணிகள் ம.ராம லிங்கம், அ.அருள் மொழி, கம்பம் செல் வேந்திரன், திருச்சி செல்வேந்திரன் ஆகி யோர் பல்வேறு தலைப்பு களில் பேசினர்.

தொல்காப்பியர் அரங்கில் காலை 9.15 மணிக்கு, 'இன்றைய நோக்கில் தொல் காப் பியம்' என்ற தலைப்பில் முகப்பரங்கம் நடந் தது. இதற்கு பொன்.கோதண்டராமன் தலைமை தாங்கினார். அலெக்சாண்டர் துபியான்ஸ்கி சொற்பொழிவாற்றினார்.

திருவள்ளுவர் அரங்கில் 10.30 மணிக்கு தமிழ் வளர்ச்சி என்ற தலைப்பில் பொழிவ ரங்கம் நடந்தது. பொழிவரங்கத்துக்கு அவ்வை நடராஜன் தலைமை தாங்கினார். இளங்கோ அரங்கில் பகல் 12 மணிக்கு முனைவர் சிவத்தம்பி தலைமையில் 'படைப்பிலக்கிய நோக்கும் போக்கும்' என்ற தலைப்பில் கலந்துரையரங்கம் நடந்தது.

பகல் 2 மணிக்கு இளங்கோ அரங்கில் எதிர்காலத்தமிழ் கவிதை என்ற தலைப் பில் பொழிவரங்கம் நடந்தது. இதற்கு கவிஞர் வைரமுத்து தலைமை தாங்கினார்.

மாநாட்டு வளாகத்தில் பகல் 2 மணிக்கு தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையம் வழங்கிய கலை நிகழ்ச்சி இடம் பெற்றது. 2.30 மணிக்கு பாலசாயி குழுவி னரின் கலந்திசை நிகழ்ச்சி நடந்தது.

# செம்மொழி அலுவலகமாகிறது பழைய சட்டசபைக் கட்டடம்!

## உறுதிப்படுத்தினார் கருணாநிதி

கோவை,ஜூன் 28

சென்னை செயின்ட் ஜோர்ஜ் கோட் டையில் தமிழ்ச் செம்மொழித் தலைமை அலுவலகம் அமைக்கப்படும் என்பதை முதல்வர் கருணாநிதி உறுதிப்படுத்தி னார்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கருத்தரங்கிற் குத் தலைமை வகித்து முதல்வர் பேசிய வை வருமாறு -

தமிழரை வாழ வைக்கவும், தமிழை மேலும் உயர்த்தவும் என்னென்ன செய்ய வேண்டும் என்று இங்கு தலைவர்கள், மக் கள் கொடுத்த கட்டளைகளை ஏற்று நிச்சயம் செயற்படுவோம் என்று நான் உறுதி அளிக்கிறேன். எங்கும் தமிழ் என்று கூறும் நாம், ஏங்கும் தமிழ் என்ற கவலை யளிக்கும் கட்டத்தில் உள்ளோம்.

நாங்கள் உடல் மண்ணுக்கு உயிர் தமி ழுக்கு என்ற வழியில் வந்த வீர வரலாற் றுக்கு உரியவர்கள். தமிழுக்காக தமிழகத் தில் பெரும் மறுமலர்ச்சி ஏற்பட வேண் டும். அது இந்த மாநாட்டில் கலந்து கொள் வதாலோ, அரங்குகளில் நடைபெறும் அமர்வுகளாலோ முடிந்துவிடக் கூடியது அல்ல.

தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்ததுபோல மைசூரில் உள்ள செம் மொழி அலுவலகத்தை தமிழகத் துக்கு மாற்றவேண்டும் என்று கோரிக்கை விடுத் தனர். இதனால் ஒரு சிறிய இடத்தை வாடகைக்கு வாங்கி நடத்துகிறோம்.

புதிய சட்டசபைக் கட்டடம் கட்டப் பட்ட பிறகு பழைய சட்டப்பேரவைக் கட் டடத்தை என்ன செய்வது என்று யோசித் தோம். இப்போது பழைய செயின்ட் ஜோர்ஜ் கோட்டையில் செம்மொழித் தமிழ் தலைமை அலுவலகம் அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

- இப்படி முதல்வர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 47 ஆம் நாள் நினைவில்

அன்னை மடியில்
05 ★ 05 ★ 1978

ஆண்டவன் அடியில்
13 ★ 05 ★ 2010

அமரர்

**கந்தையா சத்தியசீலன் (மாறன்)**

நல்ல இதயம் ஒன்று நடு வீதியில் சாய்ந்ததையா!
கல் இதயம் கொண்ட காலன் கணத்தில் எடுத்தானையா!
பல் இதயங்கள் சொல்லொணாச் சோகத்தில் ஆழ்ந்ததையா!

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இந்தியாவில் நடைபெறும்.

திருமதி விஜிதா (மனைவி) பிள்ளைகள்
19/1, திருவள்ளுவர் காலனி,
64 தெரு பத்து பேச்சர்,
கே.கே. நகர், 678000, சென்னை

என்றும் பாசத்துடன்:
இ.கந்தையா குடும்பத்தினர்.
கைதடி தெற்கு, கைதடி.

## திருமறைக் கலாமன்றம்

கலைத்தூது அழகியல் கல்லூரி

**கணினிக் கற்கை நெறி**

MS Office (01 மாதம் / 03 மாதம்)

- குளிரூட்டப்பட்ட கணனி ஆய்வு கூடம்
- ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் பயிற்சிக்காக தனிப்பட்ட கணனி வழங்கப்படும்.
- கற்கும் போதே கணனி செய்முறை விளக்கமும் வழங்கப்படும்.

(பகுதி நேரம் அவசியமில்லை)

- திங்கள் - வெள்ளி வரை வகுப்புக்கள் நடைபெறும்.
- தொழில் புரிவோருக்கு சனி, ஞாயிறு தினங்களில் விசேட வகுப்புகள்.
- ஒரு பிரிவில் 10 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- கற்பித்தல் இலவசம்.
- வகுப்புகள் ஆரம்பம் 01.07.2010

மேலதிக விபரங்களுக்கு மன்ற அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

வெற்றிடங்கள்:- கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)

தகைமைகள்: கா.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(a) இளைப்பாறிய பொலிஸ்/படை உத்தியோகத்தர்கள், சாரணர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

(b) தடகள, கிரிக்கெட், உதைபந்தாட்டம், கராட்டி, கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் சிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு: மேற்கூறப்பட்ட தகைமையில் a+b உள்ளவர்களுக்கு கல்வித்தகைமையில் விலகல் அளிக்கப்படும்.

நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.

(i) உயரம் 5'4''

(ii) 22 வயதிற்கு மேற்பட்டோர் (சம்பளம் மாதமொன்றுக்கு EPF&ETF உட்பட ரூபா 11000/=)

நேர்முகப்பரீட்சை 337 1/1, கஸ்தூரியார் வீதியிலுள்ள பணிமனையில் 03.07.2010 சனிக்கிழமை அன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறும். கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் சமூகமளிக்கவும்.

01. கிராம சேவகரின் நற்சான்றுப் பத்திரம் (6 மாதத்திற்கு உட்பட்டது)
02. வதிவிடச் சான்றிதழ்
03. பிறப்புஅத்தாட்சிப்பத்திரம்
04. கல்வித்தராதரப் பத்திரங்கள்
05. தேசிய அடையாள அட்டை
06. குடும்ப அட்டை

இவை அனைத்தினதும் உண்மைப் பிரதியுடன் போட்டோப் பிரதியும் கொண்டுவரவும்.

**337 1/1, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (சி/568723) **பணிப்பாளர்.**

## முக்கிய அறிவித்தல்

### கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம் கிளிநொச்சி

30.04.2009ஆம் திகதியின் மேற்படி எமது சங்கத்தின் மூல தனக் கணக்குகளை ஒழுங்கமைக்கும் முகமாகக் கீழ்வரும் விவரங்கள் தொடர்பில், சங்க நடவடிக்கையுடன் தொடர்பு கொண்டுள்ளவர்களிடமிருந்து 30.04.2009இல் உள்ளவாறான மீதிகளை உறுதிப்படுத்தி சங்கத்தின் தலைவர்/பொது முகாமையாளர் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கனகபுரம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 10.07.2010 ஆம் திகதிக்கு முன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

I)01 வியாபார வருமதிகள் (சங்கத்திற்கு)
02) வியாபாரச் சென்மதிகள் (சங்கத்திடமிருந்து)
03) சங்கத்திடம் பெற்றுக்கொண்ட கடன்
04) சங்கத்திற்கு வழங்கிய கடன்
05) சங்கத்திற்கு வழங்கிய ஏனைய சென்மதிகள்
06) சங்கத்திடம் பெற்றுக்கொண்ட ஏனைய வருமதிகள்
07) மற்றும் வரவேண்டிய முற்பணங்கள், செலுத்த வேண்டிய முற்பணங்கள்.

II) சங்கத்தின் கிராமிய வங்கியில் வைப்புச் செய்தவர்கள் (நிலையான வைப்புக்கள், சேம வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்கள்) தங்களது சேமப் புத்தகங்களை சங்கத்தில் சமர்ப்பித்து மேற்படி 30.04.2009ஆம் திகதியின் மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

III) சங்கத்தின் கிராமிய வங்கிகளினூடாகவும் நேரடியாகவும் கடன்பெற்றவர்கள் 30.04.2009 இல் சென்மதிமீதிகளை உறுதிப்படுத்த உறுதிச் சான்றுகளைச் சமர்ப்பித்தல்.

IV) மற்றும் சங்கத்தின் வியாபார நடவடிக்கையோடு தொடர்புடைய விடயங்கள் இருப்பின் அது பற்றியும் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும்.

திரு.ச.மோகனபவன்
தலைவர்,
கரைச்சி தெ.ப.நோ.கூ.சங்கம்.

திரு.செ.பாலேந்திரன்
பொதுமுகாமையாளர்,
கரைச்சி தெ.ப.நோ.கூ. சங்கம்.

## Deutsch வகுப்புக்கள்

German Swiss மொழி வகுப்புக்கள் தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகின்றன.[Germany இல் இருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது).

தொடர்பு : 10, Palaly Road, Jaffna.
T.P. 0771604823

## வீடு வாடகைக்கு உண்டு

இல. 11/4, பெண்டிக்கோஸ் லேன், கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு :-0242223994

## தவறிவிட்டது

கோண்டாவில் உப்புமடப் பிள்ளையார் கோயிலுக்கும் அம்பட்டன் பாலத்துக்கும் இடையில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலய வீதி, கலட்டி வீதி, முத்தட்டு வீதிகளுக்கிடையில் 23.06.2010 அன்று மூக்குக்கண்ணாடி பேசுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ராகவன் (ரி.வி. திருத்துபவர்) கலட்டி வீதி, கோண்டாவில். தொ.பே. 0773211379

## தவறிவிட்டது

மாசார், பளை என்னும் முகவரி உடைய சந்திரசேகரம் சேதுலன் (911060485v) கரந்தாய், பளை என்னும் முகவரியை உடைய விக்னேஸ்வரன் யோகேஸ்வரி ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகள் அடங்கிய கறுப்பு நிறு பேர்ஸ் ஒன்று கொடிகாமத்துக்கும் பரந்தனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.
0777629078, 0775294181, 0778487935
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## இடம் மாற்றம்

ஆப்தீன் தையலகம் 28.06.2010 இன்றில் இருந்து இல 54, பெரியகடை வீதி உப்புமடம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கும் என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

## இன்று தேர்த்திருவிழா

சாவகச்சேரி, ஜூன் 28
சாவகச்சேரி, சரசாலை, இலந்தைத்திடல் வீரமாகாளி அம்பாள் ஆலய மகோற்சவத்தின் தேர்த் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.
(ஒ-131)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**தில்லைநாதர் பத்மநாதன்**

தோற்றம் 20.02.1944 — மறைவு 08.07.2009

திதி: 28.06.2010

அன்புமொழி பேசி அரவணைத்து எம்மை
பண்புடனே உயர்த்தி பயன்பெறவும் வைத்து
இப் பாரினிலே எம்மைப் பரிதவிக்கவிட்டு - நீங்கள்
பரமசிவன் பாதாரம் சென்று ஓராண்டு ஆனதுவே.

4 ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (99995) குடும்பத்தினர்.

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 03 1944

மறைவு 28 06 1999

**செல்வி பரமேஸ்வரி. செல்லத்துரை**

திதி: பூரணை 28.06.2010

ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாதம்மா எம் மனதில் உம் நினைவு
ஆயிரம் உறவுகள் வந்தாலும்
அதில் எதுதான் உமைப்போல் வரும்?

உங்கள் ஆத்மா சாந்திபெறத் தென் கோவை விரபத்திரரைப் பிரார்த்திக்கின்றோம்.

'நாயகம்'
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

உங்கள் நினைவுடன்,
குடும்பத்தினர்

(99992)

## மரண அறிவித்தல்

### திருமதி மதியாபரணம் நாகேஸ்வரி

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் 9 3/3 Nelson Placeஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி நேற்று (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மதியாபரணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற உருத்திரசிங்கம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் சரத் பஞ்சாட்சரம் (நாதன்), சரத் விஜயானந்தம் (மோகன்), கோமளவதனி(நோனா), சரத் தர்மரெட்ணம் (கண்ணன்) ஆகியோரின் அன்புத் தாயும் துரைசிங்கம், இரத்தினசிங்கம், தர்மகுலசிங்கம் யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகலட்சுமி (வசந்தி),வசுமதி, சசிதரன், ரஜீகா ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுஷா, சதுஷன், கரிஷன், கார்ஜியா, கோபிகா, மிதுன்ராஜ் அபிஷேக், சஜீத், யுகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.06.2010) திங்கட்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச் சாலையில் காலை 9 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் மாலை 4.30 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பூ.சசிதரன் (மருமகன்)
(யாழ்.ராசி சில்க்ஸ், யாழ்.நல்லி சில்க்ஸ் உரிமையாளர்)

T.P: 0112553530
0773895835

(சி/568721)

## நன்றி நவில்கின்றோம்

### கிறிஸ்ரி ஜெறாட்

20.06.2010 அன்று காலமான எமது அன்புச் செல்வன் கிறிஸ்ரி ஜெறாட் இறைபதமடைந்த செய்தி கேட்டு உடன் வந்து எமது துயரில் பங்குபற்றி எமக்கு ஆறுதல் அளித்து இரங்கல் திருப்பலியை நிறைவேற்றிய எமது பங்குத் தந்தைக் கும் லூர்து வடஅருட் சகோதரிகளுக்கும் இருபாலை அன்னை திரேசா சபை அருட்சகோதரிகளுக்கும் எமது அந்தோனியார் ஆலய செயலர், மேய்ப்புப் பணிச் சபையினர், கரவை திரு ஆலயங்களினதும் இளைஞர், யுவதிகள், ஏனைய ஆலய இளைஞர் யுவதிகள் திரு இருதயக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் J.R.S. ஆசிரியர்கள் மற்றும் எமது அயல் கிராமங்களில் இருந்து வருகை தந்து திருப்பலியிலும் நல்லடக்க நிகழ்விலும் பங்கு பற்றிய இந்து மத சகோதர சகோதரிகளுக்கும் வெளிநாட்டில் இருந்து தொலைபேசி கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தோர், துண்டுப்பிரசுரம் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.

P.S.அன்ரன் (தந்தை)
குடும்பத்தினர்.

(சி/568724)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது இடங்களில் புகைத்தல், மது பாவனைத் தடை; யாழ்.மாவட்டத்தில் விரைவில் நடைமுறைக்கு வருகிறது

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்28

யாழ்.மாவட்டத்தில் பொது இடங்களில் புகைத்தல் மற்றும் மது வகைகள், போதைப் பொருள்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன என்று பிராந்திய சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

உலக புகைத்தல் ஒழிப்பு, உலக போதை ஒழிப்பு தினங்களை முன்னிட்டு விசேட விழிப்புணர்வு நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமை உரை நிகழ்த்தும்போது வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் பொது இடங்களில் புகைத்தல், மது போதைப் பொருள் பாவனைகளை தடை செய்வதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இலங்கையில் பொது இடங்களில் புகைத்தல் மற்றும் மது, போதைப் பொருள் பாவிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது அந்த சட்ட மூலத்தை யாழ்.மாவட்டத்தில் இறுக்கமாக நடைமுறைப்படுத்த வெகுவிரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது. இது முதல் நடவடிக்கையாகும்.

21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகைப்பொருள்கள், மதுபானம், போதையுடன் சம்பந்தப்பட்ட பொருள் விற்பது தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவை யாழ்.மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. எனவே இது குறித்து சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இது இரண்டாவது நடவடிக்கையாகும்.

மூன்றாவது நடவடிக்கையாக இளம் சமூகத்தினர் 15 முதல் 20 வயது வரையான பருவத்திலேயே இவ்வாறான தீய பழக்கவழக்கங்களை ஆரம்பிக்கின்றனர். எனவே அந்த வயதுப் பிரிவினர்களுக்கு அவற்றின் பாதக விளைவுகள் குறித்து புரிய வைக்கவேண்டியுள்ளது. இதற்கு அடிமையாவதைத் தடுக்க பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தவுள்ளோம். கல்வித் திணைக்களங்கள் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு தெளிவான விளக்கம் வழங்கவுள்ளோம்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் புகைத்தல், மது போதைப்பொருள்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டை மாவட்ட புகையிலைக் கட்டுப்பாட்டுக் குழுவினரால் ஒருங்கிணைத்து அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளோம் - என்றார்.

இந்த நிகழ்வில் அரச அதிபர் கே. கணேஷ், மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் ந.சோதிநாதன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி.செல்வரத்தினம், யாழ்.போதனா வைத்தியசாலை உளநல வைத்திய நிபுணர் சிவயோகன் உள்ளிட்டோர் விருந்தினர்களாக கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். (ஒ-14)

# வல்லைச் சந்தி விபத்தில் நேற்று மாலை ஒருவர் பலி

யாழ்ப்பாணம், ஜூன்28

வல்லைச் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - டிராக்டர் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்

பாணம் நோக்கி மணல் ஏற்றிவந்த டிராக்டரும் அச்சுவேலி வீதி வழியாகப் பருத்தித்துறை நோக்கிச்சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் படுகாயமடைந்தவரை இராணுவத்தினர் சிகிச்சைக்காக அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எனினும் சிகிச்சை பயன் அளிக்காத நிலையில் அங்கு அவர் மரணமானார். அவரது சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் அச்சுவேலி பிரதேச வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணமானவர் சாரமும் 'சேர்ட்டும் அணிந்திருந்தார் என்றும் சுமார் 60 வயது மதிக்கத்தக்கவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி-16-11)

# புலம்பெயர் தமிழர்- கோத்தபாய மற்றும் அமைச்சர்களுடன் சந்திப்பு

## கே.பி. ஏற்பாடு செய்திருந்தாராம்

கொழும்பு, ஜூன்28

புலிகளின் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் குமரன் பத்மநாதன் என்ற கே.பி., நாட்டின் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கும் புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கே.பி. இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார் என இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து நாட்டின் யுத்தத்துக்குப் பின்னரான நிலை குறித்து ஆராய்ந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஏனைய சிரேஷ்ட அமைச்சர்களையும் சந்தித்து யுத்தத்தின் பின்னரான புனரமைப்பு குறித்தும் ஆராய்ந்தனர்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸையும் அவர்கள் சந்தித்தனர்.

புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கே.பி. வவுனியா மற்றும் வடக்கிலுள்ள பிரதேசங்களுக்குச் சென்றாரா? என பிரிகேடியர் சமரசிங்கவிடம் கேட்டபோது, வடக்கு விஜயம் குறித்துத் தம்மால் கருத்துக்கூற முடியாது என்றார். இருந்தும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் வடக்குக்கு விஜயம் செய்தனர். கே.பி. குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்றும் பிரிகேடியர் தெரிவித்தார். (அ-சி)

# பயங்கரவாதம் மற்றும் கடத்தலுக்கு எதிராக சார்க் மாநாட்டில் தீர்மானம்

கொழும்பு, ஜூன்28

பயங்கரவாதம், கடத்தல் உள்ளிட்ட பல விடயங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சார்க் நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இந்த மாநாடு நடைபெற்று வருகிறது.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கலந்துகொண்ட இந்த மாநாட்டில் பிராந்தியங்களுக்கு இடையில் பொலிஸ் பாதுகாப்பைப் பலப்படுத்துதல் மற்றும் பயங்கரவாதத்தை ஒழித்தல் போன்ற விடயங்கள் விரிவாகக் கலந்தாலோசிக்கப்பட்டன.

பயங்கரவாதப் பிரச்சினையால் பிராந்தியங்களுக்கு இடையிலான ஒற்றுமையிலும், பொருளாதார அபிவிருத்தியிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று இந்தியாவின் உள்துறை அமைச்சர் பா. சிதம்பரம் இந்த மாநாட்டில் தெரிவித்தார். (அ-சி)

# இந்திய மத்திய பிரதேச முதலமைச்சர் ஜனாதிபதி மஹிந்தவுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன்28

இந்தியாவில் மத்திய பிரதேச மாநிலத்தின் முதலமைச்சர் சிவராஜ்சிங் சௌஹான் நேற்றுக்காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

மஹிந்த தேரர் பிறந்த சாருகி பிரதேசம் தமது மாநிலத்தை உள்ளடக்கி இருப்பதால் மஹிந்ததேரர் இலங்கைக்கு விஜயம் செய்த பொசன் தினத்தன்று தானும் இலங்கைக்கு விஜயம் செய்வது தனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக சிவராஜ்சிங் சௌஹான் ஜனாதிபதியிடம் தெரிவித்தார் என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற பிரதேசங்களுக்கு விஜயம் செய்யக் கூடியதாக இருந்தது தமக்கு மகிழ்ச்சி அளித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் உடன் இருந்தனர். (ஒ-சி)

# குற்றப்புலனாய்வு அதிகாரி முந்தல் பொலிஸாரால் கைது!

## சடலத்தைக் கடலில் வீசி எறிந்தாராம்

கொழும்பு, ஜூன் 28

கொலை செய்யப்பட்ட ஒருவரின் சடலத்தை புத்தளம் முந்தல் பிரதேச கடலில் எறிந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பிரதம அதிகாரியும் வேறு ஒரு நபரும் முந்தல் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாகக் கூறப்படுபவை வருமாறு:-

டபிள் கெப் வாகனத்தில் இருவர் சடலம் ஒன்றைக் கடலுக்குள் எறிந்துவிட்டுச் செல்வதாகப் பொலிஸ் அவசர இலக்கத்துக்கு அவசர அழைப்பு ஒன்று கிடைத்துள்ளது. இதையடுத்து முந்தல் பொலிஸார் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு டபிள்கெப் வாகனத்தை விரட்டிச் சென்று சந்தேக நபர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்தனர்.

கைது செய்யப்பட்டவர் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரியான சந்தன டி சில்வா எனத் தெரியவருகிறது. மற்றைய நபர் வெள்ளவத்தையைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர் 40 வயது மதிக்கத்தக்க நபர் எனவும் இவர் கழுத்து நெரிக்கப்பட்டே கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஒ-சி)

# ஐ.தே.க. மறுசீரமைப்புக் குழுவின் அறிக்கை வியாழனன்று ரணிலிடம்

கொழும்பு, ஜூன் 28

ஐக்கிய தேசியக் கட்சி மறுசீரமைப்புக் குழுவின் அறிக்கை எதிர்வரும் வியாழக் கிழமை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படும் என குழுவின் தலைவர் ஜோஸப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

மறுசீரமைப்புக் குழுவிடம் கருத்துகளையும், ஆலோசனைகளையும் தெரிவிக்க விரும்பும் கட்சியின் உறுப்பினர்கள் இன்று கட்சியின் தலைமையகமான சிறி கொத்தவுக்கு நேரடியாக வந்து தெரிவிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரின் ஆலோசனைகளை கட்சி ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ளது. (ஒ-சி)

# தனது விடுதலை குறித்து அரசிடம் பேச தமிழறிஞர்கள் மூலம் நளினி கோரிக்கை

வேலூர், ஜூன்28

தனது விடுதலை பற்றி தமிழக அரசிடம் பேச தமிழறிஞர்களுக்கு நளினி கோரிக்கை விடுத்துள்ளார் என அவரது தரப்பு சட்டத்தரணி பா.புகழேந்தி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

பல்வேறு உலகத் தமிழறிஞர்கள் தற்போது தமிழகம் வந்துள்ளனர். நளினியின் விடுதலை பற்றி தமிழக அரசிடம் பேசுமாறு இந்த தமிழறிஞர்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளோம்.

நண்பர்கள் மூலமாக சில தமிழறிஞர்களிடம் நளினி இக்கோரிக்கையை விடுத்துள்ளார். சிலருக்கு சட்டத்தரணிகள் மூலமாக தகவல் அனுப்பியுள்ளார்.

நளினி ஆயுள் தண்டனை பெற்று கடந்த 13 ஆம் திகதியுடன் 19 ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ளன. ஓய்வு பெற்ற நீதிபதிகள், மனித உரிமை ஆர்வலர்கள், எழுத்தாளர்களைச் சந்தித்து நளினியின் வழக்குத் தொடர்பாக எடுத்துக்கூறி விடுதலைக்காகக் குரல் கொடுக்க வேண்டுமென வலியுறுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# ஈழ அகதிகளின் நிலையைக் கண்டறிய இலங்கைக்கு சர்வகட்சி எம்.பிக்கள் குழு

## சீத்தாராம் யெச்சூரி வலியுறுத்து

மதுரை, ஜூன் 28

இலங்கையில் முகாம்களிலிருக்கும் ஈழத் தமிழர்களின் நிலைகளைத் தெரிந்து கொள்ள இந்தியாவில் இருந்து அனைத்துக் கட்சி எம்.பிக்கள் குழுவை அனுப்ப வேண்டும் - என்று மார்க்சிஸ்ட் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சீத்தாராம் யெச்சூரி தெரிவித்தார்.

'இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு' என்னும் தலைப்பில் நடந்த கருத்தரங்கில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

. இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழகத்தில் லட்சக்கணக்கில் அகதிகளாக உள்ளனர். அவர்களுக்கு எந்த வசதியும், உதவியும் செய்யவில்லை. அங்கு நடக்கும் நிலையை கண்டறிய இந்தியாவிலிருந்து அனைத்து கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் குழுவை அனுப்ப வேண்டும் என பிரதமரை வலியுறுத்துகிறோம். இலங்கை ஆட்சியாளர்கள் கூட்டாட்சியை என்றும் ஒத்துக் கொள்ளவில்லை. கூட்டாட்சி முறைதான் சரியாக இருக்கும். அதைவிட்டுவிட்டால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முன்னதாக பெற்றோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்தது. அதில் எம்.எல்.ஏ. நன்மாறன், மாவட்டச் செயலாளர் ராமகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர் ஜோதிராம் ஆகியோர் பங்கேற்றனர்.

இதேபோல், பெற்றோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து திருப்பரங்குன்றத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மீதான விசாரணைகளைத் துரிதப் படுத்துமாறும் தன்னை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றும் நடவடிக் கையை கைவிடுமாறும் கோரி உண்ணா விரதம் இருந்து வந்த இ.ஆனந்தராசா என்ற அரசியல் கைதி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர் அ.விநாயகமூர்த்தி வழங்கிய உறுதி மொழியை அடுத்து தனது உண்ணா விரதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார். குளிர்பானம் கொடுத்து உண்ணாவிரதத்தை விநாயகமூர்த்தி எம்.பி. முடித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் ஸ்ரீதரன் எம்.பியும் காணப்படுகிறார்.

## காங்கேசன்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மி ரல் நிர்மல் வர்மா ஐந்துநாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற் றுக் காலை இலங்கை வந்து சேர்ந்தார்.

இந்த விஜயத்தின்போது அவர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரி.எம்.ஜயரத்தின, பாதுகாப்புச் செயலாளர் கேத்தபாய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இலங்கைக் கடற் படைத் தளபதி வைஸ் அட்மிரல் திஸார சமரசிங்க ஆகியோரைச் சந்தித்து கலந் துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்படு கிறது.

அத்துடன் திருகோணமலையில் பயிற் சியை முடித்து வெளியேறும் கடற்படை யினரின் அணிவகுப்பிலும் அட்மிரல் நிர்மல் வர்மா கலந்துகொள்ளவுள்ளார்.

ஏறக்குறைய 6 வருடங்களுக்குப் பின்னர் இலங்கைக்கு வருகின்ற இந்திய இராணு வத்தின் அதியுயர் அதிகாரி நிர்மல் வர்மா என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இந்தியக் கடற்படைத் தளபதி இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சமயத்தில் இந்தியாவின் ஐ.என்.எஸ். டெல்கி என்ற மிகப்பெரிய கப்பலும் நல் லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ளது. இதில் 410 பேர் பயணம் செய்யலாம்.

இலங்கையில் 1987 முதல் 1990 வரை உயிர்த்தியா கம் செய்த இந்திய அமைதிப் படை வீரர்களின் நினை வாக இலங்கைக் கடற்படையினரால் கொழும்பில் நிறுவ பட்ட நினைவுத் தூபிக்கும் சென்று அவர் மரியாதை செலுத்துவார். (அ)

## ஜி.எஸ்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த 15 நிபந்தனைகள் குறித்து இலங்கை கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இலங்கை அதனை நிராகரித்து விட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையில் கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை முற்றாக நிராகரிப்பது என முடிவு எடுக்கப்பட்டது. இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனை களை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித் திருந்தார்.

இதேவேளை, அமைச்சரவை முடிவு களை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளை இலங்கை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகை மூலம் இலங்கை தயாரித்த ஆடைகள் உட்பட 3,400 வகையான பொருள்கள் ஏற்றுமதி வரி இன்றி ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்று மதி செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத் தக்கது. அதனால் இலங்கைப் பொருள்களை ஐரோப்பிய நாடுகளில் குறைந்த விலைக்கு விற்பனை செய்யக்கூடியதாக இருந்தது.

இதேவேளை, 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகை இழப் புக் காரணமாக ஆடைத் தொழிற் சாலைகளில் தொழில்புரியும் இரண்டு லட்சத்துக் கும் அதிகமானவர் கள் தொழிலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று சுதந்திர வர்த் தக வலய தொழிற் சங்கங்கள் தெரி வித்துள்ளன.(அ-சி)

## யாழ்ப்பாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்களுள் இரண்டு சிறுவர்க ளும் அடங்குகின்றனர் என்றும் தெரிய வருகிறது.

வானில் பயணித்தவர்களே உயிரிழந் துள்ளனர் என்றும் காயமடைந்தவர்கள் குரு நாகல்,கண்டி மற்றும் கொழும்பு வைத் தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ள னர் என்றும் பொலிஸார் கூறினர்.

லொறி வேகக்கட்டுப்பாட்டை மீறிய தாலேயே இந்த விபத்து இடம்பெற்றி ருக்க லாம் என்று தெரிவித்துள்ள பொலிஸார், லொறிச் சாரதியைக் கைதுசெய்துள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணையை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-ஒ-01)

## ஆஸியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமாக அதிகம் பேச வேண்டி உள்ளது என்று பிரதமர் ஜூலியா ஆஸ்திரே லிய ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

புகலிடம் கோரக்கூடிய தகுதியுடன் இருப்பவர்கள் தொடர்பில் ஆஸ்திரேலியா வுக்குப் பொறுப்புகள் இருக்கின்றன. அந் தப் பொறுப்புகளை மதித்து நடக்கவேண் டிய தேவை எமக்கு உண்டு என அவர் கூறினார். அதேவேளை, சிறுவர்கள் மீது அக்கறை செலுத்தும் எமது பண்பையும் விட்டுக்கொடுக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

''பெற்றோர் எப்படிப்பட்ட முடிவுகளை எடுத்தாலும் அவர்களின் பிள்ளைகளை நாம் சிக்கலில் தள்ளிவிட முடியாது. சிறுவர்களாகிய அவர்கள் தீர்மானங்கள் எவற்றையும் எடுப்பதில்லை. அந்தச் சிறு வர்கள் எமது கரிசனையைப் பெறத் தகுதியானவர்கள் எனப் பிரதமர் ஜூலியா மேலும் கூறினார்.

இதேவேளை -

இலங்கையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வடபகுதியில் இருந்து புகலிடம் கோரி வரும் மக்களை அகதி களாகவே கருதி அவர்களுக்குத் தஞ்சம் அளிக்கவேண்டும் என்ற சலுகை ஜூலை மாதம் எட்டாம் திகதி ஐக்கிய நாடுகள் சபை யினால் அகதிகள் குறித்த பொது விதி களில் இருந்து நீக்கப்படும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

அதிகளுக்கான ஐ.நா.தூதுவர் உலகளா வியரீதியில் ஒரு நாட்டுப் பிரஜை வேறு நாட்டில் புகலிடம் கோரும்போது கடைப் பிடிக்கவேண்டிய புதுக்கிய விதிகளை ஜூலை எட்டாம் திகதியே வெளியிட உள்ளார் என்று நம்பப்படுகிறது.

ஆஸ்திரேலியாவுக்கு இலங்கை மற் றும் ஆப்கானிஸ்தான் நாடுகளில் இருந்து அகதி அந்தஸ்து கோரி வருவோரின் எண் ணிக்கை குறைந்துள்ளதாகவும் -

அவர்களின் விண்ணப்பங்களை ஜூலை 8ஆம் திகதி வரை மூன்று மாதங் களுக்குப் பரிசீலிப்பதில்லை என்ற முன் னாள் பிரதமர் கெவின் ரூட் மேற்கொண்ட முடிவே இதற்குக் காரணம் என்றும் அரச வட்டாரங்கள் கூறின.

(அ-சி)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் ஏற்கனவே யுத்த மீறல்கள் நடைபெற்றன என எழுந்த குற்றச்சாட்டு கள் தொடர்பில் விசாரணை நடத்துவதாக இலங்கை அரசு உறுதியளித்திருந்தது.

இதன்படி அண்மையில் ஜனாதிபதி யால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவும், ஐ.நாவின் நிபுணர்கள் குழு வுடன் இணைந்து இதுதொடர்பில் செயற் பட வேண் டும் என்றும் பிரான்ஸ் கோரி யுள்ளது. (சி)

## ஈழத்தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் கருணாநிதி தீர்மானங்களை முன்வைத்துப் பேசியவை வருமாறு -

இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ந்து துன்ப, துயரங்களுக்கு ஆளாக்கப்படுவ தும், அவர்கள் தங்கள் சொந்த இடங்க ளுக்குச் செல்ல இயலாமல், இன்னமும் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

முகாம்களிலிருந்து சொந்த இடங்க ளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தமிழ் மக் களுக்கு நல்வாழ்வும், பாதுகாப்பும் உறுதி யளிக்கப்பட்டு முழுமையான அளவுக்கு மறு குடியேற்றம் செய்யப்படவில்லை.

இலங்கைத் தமிழர்கள் தமது மொழி - இன உரிமையை நிலை நாட்டிக் கொள்வ தற்கு நீண்ட நெடுங்காலமாகக் கோரி வரும் அரசியல் தீர்வு காணப்படாதமை யும், அவர்களுக்கு அவ்வப்போது அளிக்கப் படும் உறுதிமொழிகள் முறையாக நிறை வேற்றப்படாதமையும் கோவையில் நடை பெறும் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் திரண்டுள்ள லட்சோப லட்சம் உலகத் தமிழர்களுக்கு வேதனையைத் தருகிறது.

எனவே, இலங்கைத் தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும், உடன டியாகத் தீர்வு காண்பதற்கேற்ற முனைப் பான முயற்சிகளை மேற்கொள்ள இலங்கை அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டு மென்று இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மத்தியில் தமிழ் ஆட்சி மொழியாக்கப் பட வேண்டுமென்பது, தமிழக மக்களின் நீண்ட காலக்கோரிக்கையாகும். இந்தியா வின் அனைத்து மாநில மொழிகளையும், மத்திய ஆட்சி மொழிகளாக ஆக்குவதில் தாமதம்' ஏற்படுமேயானால், முதற்கட்ட மாக செம்மொழியாம் எம் தமிழ் மொழியை மத்திய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டு மென்று, மத்திய அரசை தமிழ்ச் செம்மொழி மாநாடு வலியுறுத்துகிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் உட னடியாகத் தமிழை பயன்பாட்டு மொழி யாக அங்கீகரிக்க வேண்டுமென்று இந்த மாநாடு மத்திய அரசை வலியுறுத் திக் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், ஆய்வுக் கும் தேவையான அளவு மானியத் தொகை யை வழங்க மத்திய முன்வர வேண்டும்.

மத்திய அரசு உருவாக்க முடிவுசெய் துள்ள 'இந்திய தேசியக் கல்வெட்டியல் நிறு வனத்தை, தமிழகத்தில் அமைக்க வேண்டு மென பிரதமருக்கு நான் கடிதத்தில் எழுதிய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

- இப்படி கருணாநிதி பேசினார். (சி)

## மரண அறிவித்தல்கள்

### கைலாயர் சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற உப அதிபர், கணேசா வித்தியாசாலை, ஊரெழு)



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாக வும், புன்னாலைக்கட்டுவன் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயர் சண்முகநாதன் (ஓய்வுபெற்ற உப அதிபர், கணேசா வித்தியாசாலை, ஊரெழு) நேற்று (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், ஜெனந்தனின் (ஜெயலக்சுமி புடைவைக்கடை உரிமையாளர், யாழ்ப் பாணம்) அன்புத் தந்தையும், கமலவேணியின் சகோதரனும் நாகரத்தினம், நடராசா, சவுந்தரம், பூமலர், காலஞ்சென்ற பர மேஸ்வரி மற்றும் ஜெயராணி, வேதநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கந்தசாமி, சிவசுப்பிரமணியம் மற் றும் இராசரத்தினம், கமலராசா (எரிபொருள் விற்பனை நிலை யம், புன்னாலைக் கட்டுவன் வடக்கு) ஆகியோரின் சகலனும், வனஜா, நந்தினி, கலையரசி, சிவனேசன், வரலக்சுமி, சுபாசினி, ஜெயசோதி, சுகந்தினி, ஜெயதாசன், ஜனார்த்தனன், சாமினி, ஜெயகௌரி, சோபிதா ஆகியோரின் அன்புச் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28.06.2010) திங்கட் கிழமை பி.ப. 2 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் குப்பி ளான் காடாகரம்பை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெனந்தன் (மகன்)
(உரிமையாளர், ஜெயலக்சுமி புடைவையகம்.)

### நாகமணி ஜெகநாதன் (சேனாதி)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட நாகமணி ஜெகநாதன் (சேனாதி, ஆச்சாரியார்) நேற்று (27.06.2010) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் நாகமணி-சிவக்கொழுந்து தம்ப தியரின் அன்பு மகனும் ஜெயந்தி, ஜெயதீபன் (ஜெயந்தன்), கலாவதி, ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2010) பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீத்தாகுளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

தகவல்: பிள்ளைகள்

## விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

128 பில்லியன் ரூபா பெறுமதியான உதவி களை வழங்குவதற்கு இந்தியா முன் வந்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு மேற்கொண்டி ருந்த விஜயத்தின்போது இந்த உறுதி மொழி வழங்கப்பட்டிருந்தது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு 50,000 வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தல், ரயில் பாதைகளைச் சீரமைத்தல், மின்திட்டங் களை அபிவிருத்தி செய்தல், பாதைகளைப் புனரமைத்தல், தொழிற் பயிற்சி நிலையங் களை உருவாக்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்காக இந்தியா நிதி உதவிகளை வழங்கவுள்ளது.

இந்தியாவால் வழங்கப்படும் உதவிக ளில் பெரும்பகுதி அதாவது 91 பில்லி யன் ரூபா கடன் அடிப்படையில் வழங்கப் படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அபிவிருத்தித் திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தல் மற்றும் துரிதகதியில் பூர்த்தி செய்தல் போன்ற வற்றை வலியுறுத்தும் நோக்கில் அமைச் சர் பஸில் ராஜபக்ஷ இந்தியாவிற்கு விஜ யம் செய்யவுள்ளார். (சி)


வாகனம் தேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் நாளாந்தப் பொருள்கள் விநியோகத் தேவைக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் அலுமினிய பொடியுடன் கூடிய வாக னம் தேவை.

தொடர்பு: 0773464600

LAVA HOSPITAL

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333

www.lavahospitals.com/blog

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup
அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 20.06.2010 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மதுரை காமராஜர் பல் கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா வில் இதழியல் மற்றும் தகவல் தொடர்பியல் துறையில்

M.A. பட்டம் பெற்ற

ஜெகசோதி -கோகுலவாசன்

அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பட்டங்கள் பெற்று வாழ்வில் உயர்ந் திட வாழ்த்துகின்றோம்.

சங்கரியாவளவு சிவலிங்கப்புளியடி.
718, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Lion. P.K.B.பாலஸங்கர்
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org